M. N. ST.

உ

ஓம்.

மரகத பாலன்.

ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

தஞ்சாவூர், பெண்கள் கிறிஸ்தவ உயர்தரக்
கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்
எல். ராமகிருஷ்ணய்யர்
எழுதியது.

தூத்துக்குடி,
அய்யனார் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்தர் செய்தது. 1934. விலை அணா 8.

கிடைக்குமிடம்:-

அய்யனார் பிரஸ், தூத்துக்குடி.

முகவுரை.

அறிவில் சிறியவனாகிய நான், முடவன் கடல் தாண்ட நினைந்ததுபோல, ஆண்பெண் இருபாலாருக்கும் பயன்படத் தக்க நன்னெறிகளைப்பரப்பி ஓர்இனிய தமிழ்(நாடகம்)நாவல் எழுதி, ஸமூகநன்மையை நாடவேணுமென்று துணிந்தனன். என்றாலும், ஆசையே காரணமாகக்கொண்ட எனது எண்ணத்தைத் தமிழ்மணங் குன்றிய இக்காலத்தில் யாவரும் படித்து களிப்பெய்தி பயனடைய "மரகதபாலன்" என்னும் இச்சிறு கற்பனைக்கதையை எழுதி முடித்தனன். இதில், அறிஞர்கள் கவனத்தைக் கவரக்கூடிய சில பலவிஷயங்கள் தோன்றுமாயினும், அவைகளெல்லாம் கதைச்சிறப்பு பற்றி, கற்பனையாக எடுத்துக்கூறியதன்றி எவரையாவது எவ்வகுப்பினரையாவது இழித்தேனும் துதித்தேனுங் கூறியதன்று. மேலும், இதுவே எனது சிற்றறிவில் முதன்முதலெட்டிய நாவலாயினமையால் இதன்கண் குற்றமிராமற் போகா. எனினும் அறிஞர்கள் பெரிதும் க்ஷமிக்க வேண்டுமென்பதே யெனது பிரார்த்தனை.

ஆசிரியன்.

மரகத பாலன்.

முதல் அத்தியாயம்.

தோட்டவிருந்தில் வேட்டைமான்.

“நாயனா, நாம் விருந்திற்குச் சரியாக ஆறரை மணிக்குப் புறப்படவேண்டுமென்றீர்களே! மணி 6 அடித்து 20 நிமிஷங்கள் ஆகின்றன. டிரைவர் பக்கிரிசாமி இன்னும் வரவில்லையே” என்றாள் மரகதவல்லி.

நரசிம்மலு நாயுடு. தடிப்பயல் எங்கேயாவது காகிதம் விளையாடிக்கொண்டிருப்பான். கொஞ்சமாவது மனதில் பயம் கிடையாது. அவனை இன்றைய தினத்தோடு வேலையிலிருந்து நீக்கவேண்டியதுதான். மரகதம், நீ மோட்டாரில் ஏறி உட்கார்ந்துகொள். நான் ஓட்டுகிறேன். எனக்கும் கொஞ்சம் பழக்கமுண்டு.

மரகதம் தன்பெயருக்கேற்ப மரகதப்பட்டாடையுடுத்தி காதில் அணிந்திருந்த வைரத்தோடு கண்ணின்கருவிழிகளால் நீலமணித்தோடாகமாறவும் தன் சீறடிபெயர்த்துத் தோகை மயில்கூண்டிட் ஏறுவதுபோல் புகைரதத்தில் ஏறி உட்கார்ந்தாள். அவள் தன் கைக்குட்டையால் முகத்தைத் துடைக்

கும்பொழுது அதினின்றும் கிளம்பிய வாசனை சாலையில் சஞ்சரித்த மனிதர்களின் நாசித்துவாரங்களுக்கு நல்விருந் தளித்தது. நரசிம்மலு நாயுடு தன்னை வெண்பட்டு உடுப்புக் களால் நன்றாய் அலங்கரித்துக்கொண்டு மோட்டாரின் முன் பக்கத்தில் ஏறி உட்கார்ந்து அதைச் செலுத்துவதற்காகச் சக்கரத்தைத் திருப்பினார். அந்தசமயம் டிரைவர் பக்கிரி சாமியும் தலைதெறிக்க ஓடிவந்து எஜமான் முன்பு நின்றான். நாயுடு டிரைவரைக் கண்டதும், இரணியாசுரனைக் கொல் வதற்கு மகாவிஷ்ணு எடுத்த நரசிங்க வடிவத்தைப்போலாய் விட்டார். இவருக்கு ரௌத்ராகாரமாய்க் கோபம் பொங்கி விழிந்தது. அதை ஒருபுறம் அடக்கிக்கொண்டு தான்படித்த ஆங்கில பாஷையிலிருந்து சில பதங்களைச் சரமாரியாகப் பொழிந்துவிட்டு மோட்டாரை வேகமாகச் செலுத்திக் கொண்டு போனார்.

கவர்னர் பங்களாவில் தோட்டவிருந்து ஏழுமணிக்கு ஆரம்பிக்கப்படுவதால் அதற்குப் பிந்தக்கூடாதென்று நாயுடு அவர்கள் மனோவேகத்தினும் கடிதாக மோட்டாரைச்செலுத் திக்கொண்டுபோகையில் ஒரு நெருக்கமான சந்தின்வழி யாகப் போகவேண்டி இருந்தது. இரண்டு குதிரைகள் பூட்டிய சாரட்டு வண்டி ஒன்று தனக்கு எதிர் பக்கமாய் வந்துகொண்டிருப்பதை நாயுடு கவனித்தார். மோட்டாரும் கோச்சும் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளாமல் இருக்க வேணுமென்று எண்ணி நாயுடு தன் மோட்டாரைக் கொஞ் சம் விலக்கினார். இடதுபுறம் ஒரு பெரிய கிடங்கு இருந் ததை டாக்டர் நாயுடு கவனிக்கவில்லை. அக்கிடங்கு சாக் கடைத்தண்ணீர் ஓடுவதற்கான ஒரு வாரியாகவிருந்தது. இவர் மோட்டாரை இடது பக்கமாக விலக்கியதும் அது

கிடங்காயிருந்த வாரியில் விழுந்தது. சாலையிலிருந்து வாரி 5 அல்லது 6 அடி பள்ளமாக இருந்தபடியால் மோட்டார் விழுந்த வேகத்தில் சதவு தானுகவே திறப்புண்டு உள்ளே இருந்த பெண்மான் கீழே விழும் சமயம் ஒரு ஆடவன் அவளைத் தன் கைகளால் தாங்கினுன்.

ஆதரவற்ற பூங்கொடிக்கு ஒரு கொழுகொம்பு கிடைத்தாற்போல, மரகதக்கொடியும் அவ்வாலிபனின் குன்றனைய தோள்களில் சாய்ந்தாள். நரசிம்மலு நாயுடு தாஞெருபக்கம் தன் தொப்பி ஒருபக்கமாகக் கீழேவிழுந்து மூர்ச்சை அடைந்தார். தெய்வச்செயலாய் அவருக்கு உடம்பில் காயம் ஒன்றுமில்லை. தன் எஜமானுக்கு மோட்டார் ஓட்டும் வித்தை சரியாகத் தெரியாதென்று பக்கிரிசாமி அறிந்தவனுதலால், என்ன விபத்து நேரிடுமோவென்று அவன் மோட்டாரின் பின்னே நாயுடுவுக்குத் தெரியாமல் வந்துகொண்டிருந்தான். இப்பொழுது ஏற்பட்ட இந்த சம்பவத்தைப் பார்த்ததும் ஓடோடியும்போய் வாரியினண்டை விழுந்துகிடக்கும் தன் எஜமானை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தினுன். மோட்டார் வாரியின் கிடங்கில் விழுந்ததைப்பார்த்துத் தன் பிராணனுக்கு என்ன ஆபத்து வருமோ என்று ஏங்கி பிரக்ஞையற்றிருந்த மரகதவல்லி, கொஞ்சம் உணர்வு வந்ததும் தான் ஒரு அன்னியனுடைய தோளில் சாய்ந்திருப்பதை எண்ணி நாணத்துடன் விலகிக்கொண்டாள். நாயுடு மூர்ச்சை தெளிந்தவுடன் தனக்குமுன்பு டிரைவர் பக்கிரிசாமி நிற்பதைப் பார்த்துத் தனக்குள் "இவன் எங்கிருந்து சமயசஞ்சீவியாய் முளைத்தான்" என்றெண்ணி ஆச்சரியமடைந்து, கோபத்தினுல் அவனிடம் பேசாமல், தன் அருமைக் குமாரத்திக்கு ஏதேனும் பலத்த அடியாவது காயமாவது பட்டிருக்குமோ

என்று உள்ளம்பதைத்து மரகதவல்லியின் பக்கத்தில்வந்தார். அவளருகே அழகிற்சிறந்த ஒரு வாலிபன் நிற்பதைக்கண்டு பிரமித்தார். மரகதவல்லி குயிலையும் பழித்த தன் இனிய குரலால், நாயனா! "நான் இன்று இந்த உத்தமபுருஷனால் உயிர்தப்பினேன்" என மொழிந்தாள். நரசிம்மலு நாயுடு இவ்வார்த்தைகளைக் கேட்டதும் முகம்மலர்ந்து, அவ்வாலிப னைப்பார்த்து, "ஐயா! என் ஏகபுத்திரியின் உயிரை எமன் வாயினின்றும் மீட்டிக்கொடுத்து எனக்கு புத்துயிர் அளித்த உம்முடைய அருங்குணத்துக்கு நான் மனப்பூர்வமாய் நன்றி கூறுகிறேன் என் வந்தனங்களை ஏற்றுக்கொள்ளும்" என் றார், அதற்கு அந்த வாலிபன் "ஸார், தாங்கள் புகழும் படியான காரியம் ஒன்றும் நான் செய்துவிடவில்லை. மானி டத்தன்மைவாய்ந்த எவனும் இந்நிலமையில் இந்த உதவி செய்திருப்பான்" என்று வினயமாக மறுமொழி தந்தான். மிஸ்டர் நாயுடு வாலிபனுடைய வார்த்தைகளால் உள்ளம் பூரித்து அவன் கையைப்பிடித்துக் குலுக்கி விடைபெற்றுக் கொண்டார். இந்த சம்பாஷணை நடைபெற்றுக்கொண் டிருந்தபொழுது டிரைவர் பக்கிரிசாமி ரஸ்தாவில் போய்க் கொண்டிருந்த மனிதரில் இரண்டுபேரின் உதவியால் மோட் டாரைத் தூக்கிச் சரிப்படுத்தி அதை வாரியிலிருந்து ரஸ்தா வுக்கு ஏற்றி அதில் உட்கார்ந்துகொண்டு அதை ஓட்டுவதற் காகத் தன் எஜமான் வருகைக்குக் காத்திருந்தான்.

டாக்டர் நரசிம்மலு நாயுடு தன் குமாரத்தியைக் கூட்டிக் கொண்டு வண்டிக்குள் ஏறினார். ஒரு நிமிஷத்துக்குள் புகை ரதமும் கவர்னர் பங்களாவின் தோட்டத்திற்குள் புகுந்தது. மணியும் ஏழரையாயிற்று. "அய்யர் வருகிறவரைக்கும்

அமாவாசை காத்திருக்குமா'' விருந்தினர் நாயுடு அவர்களின் வருகைக்காகக் காத்திருக்கமுடியாதல்லவா ?

அழகாய் ஜோடிக்கப்பட்ட வட்டமேஜையைச் சுற்றி ஐரோப்பிய கனவான்களும் இந்தியரும் ஆடவர், பெண்டிர் என்ற பேதமின்றி கலந்து நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். டாக்டர் நாயுடுதான் தாமதமாய்ப் போனதைப்பற்றி மனம் வருந்தினர். கவர்னர் துரையவர்கள் தன் இருக்கையினின்றும் எழுந்து நாயுடுவையும் அவர் பெண்ணையும் அழைத்துக்கொண்டுவந்து காலியாகவிருந்த இரண்டு ஆசனங்களில் அமரச்செய்தார். தோட்டத்தைச்சுற்றி இருந்த பலவித புஷ்பச்செடிகொடிகள் தங்கள் இயற்கை மணத்தை பரப்பின. சோலையின் நடுவில் இருந்த தடாகத்திலுள்ள தாமரைமலர்கள், விருந்துக்கு வந்திருந்த மாதர்களின் முக வனப்பைக் கண்டு நாணி இதழ்குவிந்தன. முல்லை அரும்புகள் அப்பெண்களின் புன்முறுவலுக்கஞ்சி பூக்காதொழிந்தன. விருந்து முடிந்தவுடன் வாணவேடிக்கை தொடங்கிற்று. அங்கிருந்த கனவான்களும் சீமாட்டிகளும் தத்தம் இருக்கையினின்றும் எழுந்து தோட்டத்தைச்சுற்றி உலாவலாயினர்.

தோட்ட விருந்திற்கு வந்திருந்த கனவான்களில் அழகிரிசாமிநாயுடு என்பவர் ஒருவர். இவர் ஒரு பெரிய ஜமீன்தார். டாக்டர் நரசிம்மலுநாயுடுவின் மைத்துனர். மரகதவல்லியின் மாமன். செங்கற்பட்டு ஜில்லாவைச்சேர்ந்த அரியலூர் எஸ்டேட் முழுவதும் இவருக்குச் சொந்தம். சென்னையிலும் இவருக்கு ஒரு மாளிகையுண்டு. அழகிரிசாமிநாயுடுவுக்கு ஆங்கிலபாஷையில் அவ்வளவு பயிற்சி இல்லை. இவர் சிறுவயதில் இங்கிலீஷ் படித்த அற்புதம்

எப்படி என்றால் இவர் தந்தை இவருக்கு இங்கிலீஷ் எழுத்துக்கள் 26-க்கும் இருபத்தாறு உபாத்தியாயர்களை நியமிக்க வேண்டியதாயிற்று. இத்தன்மைவாய்ந்த ஜமீன்தார் சென்னை சட்டசபையில் ஒரு அங்கத்தினராகவுமிருந்தார். இவருக்கு ஏற்பட்ட போட்டிகளை எல்லாம் தன் பணத்தினால் அடக்கி இந்தப்பதவியைப் பெற்றார். இவர் அடிக்கடி சென்னைக்கு வந்து தன் மாளிகையில் தங்குவது வழக்கம்.

விருந்து முடிந்ததும் மரகதவல்லியும் அவள் தந்தையும் தோட்டத்தின் ஒருபுறம் சுற்றிவரும்பொழுது நரசிம்மலு நாயுடு தன் மைத்துனன் அழகிரிசாமிநாயுடுவைச் சந்திக்க நேரிட்டது. மரகதவல்லியின் உடல்மட்டும் சோலையில் உலாவிக்கொண்டிருந்தது. அவள் மனம் தன் உயிரைத் தப்புவித்த புண்ணியபுருஷனைக் கண்டதுமுதல் அவனுடைய இருதயமாகிய சோலையில் புகுந்து காதலை விளைவித்தது.

டாக்டர் நாயுடு தன் மைத்துனனைப்பார்த்து அதிக சந்தோஷமடைந்து "அழகிரி, சுகமா? ஊரில் இருந்து எப்பொழுது வந்தாய்?" என்று கேட்டார். ஜமீன்தாரும் அதற்குத் தக்க விடையளித்துத் தன் அத்தானருகில் நிற்கும் பெண்மானை நோக்கி, ஒருவேளை தன் சகோதரியோவென்று கூர்ந்து பார்த்தார். மரகதவல்லி நின்றுகொண்டிருந்ததைப் பார்த்து "மரகதம் ஏன் என்னிடம் பேசவில்லை, ஒரு மாதிரியாய் இருக்கிறாய். உடம்புக்கென்ன" என்று கேட்டார். இதற்குள் மரகதவல்லியும் தன் மனதைக் காதற்சோலையில் இருந்து கடிமணச்சோலைக்குத் திருப்பி, "மாமா வரவேணும் வரவேணும், சுகமாய் இருக்கிறீர்களா" என்று பேசினாள்.

நரசிம்மலு நாயுடு. அழகிரி, வாணவேடிக்கையும் முடிந்துவிட்டது. நாம் வீட்டிற்குப் போகலாம் வா. என் மோட்டார் வெளியே காத்திருக்கிறது. அதிலேயே எல்லாருமாய்ப் போகலாம்.

ஜமீன்தார். "அத்தான், நான் இன்றிராத்திரி என் மாளிகையில் தங்கிவிட்டு, நாளையதினம் காலையில் வருகிறேன். அக்காளையும் பார்த்து அதிக நாட்களாகின்றன." என்றார். நரசிம்மலு நாயுடு "சரி அப்படியே செய்" என்று சொல்லிவிட்டு, கவர்னர்துரையிடம் விடைபெற்றுக்கொள்ளப் போனார். கவர்னர்துரை நரசிம்மலு நாயுடுவைப் பார்த்து "மிஸ்டர் நாயுடு, நீ விருந்துக்கு வராமல் இருந்துவிடுவாயோவென்றெண்ணினேன். தாமதமாகவேனும் நீயும் உன் பெண்ணும் வந்ததைப்பற்றி மெத்த சந்தோஷம்" என்று சொல்லி நாயுடுவின் கைகளைப்பிடித்துக் குலுக்கினார். உன் பெண்ணிற்குக் கலியாணம் முடித்துவிட்டாயா?

டாக்டர். தங்களுக்குத் தெரியாமலா அந்த விசேஷம் நடைபெறும். அவளுக்குத் தகுந்த வரனைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

கவர்னர். உன் மைத்துனன் அழகிரிசாமி நாயுடு இன்னும் விவாஹம் செய்துகொள்ளாமல் இருக்கிறாரே. அவருக்குக் கொடுக்கலாமல்லவா?

டாக்டர். அந்தமாதிரி விவாஹம் செய்வது எங்கள் ஜாதியில் வழக்கமில்லை.

கவர்னர். "சரிதான்" என்று சொல்லி பிரிவதற்கு அனுமதி தந்தார். டாக்டர் மரகதவல்லியுடன் தன் காரில் ஏறிக்கொண்டு "கமலவிலாஸ்" என்னும் பெயருடைய தன்னுடைய பங்களாவுக்கு வந்துசேர்ந்து, தன் மனைவியிடம் அன்று நடந்த சம்பவங்களை ஒன்றுவிடாமற் சொன்னார்.

———

இரண்டாம் அத்தியாயம்.

தேனில் விழுந்த ஈ.

"பாட்டி, வெளியே வருவதும் உள்ளே போவதுமாய் ஊஞ்சலாடிக்கொண்டிருக்கிறீர்களே! யாராவது உங்கள் வீட்டிற்குப் புதிதாய் வரப்போகின்றார்களா!" என்றாள் நாகம்மாள்.

பத்மாவதி அம்மாள். நாகு, நான் என்னவென்று சொல்வேன். தம்பி வீட்டைவிட்டு 6-மணிக்கு வெளியே போனவன். மணி ஒன்பதாகிறது இன்னும் வரக்காணோம் எங்குதான் போவானோ, என்னதான் செய்வானோ? இந்த இருட்டுக்காலத்தில் மோட்டார்வண்டியும் சைக்கிள்வண்டியும் மனுஷாளைக் கொலைவாங்குகிறது. அவனைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

நாகம்மாள். இதற்காக ஏன் கவலைப்படுகிறீர்கள்? தம்பி சிறுபிள்ளையா என்ன? பீச்சுப்பக்கம் உலாத்தப் போயிருக்கலாம், அல்லது தன் சிநேகிதரோடு பேசிக்கொண்டிருப்பார். ஆனாலும் பிள்ளைகளுக்குத் தங்கள் தாய்மார் கவலைப்படுவார்களே என்ற எண்ணம் இருக்கிறதில்லை. "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்பது சரி தான். பாட்டியம்மா, உங்களுக்குத் தம்பி ஒரு பிள்ளை தானே?

பத்மாவதி அம்மாள். அந்த வயிற்றெரிச்சலை இப்பொழுது ஏன் கிளப்புகிறாய். நான் பட்ட கஷ்டங்களை இந்த குளிர்ந்த வேளையில் நினைக்கக்கூடாது. என்னைக்

கலியாணம் செய்துகொள்வதற்கு முன்பே என் புருஷன் பட்டாளத்தில் சேர்ந்திருந்தார். ஒரு வருஷம் லீவு எடுத்துக் கொண்டு வந்து என்னைக் கலியாணம் செய்துகொண்டு 6 மாசம் வீட்டோடு இருந்தார். லீவு முடிந்துவிட்டதால் வேலையில்போய்ச்சேர்ந்து அடிக்கடி எனக்குக் கடிதமும் பணமும் அனுப்பிவந்தார். மூன்று வருஷம் இப்படிக்கழிந்தது. அவர் காயலாயிருந்து அங்கேயே இறந்துபோய்விட்டார் என்று ஒருநாள் செய்திகிடைத்தது. அப்பொழுது தம்பி இரண்டுவயசுப்பிள்ளை. அவர் இறந்ததுமுதல் இன்று வரை எனக்கு மாசாமாசம் ஐம்பது ரூபாய் பென்ஷன் வந்துகொண்டிருக்கிறது. அது நான் சாகிறவரைக்கும் கிடைக்கும். தம்பியையும் சர்க்காருடைய செலவிலேயே பி. ஏ. வரை படிக்கவைத்திருக்கிறார்கள். இந்த வருஷம் சீமைக்கு அனுப்பப்போகிறார்களாம்; அங்கே இரண்டு வருஷம் படித்ததும் கலெக்டர்வேலை கிடைக்குமாம். நான் எப்படி 2 வருஷம் தம்பியைப்பிரிந்து தனியாயிருப்பது என்று இப்பொழுதுமுதல் மனசுக்கு வேதனையாயிருக்கு.

நாகம்மாள். பாட்டி! இதற்கெல்லாம் கவலைப்பட்டு முடியுமா. தம்பி சீமைக்குப்போய்ப் படித்துவிட்டு வந்து பெரிய உத்தியோகத்துக்கு வந்துவிட்டால் உங்கள் கவலையெல்லாம் ஒழிஞ்சுபோகும். பெரிய இடங்களிலிருந்து பெண்ணும் கொடுக்கவருவார்கள். என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, பாலகிருஷ்ணன் அம்மா! என்று கூவிக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான்.

பத்மாவதி. பாலு, இந்த இருட்டுக்காலத்தில் 10-மணி வரை எங்கேபோயிருந்தாய். சாப்பிட வா, அகாலமாகிறது சாப்பிட்டுவிட்டு மற்றகாரியம் பார்க்கலாம்.

பாலகிருஷ்ணன். அம்மா, இன்றைக்கு சாயங்காலம் ஒரு ஆச்சரியமான சங்கதி நடந்தது. ஒரு பெரியமனுஷன் தன் மோட்டாரை ஓட்டிக்கொண்டு ஒரு நெருக்கமான தெருவின்வழியாகப் போகும்பொழுது எதிரே ஒரு சாரட்டு வண்டி வந்தது. இவர் மோட்டாரை விலக்கத்தெரியாமல், அது வாரியில் விழுந்து உள்ளேயிருந்த ஒரு பெண்ணும் அவரும் சாகத்தெரிந்தார்கள். நான் அந்த சமயம் அந்த வழியாகப் போக நேரிட்டது. அந்தப்பெண் கீழே விழாதபடி தாங்கிக்கொண்டேன். அந்த கணவானுக்கும் நல்லவேளையாக அடி ஒன்றுமில்லை.

பத்மாவதி. போகட்டும், அந்த சமயம் நீ சும்மா இராமல் ஒரு ஜீவனை ரட்சிக்கப் போனதைப்பற்றி எனக்கு சந்தோஷம்.

பாலகிருஷ்ணன். அவர்களைப் பார்க்கும்போது நம்முடைய ஜாதியைச்சேர்ந்தவர்களென்று தெரிகிறது. நான் அவரை அடிக்கடி மோட்டாரில் ஏறிப்போகப் பார்த்திருக்கிறேன். சென்னையில் பிரசித்திபெற்ற டாக்டர் நாயுடு என்று சொல்வார்களே அவர்தானோ என்னவோ தெரியவில்லை.

பத்மாவதி. நம்மவர்களாயிருந்தால் அதிக சிலாக்கியம் தான். நீ சாப்பிட உட்காரு. சாப்பிட்டுக்கொண்டே பேசலாம்.

பாலகிருஷ்ணன். எனக்குப் பசி இல்லை. தாகத்திற்கு மட்டும் கொஞ்சம் மோர் கொடுங்கள். போதும்.

பத்மாவதி. வெறும்மோர்குடித்தால் வயிற்றைக்கலக்கும். கொஞ்சம் சாதம்போட்டுக் கரைத்துக்கொண்டு வருகிறேன்.

பாலகிருஷ்ணன். சரி, கொண்டுவாருங்கள் என்று சொல்லி இரண்டு டம்ளர் குடித்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றான்.

பத்மாவதி அம்மாள் இராத்திரி சாப்பிடும் வழக்க மில்லை. இரண்டு வாழைப்பழங்களைமட்டும் எடுத்துக்கொண்டு காய்ச்சிவைத்திருந்த பாலைப் பருகினாள். படிப்பறைக்குச் சென்ற பாலகிருஷ்ணன், மரகதவல்லியைக் கண்டதுமுதல் அவன் மனம் தேனில் விழுந்த ஈயைப்போல் மயக்கம் அடைந்து, எங்கு பார்த்தாலும் அவளுடைய சொரூபமே காணப்பட்டதால் அவன் புத்தி வேறொன்றிலும் நாடவில்லை. "அந்தப்பெண் யாராகவிருக்கலாம்? என்ன அழகு! என்ன வசீகரம்! அவளுடைய படிப்பின் அழகு முகத்தில் ஜொலிக் கிறது. நம்முடைய ஜாதியில் ஆண்பிள்ளைகள் படிப்பதே அதிக அருமை. ஆனாலும் பெண்கல்வி தற்காலம் தலை யெடுத்து ஓங்கி வளர்வதால் அந்தப்பெண் படித்தவளா யிருப்பது ஒரு ஆச்சரியமல்ல. என்னவானாலும் நான் இந்த நிலைமையில் அப்பெண்ணை விரும்புவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதுபோலவும், எட்டாத பழத்துக்கு கொட்டாவி விடுவதுபோலவும் ஆகும். "கிட்டாதாயின் வெட்டென மற" என்று சொல்லியிருப்பதுபோல நான் இந்த விஷயத்தைக் கனவைப்போலவெண்ணி மறந்துவிடு வதே நல்லது" என்று எண்ணிக்கொண்டே படுக்கையில் படுத்து உறங்கினான்.

பத்மாவதி அம்மாள் கூடத்தில் பாயைவிரித்து பள்ளி கொண்டாள். இவளுக்கு நாற்பது வயதுக்குமேல் இராது. இவளை இப்பொழுது பார்ப்பவர்கள், இவள் தன் மடந்தைப் பருவத்தில் அதிரூபசௌந்திரியாய் இருந்திருப்பாள் என்று

எண்ணுமல் இரார்கள். தெய்வபக்தியில் சிறந்தவள். மகா விஷ்ணுவின் அம்சமாக வெளிவந்த பன்னிரண்டு ஆழ்வார் களின் அற்புத சரித்திரங்களில் ஈடுபட்டவள். தமிழ்ப பாஷையில் சிறந்த ஞானம் உண்டு. வீட்டு வேலைகள் முடிந்தபின் வெளியேபோய் வம்பளக்கும் வாடிக்கை இந்த அம்மாளிடம் கிடையாது. நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் என்ற அருமையான நூலைப் படிப்பதும் பக்தர்களின் அருஞ் செயல்களைக் குறிக்கும் பாசுரங்களைப் பாராயணம் செய்வ தும், பகவான் தொண்டர்களின் அனந்தகலியாண குணங் களுக்கு ஆட்பட்டு அடியவராகச்சென்று அவர்தம் குறை களைத் தீர்த்ததுமான சிறந்த வைபவங்களைப் பாராட்டிப் படித்துப் பொழுதுபோக்குவாள். பத்மாவதி அம்மாளுக் குச் சங்கீதத்திலும்சிறந்த அறிவு இருந்தது. இந்தக்காலத் துப் பெண்களுக்கு ஹார்மோனியம், பிட்டில் முதலிய உப கரணங்கள் இல்லாமல் பாடமுடியாது. பத்மாவதி அம்மா ளின் குரல் யாழினும் குழலினும் இனிதாய் இருக்கும். படுத்துறங்குமுன் திருமங்கை ஆழ்வார் இயற்றிய

"குலந்தரும், செல்வந் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயினவெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினுமாயின
நலம்தரும் சொல்லை நான் கண்டு [செய்யும்
கொண்டேன் நாராயணாவென்னும் நாமம்."

என்ற பாசுரத்தைப்பாடி முடித்துவிட்டு நித்திரையில் ஆழ்ந்தாள்.

———

மூன்றும் அத்தியாயம்.

கலியாணப் பேச்சு.

மறுநாட் காலையில் டாக்டர் நரசிம்மலு நாயுடு ஸ்நான பானாதிகளை முடித்து, ஏழுமணி அடித்தவுடன் தன் உத்தியோகசாலைக்குச் சென்றார். அது இவருடைய பங்களாவில் இருந்து ஒருமைல் தூரமுள்ளது. அது எதுவென்றால் ஒரு ஆஸ்பத்திரிக் கட்டிடம். இவர் வெகுகாலமாகச் சொந்தத்திலேயே ஒரு வைத்தியசாலை ஏற்படுத்தி அதை நடத்தி வந்தார். இயற்கையில் தயாளகுணம் படைத்தவராதலால், ஏழைகளுக்குத் தரும வைத்தியம் செய்தும், பணக்காரரிடம் மட்டும் அவர்கள் விரும்பிக் கொடுப்பதைப் பெற்று கொள்வார். இவரிடம் நாலைந்து லேடி டாக்டர்களும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சிபெற்ற 10 அல்லது 12 மாணவர்களும் சொற்ப சம்பளம்பெற்று வேலைசெய்துவந்தார்கள்.

நாயுடு அவர்களின் ஆஸ்பத்திரிக் கட்டிடம் பீச்ரோட்டிற்கு எதிரே நான்கடி உயரத்துக்கு எழுப்பப்பட்ட மதிற் சுவரைச் சுற்றிலுமுடையதாய் மரக்களும் மலர்ச்செடிகளும் சூழப்பட்டு வெண்சுன்னம் தீட்டப்பெற்றுப் பனிமலைபோல் விளங்கும் கட்டிடத்தின் உட்புறத்தில் சுவர்களும் அடித்தளமும் கண்களைக்கவரும் காட்சியுடையதான சித்தரித்த சலவைக்கற்கள் அழுத்தப்பட்டுத் திகழ்ந்தது. மேல்நிலையில் சந்திரகாந்தக்கற்கள் அமைக்கப்பட்ட சிறு குடங்கள் அழகிற்காக வைக்கப்பட்டிருந்தன.

இத்துணை அழகுவாய்ந்த அச்சுட்டிடத்துக்குள் டாக்டர் நாயுடு புகுந்து தன் அறைக்குச் சென்று இருக்கையில் அமர்ந்தார். அதிகக் கஷ்டமான ஆபரேஷன் அல்லது கடினமான பிரசவம் முதலிய முக்கிய கேசுகளைத்தான் இவர் நேரில் பார்த்து சிகிச்சைசெய்வது வழக்கம். அன்றைய தினம் அப்படிப்பட்ட வழக்குகள் ஒன்றும் இல்லாமையால் ஒருதரம் கட்டிடத்தைச்சுற்றி மேற்பார்வை பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினர்.

டாக்டர் நாயுடுவுக்குக் கொஞ்சநாட்களாக மரகதவல்லியின் விவாஹத்தைப்பற்றின கவலை இருந்துகொண்டிருந்தது. ஆண்களைப்போலவே பெண்களும் கல்வி கற்றிருக்க வேண்டுமென்ற எண்ணமுடைய டாக்டர் தன் மகளை இண்டர்மீடியட் வகுப்புவரை படிக்கவைத்தார். தன் பெண் பருவம் அடைந்துவிட்டதை அறிந்த டாக்டர் தன் ஜாதி ஆசாரத்துக்கு விரோதமாகத் தன் பெண்ணைக் கல்லூரிக்கு அனுப்ப இஷ்டப்படாமல் படிப்பை நிறுத்தினர். அவளை மணக்கக்கூடிய மணமகன் கல்வியில் அவளுக்கு மேம்பட்டவனாக இருக்கவேண்டுமென்பது நாயுடு அவர்களின் எண்ணம். பி. ஏ. அல்லது எம். ஏ. பரீட்சையில் தேர்ச்சிபெற்றவனாக இருக்கவேண்டும். அவ்வளவுதூரம் படித்த பையனை எங்கு தேடலாம் என்று சிந்தித்துக்கொண்டே மோட்டாரைக் கிறிஸ்டியன் காலேஜுக்கு ஓட்டும்படி டிரைவருக்குக் கட்டளை கொடுத்தார்.

ஆங்கிலக் கல்வியின் வாசனை நமது நாட்டில் அதிகமாக வீசுவதற்கு அரசாங்கத்தாரின் முயற்சியும் ஊக்கமும் ஒருபுறமிருக்க ஐரோப்பியப் பாதிரிமார்களின் பிரயாசையும்

முயற்சியும் முக்கிய காரணமாகும். எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, சுவீடன் முதலிய ஜன்மதேசங்களில் இருந்து இந்தியாவுக்கு வந்து தங்கள் மதத்தைப் பரவச்செய்யும் கருத்துடன் கலாசாலைகளை ஏற்படுத்தி தாழ்ந்த ஜாதியார் என்று கருதப்பட்டவர்களையெல்லாம் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டு படிப்பில் உயர்ந்தவராகச்செய்யும் ஐரோப்பியப் பாதிரிமாரின் சாமர்த்தியம் யாவராலும் மெச்சத்தகுந்ததே. அப்படிப்பட்ட இங்கிலீஷ் மிஷனரிகளில் டாக்டர் மெஸ்டன் D. D. என்பவர் ஒருவர். இவர்தான் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் தலைவர். இராஜ வம்சத்தைச்சேர்ந்த ஒரு பெரிய பிரபு. பெருந்தன்மையான குணங்களை உடையவர். இவருடைய பங்களாவிற்கு நரசிம்மலு நாயுடு இப்பொழுது போய்ச்சேர்ந்தார். இவர் போன சமயம் மெஸ்டன் துரையும் தன் அறையில் தனியாக உட்கார்ந்து அன்று வெளி வந்த பி. ஏ. வகுப்புப் பரீட்சையின் தேர்ச்சிப் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தார். தன்னுடைய காலேஜில் படித்த தன்னுடைய பழைய மாணவன் தன்னை இப்பொழுது பார்க்கவந்ததை அறிந்த மெஸ்டன் துரை எழுந்திருந்து டாக்டர் நாயுடுவின் கைகளைப்பிடித்துக் குலுக்கித் தன் அருகே உட்காரச்செய்தார்.

துரையவர்கள். மிஸ்டர் நரசிம்மலு சுகமா? உன் குடும்ப யோகக்ஷேமம் எப்படி? வைத்தியத் தொழிலில் உன் பயிற்சி (Medical Practice) எப்படியிருக்கிறது?

டாக்டர். தங்கள் ஆசீர்வாதத்தால் நானும் என் குடும்பமும் சுகமாயிருக்கிறோம். என் குமாரத்தி வளர்ந்து

மணப்பருவம் அடைந்திருக்கிறாள். அவளை மணக்கத் தகுந்த பி. ஏ. அல்லது எம். ஏ. பரீட்சையில் தேறின ஒரு பையன் எனக்கு வேண்டும்.

துரையவர்கள். (தான் கையில் வைத்திருந்த பத்திரிகையைப் பார்த்துக்கொண்டே) பாலகிருஷ்ண நாயுடு என்ற பையன் பி. ஏ. முதல்தரமாக பாஸ்பண்ணி இருக்கிறான். உங்கள் ஜாதியைச் சேர்ந்தவனாக இருக்கக்கூடுமென்று எண்ணுகிறேன். அவன் இதுவரை சர்க்காருடைய சகாய வர்த்தனை (Government Stipend) யினால் படித்துவந்தான். காலேஜ் படிப்பை இத்துடன் நிறுத்திவிட்டு லண்டனில் உள்ள ஐ. ஸி. எஸ். படிப்புக்குத் தன்னைத் தெரிந்தெடுக்க வேணுமென்று என்மூலமாக சர்க்காருக்கு மனுச்செய்திருந்தான். நானும் பலமாக சிபார்சுசெய்தனுப்பினேன். ஆனால் நேற்று கலெக்டரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. சர்க்காரில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பணக்குறைவால் அந்தப்பையனை சர்க்காருடைய செலவில் சீமைக்கு அனுப்ப முடியாதென்று எழுதப்பட்டிருக்கிறது. அந்தப்பையனுக்கும் இந்த சமாசாரம் தபால்மூலம் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. பையன் ஏழைதான். அவன் தாயாருக்கு மாசம் ஐம்பது ரூபாய் மிலிட்டரி பென்ஷன் வருகிறது. அந்தப்பையனுக்கு நீர் உமது பெண்ணைக் கொடுக்க விரும்பினால் நான் அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்கிறேன் என்றார். நரசிம்மலு நாயுடு இந்த சமாசாரத்தைக் கேட்டதும், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததைப் போலவும், தேடிப்போன மூலிகை காலில் சுற்றிக்கொண்டதைப்போலவும். உள்ளம் பூரித்தார்.

நரசிம்மலு நாயுடுவை மெஸ்டன் துரையுடன் பேசிக் கொண்டிருக்கும்படி விட்டு, ஜமீன்தார் அழகிரிசாமி நாயுடு வின் சமாசாரத்தைச் சொல்வோம். தன் அத்தானிடம் தான் அடுத்தநாட்காலையில் வருவதாகச் சொன்ன ஜமீன் தார் சுமார் ஏழரை மணிக்குக் கமலவிலாஸ் என்னும் பெய ருடைய தன் அத்தானுடைய பங்களாவிற்கு வந்தார். கமல வல்லி அம்மாள் தன் தம்பியைக் கண்டதும் சகோதரவாஞ் சையின் மேலீட்டினால் தன் தம்பியுடைய க்ஷேமலாபங்களை விசாரித்தாள். ஜமீன்தார், கமலவல்லி, மரகதவல்லி இம் மூவரும் ஒரு சிறு வட்ட மேஜையைச்சுற்றி மூற்று நாற் காலிகளில் உட்கார்ந்துகொண்டார்கள். சமையற்காரி வெள் ளித் தட்டுகளில் இட்லி, உப்புமா, வடை, கேசரி, பூரி முத லிய பலகார தினுசுகளைக் கொண்டுவந்து மேஜையில் வைத் தாள். அதன்பிறகு மூன்று வெள்ளி டம்ளர்களில் காப்பி யும் கொண்டுவந்தாள்.

ஜமீன்தார். (சாப்பிட்டுக்கொண்டே) அத்தான் அதற் குள்ளாக ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டாரா? மணி ஏழரை தானே ஆகிறது.

மரகதவல்லி. (தன் தாயைப்பார்த்து) அம்மா, மாமா வந்திருக்கிறாரென்று அப்பாவுக்கு டெலிபோனில் சொல் லட்டுமா?

ஜமீன்தார். மரகதம், வேண்டாம். அவர் வரும் போது வரட்டும். நான் இன்றுமுழுதும் இங்கேதான் இருக்கப்போகிறேன். மத்தியானச் சாப்பாட்டுக்கு அத் தான் வருவாரல்லவா. அப்பொழுது அவருடன் பேசலாம்

என்றார். மரகதவல்லி காப்பி சாப்பிட்டுமுடிந்ததும் தன் அறைக்குப் போய்விட்டாள். ஜமீன்தார் நாற்காலியைத் தன் சகோதரியின் பக்கத்தில் இழுத்துப் போட்டுக்கொண்டு மெல்லிய குரலில் "அக்கா, மரகதத்துக்கு கலியாணம் செய்யவேண்டிய பருவம் வந்துவிட்டதே நீங்கள் அதைப் பற்றி அத்தானிடம் ஒன்றும் தெரிவிக்கவில்லையா?

கமலவல்லி. மரகதத்தின் கலியாணம் இருக்கட்டும் நீ எப்பொழுது கலியாணம் செய்துகொள்வதாக எண்ணம். பீஷ்மரைப்போல பிரம்மச்சாரியாகவே இருந்துவிடலாம் என்று எண்ணுகிறாயா?

ஜமீன்தார். அக்கா, என் கலியாணத்தைப்பற்றிப் பெண் தேடப்போவது "கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதுபோல்தான்"

கமலவல்லி. தம்பி, நீ என்ன கருத்தோடு சொல்லுகிறாய் என்பதை நான் தெரிந்துகொண்டேன். மரகதவல்லியை உனக்கு விவாஹம்செய்துகொடுப்பதில் எனக்கு மனப்பூர்வமான சம்மதந்தான். மரகதத்தின் மனசும் உன் அத்தான் எண்ணமும் எப்படியிருக்கிறதோ என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அத்தான் வந்தவுடன் நீயே இந்தப்பிரஸ்தாபத்தைப்பற்றி அவரிடம் கேட்பது நல்லது. என்று சொல்லிவிட்டு சமையலறைக்குள் செலவதற்காக எழுந்திருந்தாள். ஜமீன்தார் மரகதவல்லியின் அறைக்குள் நுழைந்தார்.

மரகதவல்லி எழுந்திருந்து "மாமா, இந்தச் சோபாவில் உட்காருங்கள்" என்று தன் பக்கத்திலிருந்த ஒரு ஆசனத்தைக் காட்டினாள்.

அழகிரிசாமி நாயுடு. மரகதம், அது என்ன புஸ்தகம் நீ படித்துக்கொண்டிருக்கிறது?

மரகதம். இது ஒரு இங்கிலீஷ் நாவல். உங்களுக்கு இங்கிலீஷ் கதைகள் என்றால் அதிகப் பிரியமாச்சே இதை வேண்டுமானால் வாசியுங்கள்.

அழகிரிசாமி. நான் உன்னைப்போல் இங்கிலீஷ் படித்துப் பட்டம்பெறவில்லையென்று பரிகாசம் செய்கிறாய்.

மரகதம். மாமா நீங்கள் இங்கிலீஷ் படித்துப் பட்டம் பெற்று ஆகவேண்டியதென்ன? எங்கே போய் என்ன உத்தியோகம் பார்க்கப்போகிறீர்கள்? உங்களிடம் இலட்சுமி கடாட்சம் பூரணமாய் நிறைந்திருக்கிறது. நூற்றுக்கணக்கானபேர் கைகட்டி வேலைபார்க்கிறார்கள்.

அழகிரி. நீ சொல்வது சரிதான். ஆனாலும் லெக்ஷிமி கடாட்சத்துடன் சரஸ்வதி கடாட்சமும் பொருந்தியிருந்தால் சிலாக்கியமல்லவா.

மரகதம். அதற்குக் காரணம் உங்களுக்குத் தெரியாதென்றால் நான் சொல்லுகிறேன். லெக்ஷிமி தங்குமிடத்தில் சரஸ்வதியும் சேர்ந்திருப்பது அபூர்வம். மாமியும் மருகியும் ஒத்துவாழ்வது அருமைதானே.

அழகிரி. அது கிடக்கட்டும். நீயோ அழகில் இலக்குமிக்கு ஒப்பாயும், கல்வியில் சரஸ்வதியைப் போலவும் விளங்குகிறாய். ஆகையால் உன்னுடைய அனுக்கிரகம் எனக்கிருந்தால் அதுவே போதும் என்று தன் உள்ளக் கருத்தைக் குறிப்பாக உணர்த்தினார்.

மரகதம். மாமா, உங்களுக்கு எப்பொழுதும் என்னைப் பரிகாசம் செய்வதுதான் வழக்கம். 'என்னிடம் ஒரு அனுக்கிரகமும்' இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கும் போது நரசிம்மலு நாயுடு கிறிஸ்தவக் கல்லூரியில் இருந்து வந்துசேர்ந்தார்.

அழகிரி. அத்தான் வந்துவிட்டார். நான் அவரிடம் பேசுவதற்குப் போகிறேன். என்று எழுந்தார்.

தன் இளைய சகோதரன் அன்று வந்திருப்பதை முன்னிட்டு கமலவல்லி சுசிருசியான பதார்த்தங்களால் விருந்து சாப்பாடு தயாரித்தாள். தான் ஒரு பெரிய ஜமீன்தாருடைய மகளாகப் பிறந்து, அதிக செல்வத்தில் வளர்ந்தும், தான் வாழ்க்கைப்பட்ட வீட்டிலும் அதிக சீருப்சிறப்புமாய் தன்கீழ் கணக்கற்ற வேலைக்காரிகள் வேலைசெய்தபோதிலும் கமலவல்லி சமையல், சாப்பாடு முதலிய விஷயங்களைத் தானே நேரில் கவனித்துத் தன் புருஷனுக்குத் தன் கைகளாலே பரிமாறுவது வழக்கம். "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்ற வசனத்தைப்போல் வன் புருஷன் முகம் கோணாமல் அவருக்குப் பிரியமான பதார்த்தங்களைச் சமைத்துப் படைப்பதில் கமலவல்லிக்கு அதிக சிரத்தையுண்டு. அற்பருக்கு பவிஷு வந்தால் அர்த்தராத்திரி குடைபிடிப்பார்கள் என்ற பழமொழியைப்போல் சில பெண்கள், தங்கள் புருஷனுக்கு ஒரு பெரிய உத்தியோகம் கிடைத்துவிட்டால் தாங்கள் வேலைசெய்வதும் சமையல் செய்வதும் கௌரவதைக் குறைவு என்றெண்ணி வேலைக்காரரை ஓயாமல் வேலைவாங்கி, தாங்கள் ஆடாமல் அசையாமல் உண்பதும் உறங்குவதுமாய் உடம்பு பருத்துப்போய்த் தங்

களை இரண்டுபேர் தூக்கிவிடும்படியான நிலைமையில் மன்னார் கோவில் சுவாமி விக்கிரகங்களைப்போல் ஆய்விடுகிறார்கள். ஆனால் நாயுடு அவர்களின் பிரிய நாயகி கமலவல்லியோ வேலைக்காரிகளை எதிர்பாராமல் எந்த வேலையும் தானே ஓடியாடி செய்யக்கூடியவள். கமலவல்லி என்ற பெயருக்கேற்ப கமலம்போன்ற வதனமும் வல்லிக்கொடிபோன்ற இடையுமுடையவள். இத்தகைய அழகுடன் கல்வியிலும் சிறந்து விளங்கினாள். இராமாயணம், பாரதம், பக்தவிஜயம் முதலிய கிரந்தங்களைப் படித்து அவற்றில் கூறப்பட்டுள்ள நீதி மார்க்கங்களைத் தன் அனுதின ஜீவியத்தில் அனுசரிப்பவள்.

உலகத்தில் அநேகர் பெருமைக்குப் படிக்கிறார்களே யொழிய படித்த விஷயங்களை மனதில் நிறுத்தி அதன்படி ஒழுகுவோர் மிகச் சிலரே.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்றார் நாயனாரும்.

இன்னும் சிலர் தங்களிடம் ஏகப்பட்ட குற்றம்குறைகளை வைத்துக்கொண்டு தம்மைத்தாமே சீர்திருத்திக்கொள்ள வகையறியாமல் மற்றவர்களுக்குச் சன்மார்க்கங்களை உபதேசிக்கத் தொடங்குகிறார்கள். "உபதேசிப்பதைவிட நடந்துகாட்டுவது உத்தமம்" என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். இவர்கள் "சகலருக்கும் வழிகாட்டித் தான் ஒரு அடியேனும் எடுத்துவையாமல் இருக்கிற கைகாட்டி மரம்போலவும், ஜெபம்செய்வதற்காக மற்றவர்களைக் கோவிலுக்கு வரும்படியாகக் கூப்பிட்டுத் தான் ஜெபம் செய்யாமல் இருக்கிற கோவில் மணியைப்போலவும் இருக்கிறார்கள்.

இதுநிற்க, தன் புருஷனுக்கும் தம்பி அழகிரிசாமிக்கும், மரகதவல்லிக்கும் வெள்ளிக்குருத்துபோன்ற பெரிய வாழையிலைகளைப் போட்டுப் பரிமாறினாள். மரகதவல்லி தனக்குப் பசிக்கவில்லையென்றும் அம்மாளுடன் சாப்பிடுவதாகவும் சொல்லிவிட்டாள். அன்று சமையலின் விவரத்தை அறிய வாசகர்களுக்கு ஆவலிருக்கலாம். சேமியா பாயசம், வெள்ளரிக்காய் கோசுமல்லி, வாழைக்காய் வறுவல், கத்திரிப் பிஞ்சும் முறுங்கைக்காயும் போட்டுச் சாம்பார், வெண்டைக் காய் மோர்க்குளம்பு, தயிர்வடை, தேங்காய் போளி முதலியன்வாம். நரசிம்மலு நாயுடு தன் இளமைப்பருவத்திலிருந்தே மாமிச பதார்த்தங்களைப் புசிக்கும் வழக்கமில்லை. மரக்கறி வகைகளையே உபயோகிப்பார். கமலவல்லிக்கு இயற்கையிலேயே மாமிசங்களில் வெறுப்புண்டு.

சைவ வைஷ்ணவமதக் கொள்கைகளின்படி மாமிசம் புசிப்பது தோஷமாகவும் கிறிஸ்துமதப்படி நிர்தோஷமாகவும் இருக்கிறது. என்றாலும் உலகத்தில் அதைப் புசிப்பவர் பலரும் புசியாதிருப்பவர் சிலருமே இருக்கிறார்கள்.

மாமிசம் புசிப்பது ஜீவவதைக்கு ஏதுவாயும் ஜீவகாருண்யத்திற்கு விரோதமாயும் இருப்பதால் அப்படிப்பட்ட ஜீவவதை செய்வதைப்பார்க்கிலும் அதைச்செய்யாமல் இருப்பது சிலாக்கியம் அல்லவா? ஆடு, கோழி முதலியவற்றைப் பிடித்துக் கொல்லும்பொழுது அவைகள் படுகிற பாடும், துடிக்கிற துடிப்பும் இவ்வளவென்று சொல்லக் கூடுமோ? இவ்வளவு துன்பம்செய்து மாமிசம் புசிப்பதைவிட அதைப் புசியாமல் இருப்பது சர்வோத்தமம்.

"தன்னூன் பெருக்கத் தான்பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளுமருள்" என்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவரும். உலகத்தில் மாமிசத்தைப்போல் அசுசியும் அருவருப்பும் உள்ள பதார்த்தம் வேறொன்றுமில்லையென்பதை எண்ணியே கடவுள் அதைத் தோலினால் மூடிமறைத்துவைத்தார். ஆத்மசுத்தத்துக்கும் தேகசுத்தத்துக்கும் விசேஷ சம்பந்தம் இருப்பதால் ஆத்மசுத்தத்தை இச்சிக்கிறவர்கள் மாமிச உணவைத் தள்ளிவிடுவார்கள் என்பதற்கு யாதொரு ஐயப்பாடுமில்லை.

கமலவல்லி அம்மாள் பாயசத்தைக் கொண்டுவந்து கலத்தில் பரிமாறினதும், நரசிம்மலு நாயுடு "ஓகோ, இன்று உன் தம்பி வந்திருக்கிறனென்று விருந்துச்சாப்பாடா! பேஷ்!" என்று கமலத்தை நோக்கிக் கடகடவென்று சிரித்தார். உலக வழக்கத்தை அனுசரித்து நாயுடு இந்தவிதமாகக் கமலவல்லியைப்பார்த்துக் கேட்டது சரிதான். பெண்களில் அநேகருக்குத் தங்கள் வீடுகளுக்குத் தாய்வீட்டைச்சேர்ந்த பந்துக்களில் அண்ணன், தம்பி, மாமன் யாராவது வந்துவிட்டால் தலைகால் தெரியாது. அன்று வீட்டில் விசேஷ ஆடம்பரமும் கூக்குரலுமிருக்கும். ஆனால் தன் புருஷன்வீட்டைச்சேர்ந்தவர்களில் மாமியார், நாத்தனார், மச்சினன், கொழுந்தன் யாராகிலும் வந்துவிட்டாலோ, தலைவலி, உடம்புவலி, இன்னும் இல்லாத வலியெல்லாம் வந்துவிடும். சுக்கும் மிளகும் அரைத்து நெற்றியில் தடவிக்கொண்டு காலை நீட்டிப் படுத்துவிடுவார்கள். அன்று புருஷன்பாடும் சோற்றுக்குத் திண்டாட்டந்தான். வந்த விருந்தினரைக் கூட்டிக்கொண்டு ஹோட்டலுக்குப்போவதைத்

தவிர வேறு வழியில்லை. கமலவல்லி இடமும் இந்த குணம் உண்டோ என்று சிலர் சந்தேகிக்கலாம்.

"எண்ணறக் கற்று எழுத்தறப் படித்தாலும்
பெண்புத்தி பேதமையே" என்ற

ஆன்றோர் வாக்கின்படி பெண்கள் எவ்வளவு படித்திருந்தாலும் அவர்களுடைய இயற்கைக் குணம் மாருதல்லவா! இதுநிற்க, கமலவல்லி தன் புருஷனைப்பார்த்து "உங்களுக்குப் பால்பாயசம் என்றால் அதிகப்பிரியம் என்றெண்ணிச் சமைத்தேன்" என்றாள்.

டாக்டர். நீ பேச்சில் கெட்டிக்காரியல்லவா?

கமலம். உங்களைப்பார்த்தால் அதிகக் களைப்பாய்த் தோன்றுகிறதே. ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறீர்களா அல்லது வேறு எங்கேயாவது வைத்தியம்செய்யப் போனீர்களா.

டாக்டர். நான் ஆஸ்பத்திரியிலிருந்து வெகுநேரத்துக்கு முன்பே கிளம்பிவிட்டேன். கிறிஸ்டியன் காலேஜுக்குப் போய் என் பழைய ஆசிரியர் மெஸ்டன் துரையிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

கமலம். அவருக்கு உடம்பு சௌக்கியமில்லையா? தங்களை வரும்படி சொல்லி அனுப்பினாரா?

டாக்டர். இல்லை, என் சொந்த விஷயமாய்த்தான் அவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். மரகதவல்லிக்கு மாப்பிள்ளை தேடும் கவலைதான் என் மனதை வருத்திக்கொண்டேயிருக்கிறது. படித்த பிள்ளைகளை நம்முடைய ஜாதியில் காண்பது குதிரைக்கொம்பாய் இருக்கிறது. ஆனால் இன்று

துரையிடம் பேசினதில் பி. ஏ. படித்துப் பாஸ்பண்ணின பையன் ஒருவன் அகப்பட்டிருக்கிறான். மரகதவல்லியின் அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும். கூடிய சீக்கிரம் அந்தப் பையனுக்கு நிச்சயம்செய்துவிடவேணும். துரையவர்களும் இந்த விஷயத்தில் முயற்சி எடுப்பதாகச் சொன்னார்கள். (அழகிரிசாமி நாயுடுவைப்பார்த்து) அழகிரி, நீதான் இந்தக்கலியாணத்தை அதிகப்பொறுப்புடன் இருந்து நடத்தவேண்டும். எனக்கு இந்த விஷயத்தில் எவ்வளவு சொந்தம் உண்டோ அவ்வளவு உனக்கும் உண்டல்லவா?

ஜமீன்தார். அதற்கென்ன, அப்படியே செய்கிறேன். நீங்கள் எனக்கு அதிகமாய்ச் சொல்லவேண்டுமா?

கமலவல்லி. பையனுடைய குலம், கோத்திரம் என்னவென்று தெரிந்துகொள்ளவேண்டாமா? பையனுக்குத் தாயார், தகப்பனார் இருக்கிறார்களா?

டாக்டர். பையனுக்குத் தகப்பனாரில்லை. தாயார் மட்டும் இருக்கிறாளாம். இதுவரை சர்க்காருடைய ஆதரவில் பையன் படித்துவந்தான். சீமையில் உள்ள ஐ. ஸி. எஸ். பரீட்சைக்குப் படிக்கப்போகவேண்டுமென்று பிரயத்தனம் செய்திருந்தான். சர்க்காரில் இப்பொழுதுள்ள பணக்கஷ்டத்தால் சர்க்காருடைய செலவில் அனுப்பமுடியாதென்று உத்தரவு வந்திருக்கிறதாம்.

கமலவல்லி. நிச்சயம் செய்வதற்கு முன் பையனைப் பார்க்கவேணும். மரகதவல்லியின் சம்மதத்தையும் அறியவேணும். அதுதான் முக்கியம்.

இதற்குள் டாக்டரும் ஜமீன்தாரும் சாப்பிட்டுமுடித்தார்கள். அன்று சமையல் அதிக நேர்த்தியாய் இருந்ததால் ஜமீன்தார் அளவுகடந்து புசித்துவிட்டார். தன் பருத்த சரீரத்தைத் தூக்கிக்கொண்டு அவரால் எழுந்திருக்கவும் கூடவில்லை. டாக்டர் தான் எப்பொழுதும் மருந்துகளை அளந்தும், நிறுத்தும் கொடுத்துக்கொடுத்துப் பழக்கப்பட்டவராதலால், உண்ணும் உணவையும் அளந்தும் நிறுத்தும் நிதானமாகவே சாப்பிடுவார். சாப்பிட்டு முடிந்தவுடன் கொஞ்சநேரம் படுத்துத் தூங்கும் வழக்கமுடைய டாக்டர் தன் அறைக்குப் போய்விட்டார். ஜமீன்தார் கமலவல்லியின் அருகே ஒரு இரத்தினகம்பளத்தில் உட்கார்ந்துகொண்டு வெள்ளித்தட்டிலிருந்த வெற்றிலைச்சீவலை மென்றுகொண்டே தன் சகோதரியிடம் பேசத்தொடங்கினார். கமலவல்லியும் மரகதவல்லியும் சாப்பிட உட்கார்ந்தார்கள். ஜமீன்தார் தன் சகோதரியைப்பார்த்து "அக்கா, நான் நினைத்து வந்த காரியம் ஈடேறவில்லை. அத்தானுடைய எண்ணம் வேறுவிதமாய் இருக்கிறது. நான் அவரிடம் வாய்திறந்து கேட்டு அவமானப்படுவதைவிட இந்தப்பிரஸ்தாபம் எடுக்காமலே இருப்பது நல்லது. நான் இன்று சாயங்காலம் ஊருக்குப் போகவேணும். இப்பொழுது வாயிதாக்காலம். பணவசூல் செய்யவேண்டியிருக்கிறது.

கமலவல்லி. இந்தக்கலியாணத்தோடு, உனக்கும் தகுந்த இடத்தில் ஒரு பெண்ணைத்தேடி இரண்டு கலியாணமும் ஒன்றாய் நடக்கும்படி உன் அத்தானிடம் சொல்லி ஏற்பாடுசெய்கிறேன். மரகதத்தை உனக்குக் கொடுக்கவில்லை என்ற கோபத்தினால் நீ கலியாணத்திற்கு வராமல் இருந்துவிடாதே.

ஜமீன்தார். அக்கா, நான் போய்வருகிறேன். அத்தானிடம் சொல்லிக்கொள்வதற்கில்லை. அவருடைய நித்திரையைக்கெடுக்க எனக்கு இஷ்டமில்லை, என்று சொல்லித் தன் சகோதரியிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

மரகதவல்லி சாப்பிடும்பொழுது, தன் தாயும் மாமனும் கலியாணப்பேச்சுப் பேசுவதையும் மரகதம் என்ற பெயர் மத்தியில் வருவதையும் கேட்டு மிரள, மிரள விழித்துக்கொண்டே தான் ஒன்றும் அறியாதவளாகையால் நாணத்துடன் தலைகவிழ்ந்துகொண்டு சாப்பிட்டு முடித்து தன் அறைக்குப் போனாள்.

தன் கணவன் நித்திரையினின்று எழுந்ததை அறிந்த கமலவல்லி, வெள்ளிச்செம்பில் குளிர்ந்த தீர்த்தமும், தட்டு நிறைய லட்டு, காராபூந்தி, பகோடா, ஹல்வா முதலிய பக்ஷணங்களும் எடுத்துக்கொண்டு டாக்டரின் அறைக்குள் பிரவேசித்தாள்.

டாக்டர். அழகிரி எங்கே? இன்னும் தூங்குகிறானோ?

கமலவல்லி. தம்பி ஊருக்குப் போய்விட்டான் ஊரில் அவசர ஜோலி இருக்கிறதாம்.

டாக்டர். என்னிடம் சொல்லிக்கொள்ளவில்லையே? என்பேரில் கோபமோ?

கமலவல்லி. கோபமும் ஒருபுறம்தான். நீங்கள் மரகதத்துக்குமட்டும் மாப்பிள்ளை தேடினீர்களே. மைத்துனனுக்கும் ஒரு பெண்ணைப்பார்த்துக் கலியாணம் செய்து

வைக்கவில்லையே என்பதுதான். உங்கள் மாமனர் இப்பொழுது உயிரோடிருந்தால் உங்களுக்கு இந்தக்கவலை வேண்டியதில்லை. அவனுடைய அந்தஸ்துக்கு அவனே போய் ஒருவரிடம் பெண் கேட்பது கௌரதைக்குறைவு அல்லவா?

டாக்டர். என்ன அந்தஸ்து இருந்தாலும் படிப்பில் பூஜ்ஜியம்தானே.

கமலவல்லி. இங்கிலீஷ் அதிகமாய்ப் படிக்கவில்லையென்று நீங்கள் குறை சொல்லலாம். படிப்பில்லாவிட்டால் என்ன? சொத்து ஏராளமாய் இருக்கிறது.

டாக்டர். அவன் தன் கலியாணத்தைப்பற்றி இதுவரை ஒரு பேச்சும் என்னிடம் சொல்லவில்லையே. அவன் மனதில் உள்ளது எனக்கு எப்படித்தெரியும்.

கமலவல்லி. அவன் மனதில் உள்ளதை நான் சொல்லுகிறேன். மரகதத்தைக் கலியாணம் செய்துகொள்ள விரும்புகிறான்.

டாக்டர். கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பதுபோல்தான். தமக்கை பெண்ணைத் தன் பெண்ணாக நினைக்கவேண்டும். அதைவிட்டுத் தான் கலியாணம் செய்துகொள்ள எண்ணுவது கொஞ்சமேனும் நியாயமில்லை.

கமலவல்லி. நான் இப்பொழுது உங்களிடம் நியாய அநியாயம் கேட்க வரவில்லை. உலகத்தில் சகோதரி பெண்ணைக் கட்டிக்கொள்ளுகிறவர்கள் இல்லையா?

டாக்டர். உலகத்தில் எத்தனையோ அக்கிரமம் நடைபெறுகிறது. சகோதரி பெண்ணைக் கட்டிக்கொள்ளும் சம்பந்தம் விருத்திக்குவந்ததே கிடையாது.

கமலவல்லி. வேறு இடத்திலாவது ஒரு பெண்ணைத் தீர்மானம்செய்து கலியாணம் நடத்தக்கூடாதா? அந்தப் பொறுப்பும் தங்களைச் சேர்ந்ததுதானே.

டாக்டர். அதுவேண்டுமானால் நான் செய்வதற்குத் தயாராகவிருக்கிறேன்.

இந்தவிதமாக இவர்கள் சம்பாஷணை முடிந்தது. தட்டில் உள்ள பக்ஷணமும் குறைந்தது. மணி நான்கடித்தவுடன் வழக்கம்போல டாக்டரும் ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டார்.

நான்காம் அத்தியாயம்.

எதிர்பாராத சம்பவங்கள்.

காலை ஒன்பது மணி இருக்கலாம். பாலகிருஷ்ணன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு அங்குமிங்கும் சிதறுண்டு கிடந்த புஸ்தகங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தான். பத்மாவதி அம்மாள் ஸ்நானம் செய்துமுடித்து வெண்மை நிறம் பொருந்திய நார்ப்பட்டு உடுத்தி கையில் துளசிமாலையுடன் ஜெபம் செய்துகொண்டிருந்தாள். தபாற்காரன் பாலகிருஷ்ண நாயுடு என்று கூவிக்கொண்டு ஒரு கடிதம் கொண்டுவந்தான். அதன் உறையைப் பார்த்தவுடன் அது அரசாங்கத்தாரிடம் இருந்து வந்திருப்பதாகத் தெரிந்தது. என்ன சமாசாரமாயிருக்கலாம் என்று ஆத்திரத்தோடு உறையைக்கிழித்து உள்ளே இருக்கும் கடிதத்தை நோக்கினான். இதற்குள் பத்மாவதி அம்மாள் ஜெபம்செய்துமுடித்து பாலுவின் அறைக்குள் நுழைந்தாள்.

பத்மாவதி. பாலு, கையில் என்ன கடுதாசி, யாரிடம் இருந்து வந்திருக்கிறது?

பாலு. நான் சீமைக்குப் போகவேண்டாம் என்று நீங்கள் சொல்லிக்கொண்டே இருந்தீர்கள். அதற்குத்தகுந்தாப்போல் செய்தியும் வந்திருக்கிறது.

பத்மாவதி. என்ன சங்கதி? விவரமாகச் சொல்லு. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

பாலு. சர்க்காருடைய செலவில் என்னைச் சீமைக்கு அனுப்பவாவது, மேலே படிக்கவைக்கவாவது முடியாதாம். இப்பொழுது பணக்கஷ்டமாய் இருக்கிறதாம்.

பத்மாவதி. இவ்வளவுதானா? இதற்காக நீ கவலைப் படாதே. உலகத்தில் எல்லாரும் சீமைக்குப் போய்விட்டு வந்துதானா பிழைக்கிறார்கள், என்று சொல்லிவிட்டு தன் வீட்டு வேலையைக் கவனிப்பதற்காகப் போய்விட்டாள்.

பாலகிருஷ்ணன் இந்த சங்கதியைத் தான் படித்துவந்த கிறிஸ்தவக் கல்லூரியின் பிரின்சிபால். மெல்டன் துரையிடம் தெரிவித்து வேறு என்ன வழி செய்யலாம் என்று அவருடன் ஆலோசிப்பதற்காக வெளியே புறப்பட்டான். நான் கடி தூரம் போனதும் ஒரு ஜட்காவண்டிக்காரன் நின்று கொண்டிருந்தான். பாலகிருஷ்ண நாயுடு அந்த வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு வண்டிக்காரனை கிறிஸ்டியன் காலேஜுக்கு ஓட்டும்படி சொன்னான். வண்டி கொஞ்சதூரம் போனதும் ஒரு சிறு பையன் "ஹிந்து பேபர், சுதேசமித்திரன் பேபர்" என்று கத்திக்கொண்டே வந்தான். தன் பரீட்சையின் தேர்ச்சி விவரம் அன்றையதினம் பத்திரிகையில் வெளிவந்திருக்கலாம் என்றெண்ணி, பாலு, ஒரு அணா கொடுத்து ஹிந்து பேபரை வாங்கி அதை அங்குமிங்கும் திருப்பினான். அந்தப் பத்திரிகையின் ஒரு புறத்தில் பி. ஏ. பரீட்சையில் தேறின மாணவர்களின் நம்பர்கள் குறிக்கப்பட்டிருந்தன. தன்னுடைய நம்பர் முதல் வரிசையில் (First class) இருந்ததைக் கண்டு சந்தோஷப்பட்டான். அந்த சமயம் இவன் வலது கண்ணும் வலது தோளும் துடித்தன. "என்ன ஆச்சரியம்! என் வலது கண்ணும்

தோளும் துடிக்கக் காரணம் என்ன? ஆண்மக்களுக்கு வலதுபக்கம் துடித்தால் அதிர்ஷ்டம் வரும் என்பார்கள். நமக்கெங்கிருந்து என்ன நன்மை வரப்போகிறது" என்று எண்ணமிட்டுக்கொண்டே போகும்போது வண்டியும் காலேஜின் வாசலில் நின்றது. பாலகிருஷ்ணன் போன சமயம் மெஸ்டன் துரையவர்கள் பங்களாவின் உள்ளே இருந்து கொண்டு தன் வேலைக்காரனுக்கு பெட்டி, படுக்கை, சாமான் முதலியவற்றை ரயிலுக்குப் பார்சல் செய்யும்படி கட்டளை கொடுத்துக்கொண்டிருந்தார். பாலு, வெளியே நிற்பதைப் பார்த்த துரை உள்ளே இருந்து வந்து பாலுவின் வந்தனத்துக்குப் பதில் வந்தனம் கூறினர்.

மெஸ்டன் துரை. பாலகிருஷ்ணு, நீ முதல் வகுப்பில் பரீக்ஷை பாஸ்பண்ணியிருப்பதைப்பற்றி அதிக சந்தோஷம். நான் இன்று இராத்திரி நீலகிரிக்குப் புறப்படுகிறேன். அதற்குமுன் உன்னைப் பார்த்து சில சங்கதிகளைச் சொல்ல விரும்பினேன். நீயே என்னைப் பார்க்க வந்ததைப்பற்றி நிரம்ப சந்தோஷம்.

பாலகிருஷ்ணன். (தன் சட்டைப்பையில் இருந்து தனக்கு அன்று கிடைத்த கடிதத்தை எடுத்துத் துரையவர்களிடம் கொடுத்து) இந்தக்கடிதம் இன்று காலையில் எனக்கு வந்தது என்றான். துரையவர்கள் அதைப் பார்த்துவிட்டு "எனக்கும் இந்தக்கடிதத்தின் நகல் நேற்று கலெக்டரிடமிருந்து வந்தது. நீ இதற்காக வருத்தப்படவேண்டாம். இவ்வூரில் உள்ள ஒரு பிரபல டாக்டர் தன் பெண்ணை உனக்கு விவாகம் செய்துகொடுக்கவும் அவருடைய செலவில் உன்னை ஐ. ஸி. எஸ் பரீட்சைக்கு அனுப்பவும் விரும்புகிறார்.

நேற்று மத்தியானம் அவர் இங்கே வந்து என்னிடம் இந்த சங்கதியைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார், நான் இன்று இராத்திரி நீலகிரி மலைக்குப் போகிறபடியால் நாம் இப்பொழுதே அவருடைய வீட்டிற்குப் போகவேண்டும். உன்னை அவருக்கு அறிமுகமாக்கிவைக்கிறேன். நீ ஐந்து நிமிஷம் காத்திரு. நான் உள்ளேபோய்த் தேயிலைப்பானம் பருகிவிட்டு வருவேன் என்று சொல்லி உள்ளே போனார்.

பாலகிருஷ்ணன் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவனுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆய் விட்டது. "பிரபல டாக்டர் என்றால் நான் அன்றைய தினம் மோட்டார் விபத்திலிருந்து தப்புவித்த பெண்ணின் தகப்பனாயிருக்கலாமோ, அவரைத்தான் டாக்டர் நாயுடு என்று சொல்வார்கள். ஹா! அந்தப் பெண்மட்டும் எனக்குக் கிடைப்பதாயிருந்தால், நான் பாக்கியசாலிதான்" என்று தனக்குள் ஆலோசித்துக்கொண்டு இருக்கும்பொழுது மெஸ்டன் துரையும் வெளியே வந்து புறப்பட ஆயத்த மானார். ஹாலண்டு தேசத்துப் பஞ்சகல்யாணிக் குதிரை பூட்டிய கோச்சுவண்டி ஒன்று வாசலில் காத்திருந்தது. துரையும் பாலுவும் அதில் ஏறிக்கொண்டு டாக்டர் நாயுடுவின் பங்களாவிற்குப் போனார்கள். மணி பதினொன்றடித்துவிட்டது. டாக்டரும் அப்பொழுதுதான் வைத்தியசாலையி லிருந்து வீட்டிற்கு வந்தார்.

டாக்டர், துரையவர்களையும் பாலகிருஷ்ணனையும் மாடிக் கழைத்துக்கொண்டுபோய் ஒரு சோபாவில் வீற்றிருக்கச் செய்தார். துரையவர்கள் பாலுவை நோக்கி "நீ நிற்க

வேண்டாம், என் பக்கத்தில் உட்காரலாம் என்று சொல்லி தன் பக்கத்தில் உட்காரச்செய்தார்.

மேஸ்டன் துரை. மிஸ்டர் நரஸிம்மலு, இந்தப்பையனைப்பற்றித்தான் நான் உம்மிடம் நேற்று சொன்னது. இன்று காலையில் என்னைப் பார்ப்பதற்காக வந்தான். நான் இன்றிரவே நீலகிரிமலைக்குப் புறப்படுவதால் பையனை உம்மிடம் கூட்டிக்கொண்டுவந்து அறிமுகமாக்கிவைத்துவிடலாம் என்றெண்ணி பையனையும் கூட்டிக்கொண்டு வந்தேன்.

டாக்டர். தாங்கள் என் விஷயத்தில் இத்தனை சிரமம் எடுத்துக்கொண்டதற்கு அதிக வந்தனம். நான் இந்தப் பையனை இரண்டு தினங்களுக்கு முன்பு யதேச்சையாகச் சந்திக்க நேரிட்டது என்று சொல்லி தோட்டவிருந்தன்று நடந்த மோட்டார் விபத்தையும் தெரிவித்தார்.

துரையவர்கள். அப்படியானால் தெய்வமே இப் பையனை உமது பெண்ணிற்குக் கூட்டிவைத்திருக்கிறது.

டாக்டர். நான் கூடியசீக்கிரம் இந்த விவாஹத்தை நடத்திவிடலாம் என்றெண்ணிக்கொண்டிருக்கிறேன். கலியாணப் பத்திரிகை தங்களுக்கு நீலகிரிக்கு வந்துசேரும். தாங்கள் அவசியம் வரவேண்டும்.

துரையவர்கள். (புன்சிரிப்புடன்) நான் கட்டாயம் வருவேன் என்று சொல்லிவிட்டுப் புறப்படுவதற்காக இருக்கையை விட்டெழுந்தார். அப்பொழுது நாயுடு அவர்களின் பங்களாத் தோட்டக்காரன் ஒருதட்டில் சில மல்சோவா மாம்பழங்களும் மாதுளம்பழங்களும் கொண்டுவந்து தன்

எஜமானிடம் கொடுத்தான். டாக்டர் அதை வாங்கி துரையவர்களின் கையில் கொடுக்க அவர் இரண்டு பழங்கள் மட்டும் எடுத்துக்கொண்டார். மெஸ்டன்துரை பாலகிருஷ்ணனையும் தன் வண்டியில் ஏறிக்கொள்ளச்சொன்னார். அதற்கு டாக்டர் "வேண்டியதில்லை நான் பையனை என் மோட்டாரில் ஏற்றி அவன் வீட்டிற்கு அனுப்புவேன்" என்று சொன்னார்.

மெஸ்டன்துரை போனவுடன் டாக்டர் நாயுடு பாலுவைத் தன் மோட்டார் வண்டியில் ஏறிக்கொள்ளச்சொல்லித் தானும் அதில் உட்கார்ந்துகொண்டார். இரண்டு நிமிஷத்தில் இருவரும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சன்னதித் தெருவில் உள்ள "பத்ம விலாஸ்" என்ற வீட்டுவாசலின் முன் போய்ச் சேர்ந்தார்கள். பாலு மோட்டாரினின்றும் இறங்கினான். டாக்டர் பாலுவைப்பார்த்து "இந்தக் கலியாணத்தை இன்னும் இரண்டு தினங்களுக்குள் நிச்சயம் செய்துவிடவேண்டும். என் மனைவியை நாளைய தினம் இங்கே அனுப்புகிறேன். உன் தாயாரிடம் கலந்து பேசிக்கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டுத் தன் பங்களாவிற்குத் திரும்பினார்.

பாலு, உள்ளேபோய்த் தன் தாயிடம் தான் காலையில் வெளியேபோய்த் திரும்பி வந்தவரை நடந்த வர்த்தமானங்களைச் சொன்னான். பத்மாவதி அம்மாள் "எல்லாம் கடவுள் செயல்" என்று நினைத்து விருப்பும் வெறுப்பும் அற்ற ஞானிபோல விளங்கினாள். பத்மாவதி அம்மாள் சென்னைக்குவந்து பதினைந்து வருடங்கள் ஆகின்றன. தன் புருஷன் இறந்தவுடன் தன் நகை நட்டுகளையெல்லாம் விற்று

ஐயாயிரம் ரூபாய்வரை பாங்கில் போட்டுவைத்திருந்தாள். சென்னையில் வீட்டுவாடகை ஜாஸ்தியென்பது யாவரும் அறிந்த விஷயம். அதை அறிந்த பத்மாவதி அம்மாள் திருவல்லிக்கேணியில் ஒரு சிறு வீட்டை விலைக்கு வாங்கினாள். அந்த வீட்டிற்குத்தான் பத்ம விலாஸ் என்று பெயர். ஒரு குடும்பம் சாதாரணமாக வசிப்பதற்கு அந்த வீடு வசதியானது. ஒரு சிறு கற்கோட்டைபோல் விளங்கினது. பத்மாவதியம்மாள் வீட்டில் குப்பைகூளமில்லாமல் தினந்தோறும் பெருக்கி மெழுகிச் சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தபடியால் அந்தக் கிரகத்தில் இலக்ஷ்மி தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தாள் என்றே சொல்லலாம்.

பாலகிருஷ்ணன். அம்மா இன்னும் இரண்டு தினங்களில் அவர்கள் கல்யாணம் நிச்சயம் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள்.

பத்மாவதி அம்மாள். அப்படியானால் நிச்சய தாம்பூலத்துக்கு வருகிறவர்களை வரவேற்று உபசரிக்கவேணும். உன் மாமனுக்கு ஒரு தந்தி கொடுத்துவிட்டுவா. நீ சாப்பிட்டுவிட்டுத் தபால் ஆபீசுக்குப் போகலாம். என்றாள்.

பாலகிருஷ்ணன் அன்று சாயங்காலம் தபாலாபீசுக்குப்போய், சேலம் டவுண் போலீஸ் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமநாயுடு என்பவருக்கு ஒரு தந்தி கொடுத்துவிட்டு வந்தான்.

ஐந்தாம் அத்தியாயம்.

மூடராஜாவும் துன்மந்திரியும்.

"தாங்கள் சொல்வதைப்பார்த்தால் அந்தப் பையன் தான் இப்பொழுது உங்கள் கல்யாண காரியத்துக்கு இடையூறாக இருக்கிறானென்று தெரிகிறது" என்றார் மானேஜர்.

ஜமீன்தார். ஆமாம் அவனைத் தொலைத்துவிட்டால் எளிதில் காரியத்தை முடிக்கலாம்.

மானேஜர். தொலைப்பதென்றால் உயிருக்கே உலை வைக்கவா, அல்லது அந்தப்பெண்ணை அவன் கலியாணம் செய்துகொள்ளாமல் இருக்கும்படியான வழியைத்தேடினால் போதுமா?

ஜமீன்தார். பாவம். அவன் உயிருக்குத் தீமை விளைவிப்பதனால் நமக்கு வரும் லாபம் என்ன? அது நமக்கே ஆபத்தாக முடிந்தாலும் முடியலாம். ஆகையால் அவன் மரகதவல்லியை விவாகம் செய்துகொள்ளாமல் இருக்கும்படியான உபாயம் செய்வதுதான் நல்லது.

மானேஜர். அந்தப் பையனுக்கு ஊர், பேர் ஒன்றுமில்லாத ஒரு அநாமதேயக்கடிதம் ஒன்று எழுதி அதில் "நீ மணந்துகொள்ளப்போகும் பெண்ணிற்கு காக்கைவலிப்பு என்ற ஒரு கெட்ட வியாதி உண்டு. நீ அதைத்தெரியாமல் படுகுழியில் விழப்போகிறாய். இந்தக்கடிதம் பார்த்தவுடன் நீ அந்தப்பெண்ணின் தகப்பனிடம் போய் அந்தப்பெண்ணை

கலியாணம் செய்துகொள்ள இஷ்டமில்லையென்று சொல்லி விடுவது நல்லது. இந்தக்கடிதத்தைப் படித்தவுடன் கிழித்தெரிந்துவிடவும்.'' இப்படிச்கு உண்மை விளம்பி என்று எழுதித் தபாலில் அனுப்பினல் அந்தப்பையன் அக்கடிதத்தைப் பார்த்து மனம் மாறுபட்டு உங்கள் அத்தானிடம் போய் அவர் பெண்ணை மணந்துகொள்ள தனக்கிஷ்டமில்லையென்று சொல்லக்கூடும்.

ஜமீன்தார். அந்தப்பையனுடைய பெயர் அவன் குடியிருக்கும் தெரு முதலிய விவரம் எனக்குத் தெரியாது. நாம் கடிதத்தை நம்முடைய ஊரில் இருந்து அனுப்பினல் நம்முடைய ஊர் தபால் முத்திரை அதில் காணப்படும். அந்த சமாசாரம் நாம் எழுதி அனுப்பினதாக வெளிவந்து விடலாம்.

மானேஜர். அப்படியானல் செங்கல்பட்டு ஸ்டேஷனுக்குப் போய் ரயில்வண்டியில் சேர்க்கப்பட்டிருக்கும் மெயில் வண்டியில் போட்டுவிடலாம். இன்ன ஊரில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்க முடியாது.

ஜமீன்தார். அதைவிட எனக்கு வேறொரு யோசனை தோன்றுகிறது. நாம் அந்தப் பையனுடைய வழிக்கே போகவேண்டியதில்லை. நமக்குக் குறியாகவுள்ளது பெண்தான். அவளை இரகசியமாக நம்முடைய கிராமத்துக்குத் தூக்கிக்கொண்டு வந்து நமது மாளிகையின் பாதாள சுரங்கத்தில் வைத்து, நம்முடைய புரோகிதரையும் கூட்டிவைத்துக்கொண்டு கல்யாணத்தை நடத்தித் தாலிகட்டிவிட்டால் அதன்பிறகு பெண் நமக்குத்தானே சொந்தம்.

மானேஜர். மஹாராஜா, தங்கள் விவாஹ முகூர்த்தம் நமது கிராமத்தில் அதிக ஆடம்பரமாக நடக்கவேணுமென்று குடிஜனங்கள் யாவரும் அதிக ஆவலாய் இருக்கிறார்கள். தாங்கள் ஒருவருக்கும் தெரியாமல் ரகசியத்தில் காரியத்தை முடிக்கப்பார்க்கிறீர்கள். தங்களுடைய கௌரவத்துக்கு அது அவ்வளவு நன்றாகத் தோன்றவில்லை.

ஜமீன்தார். நீர் சொல்வது சரிதான். ஆனாலும் கௌரவத்தையும் அகௌரவத்தையும் பார்த்தால் காரியம் எப்படி கைகூடும்.

மானேஜர். நீங்கள் இப்படி செய்வதானால் உங்கள் அத்தானுக்கும் அக்காளுக்கும் உங்கள்மேல் கோபம் அதிகரிக்குமே!

ஜமீன்தார். அவர்கள் கோபம் என்னை என்னசெய்யக் கிடக்கிறது? அந்தக்கோபம் எத்தனை நாட்களுக்கு நிலைத்திருக்கும்? நாள் செல்லச்செல்லத் தணிந்துபோகுமல்லவா?

என்று இப்படிப் பேசிக்கொண்டிருந்தபொழுது தபால் ஆபீஸ் சேவகன் ஒருவன் தந்தி ஒன்றைக் கொண்டுவந்து மானேஜரிடம் கொடுத்து ஜமீன்தாரையும் பார்த்து கைகூப்பி வணங்கினான்.

ஜமீன்தார். (மானேஜரைப்பார்த்து) தந்தி எவ்விடத்திலிருந்து வந்திருக்கிறது. யார் கொடுத்திருக்கிறார்கள்.

மானேஜர். தங்களுடைய அத்தானிடமிருந்து வந்திருக்கிறது. மரகதவல்லியின் விவாஹம் நாளைய தினம் நிச்சயதாம்பூலம். உடனே புறப்பட்டு வரும்படி எழுதியிருக்கிறது.

ஜமீன்தார். அய்யர்வாள், நம்முடைய காரியத்தை முடிப்பதற்கு இதுதான் சரியான சமயம். தாங்களும் என்னோடு வரவேண்டும்; நான் சொல்லும்விதம் நீங்கள் காரியத்தை முடித்தால் போதும்.

மானேஜர். மகாராஜா, உங்கள் கட்டளை எப்படியோ அப்படிச்செய்யக் காத்திருக்கிறேன்.

ஜமீன்தார். இன்றுமத்தியானச் சாப்பாட்டுக்கு மேல் சென்னைக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தம்செய்யும்.

மானேஜர். நம்முடன் வேலைக்காரர் இரண்டுபேர் வேண்டும். முனியன், சபாபதித்தேவன் இவ்விருவரையும் கூட்டிக்கொண்டு போகலாம் என்றெண்ணுகிறேன்.

ஜமீன்தார். சரி அப்படியே செய்யும். அவர்களிடம் சங்கதியை இப்பொழுதே சொல்லவேண்டாம். சென்னைக்குப்போய்த் தெரிவிக்கலாம் என்று சொல்லிவிட்டு சாப்பாட்டிற்காக மாளிகைக்குப் போய்விட்டார். மானேஜரும் தன் வீட்டிற்குப் புறப்பட்டார். இவர் அரியலூர் எஸ்டேட்டுக்கு மானேஜராக உத்தியோகத்துக்குவந்து ஐந்து வருஷங்களாகின்றன. இவருடைய பெயர் அனந்தராமய்யர். அரசாங்கத்தில் ரெவினியூ இலாகாவில் பதினைந்து வருஷம் உத்யோகம் பார்த்தார். 15 ரூபாய் சம்பளம் உள்ள அட்டெண்டர் வேலையில் இருந்து 150 ரூபாய் சம்பளம் வாங்கும் சப்மாஜிஸ்திரேட் உத்தியோகம்வரை படிப்படியாக உயர்ந்து வந்தார். இரண்டு கைகளாலும் இலஞ்சம் வாங்குவார். பல நாட் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்ற பழமொழியைப்போல ஒரு பெரிய வழக்கில் இவர் இலஞ்சம் வாங்கின

சங்கதி மேலதிகாரிகளுக்குத் தெரிந்து இவரை வேலையினின்றும் தள்ளிவிட்டார்கள். இவர் சப்மாஜிஸ்டிரேட் வேலை பார்த்தகாலத்தில் பொய்யை மெய்யாக்குவதிலும் மெய்யைப் பொய்யாக்குவதிலும் நரியைப் பரியாகவும் பரியை நரியாகவும் மாற்றின பரமசிவனைக் காட்டிலும் சமர்த்தர். உண்மையான குற்றவாளியை விட்டுவிடுவார். குற்றமில்லாதவர் மேல் குற்றம் சாட்டித் தண்டிப்பார். பழிபாவத்துக்கஞ்சாமல் பொய் வழக்குகளை தயாரித்து அவற்றை மாஜிஸ்டிரேட் முன்பு கொண்டுவரும் போலிஸ் புலிகளுக்கும் இவருக்கும் அதிக நேசம் இவர் செய்துவந்ததெல்லாம் மிக மோசம். பணத்திலோ இவருக்கு அளவுகடந்த பாசம். அது கடைசியில் இவருடைய வேலைக்கே நாசம்.

அனந்தராமய்யர் பலத்த சம்சாரி. ஐந்தாறு பிள்ளை குட்டிகள். இலஞ்சம் வாங்கிக் கொள்ளை அடித்து பாங்கில் போட்டிருந்த பணத்தை செலவழித்து உத்யோகத்தை மீண்டும் பெறுவதற்காக ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து அந்த வழக்கிலும் தோற்றுப்போனார். அந்த சமயம் ஜமீன்தார் அழகிரிசாமி நாயுடு தன் எஸ்டேட்டிற்கு ரெவினியூ அனுபவமுள்ள ஒரு மேனேஜர் வேண்டுமென்று பத்திரிகையில் விளம்பரம் செய்து இருந்தார்.

அனந்தராமய்யர் அந்த விளம்பரத்தைப் பார்த்து ஜமீன்தாரிடம் நேரில்போய் ரெவினியூ இலாகாவில் தான் 15 வருடம் வேலைபார்த்துவந்த பழக்கத்தைச் சொல்லி மானேஜர் உத்தியோகத்தைப் பெற்றார்.

ஜமீன்தார், மானேஜர், முனிசாமி, சபாபதி, ஆகிய நால்வரும் சென்னைமா நகருக்குச் சாயங்காலம் 6-மணிக்கு

வந்துசேர்ந்தார்கள். அரியலூர் எஸ்டேட்டிலிருந்து சென்னப்பட்டணம் ஐம்பதுமைல் தூரம் உள்ளது. ஜமீன் தார் அடிக்கடி சென்னைக்கு வரவேண்டியவராக இருந்ததால் மைலாப்பூரில் ஒரு சிறு பங்களாவை. விலைக்கு வாங்கியிருந் தார். இவர் சென்னையில் வேலைக்காரர் இருவரையும் தன் பங்களாவில் வைத்துவிட்டு மானேஜருடன் தன் சகோதரி யின் வீட்டிற்குப் போனார். கமலவல்லி அம்மாள் அப் பொழுது வீட்டில் இல்லை. தனக்கு மாப்பிள்ளையாக வரப் போகும் பையனை அன்று மெஸ்டன்துரை கூட்டிக்கொண்டு வந்தபொழுது ஜாடையாகப் பார்த்து அவன் தன் பெண் மரகதவல்லிக்கு எவ்விதத்திலும் பொருத்தமுள்ளவன் என்று கமலவல்லி சந்தோஷப்பட்டாள். நிச்சயதார்த்தத் துக்கு முன்பு பையனுடைய தாயாரையும் பார்த்துப் பேச வேண்டும் என்ற ஆவல் கமலவல்லிக்கு இருந்தது. ஆகை யால் அன்று சாயங்காலம் தன் பெட்டிவண்டியில் ஏறிக் கொண்டு ஒரு வேலைக்காரியுடன் பத்மாவதி அம்மாளின் வீட்டிற்குப் போயிருந்தாள்.

உலகத்தில் நல்ல மாமியாரும் உண்டு; கெட்ட மாமியா ரும் உண்டு. ஆனாலும் மாமியார் மெச்சின மருமகள் இல்லை என்ற ஒரு பழமொழி வழங்கிவருகிறது. தன் வீட்டில் அருமைபெருமையாய் வளர்ந்த தன் பெண் இனிமேல் ஒரு புது ஜீவியத்தை மாமியார் வீட்டில் தொடங்கவேண்டியிருப் பதால் அவளுக்கு வரப்போகும் மாமியார் எப்படிப்பட்ட குணம் உடையவள் என்பதைத் தெரிந்துகொள்ளவே கமல வல்லி இப்பொழுது வீட்டினின்றும் வெளிக்கிளம்பினாள். தன் சம்மந்தி அம்மாளைப் புதிதாக முதல்முதல் பார்க்கப் போகும்போது வெறுங்கையுடன் போவது அழகல்ல

வென்று ஒரு தட்டில் இரண்டு தார் வாழைப்பழம், கொஞ்சம் மாம்பழம், மாதுளம்பழம், முதலிய கனிவர்க்கங்களும், தன் வீட்டில் தயார்செய்த ரவாலாடு உருண்டைகளும் எடுத்துக்கொண்டு போனாள்.

பெட்டிவண்டி பத்மாவதி அம்மாளின் வீட்டுவாசலுக்கு முன் வந்து நின்றது. கமலவல்லி வண்டியிலிருந்து இறங்கி வேலைக்காரி தட்டை எடுத்துக்கொண்டு பின்னே வரத் தான் முன்னே வீட்டிற்குள் பிரவேசித்தாள். பத்மாவதி அம்மாள் அப்பொழுது நடுக்கூடத்தில் ஒரு பலகையில் உட்கார்ந்துகொண்டு கையில் ஒரு பெரிய புஸ்தகம் தாங்கி மூக்குக்கண்ணாடி போட்டுக்கொண்டு படித்துக்கொண்டிருந்தாள். தனக்கு எதிரே கமலவல்லி அம்மாள் வந்து நிற்பதை பத்மாவதி பார்த்து, பரபரப்புடன் புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டு "வரவேணும் வரவேணும்", என்று சொல்லி ஒரு நாற்காலியைக் கொண்டுவர அறைக்குள் நுழையப் போனாள்.

கமலவல்லி. (பத்மாவதியைப்பார்த்து) நீங்கள் அத்தனை சிரமப்படவேண்டாம். நான் கீழே உட்காருகிறேன். நாற்காலியிலும் சோபாவிலும் உட்கார்ந்து உட்கார்ந்து வெறுப்பு உண்டாகிவிட்டது.

பத்மாவதி. அப்படியானால் நீங்கள் தரையில் உட்கார வேண்டாம். பாய் கொண்டு வருகிறேன் என்று சொல்லி பஞ்சினும் மிருதுவான ஒரு பட்டுப்பாயைக் கொண்டுவந்து விரித்தாள். இரண்டுபேரும் பாயில் இருந்தார்கள். வேலைக்காரி தாம்பாளத்தட்டை இருவருக்கும் நடுவில் வைத்துவிட்டு வெளிப்பக்கமாய் நின்றாள். பத்மாவதி கமலவல்லியைப்

பார்த்து "நீங்கள் நான் குடியிக்கும் இக்குடிசையைத்தேடி வந்தது என்முன்னோர்கள்செய்தபாக்கியம்" என்றே சொல்ல வேணும். வேலைக்காரியிடம் சொல்லியனுப்பினால் நான் உங்களைப்பார்க்க வந்திருப்பேன்.

கமலவல்லி. நீங்கள் இந்த வீட்டைக் குடிசை என்று சொல்லிவிட்டீர்கள். நானாக்குக் கலியாணம் நடந்தவுடன் என்பெண் தங்கள்குடிசையில்தானே வாழவேணும். குடிசை, மாளிகை இரண்டும் எனக்கு ஒன்றுபோலத்தான். இடவிசாலம் இருந்து என்ன பிரயோஜனம் மன விசாலம் இருந்தால் அதுவே போதும்.

பத்மாவதி. தங்களுடைய பேச்சிலிருந்து தாங்கள் விவேகி என்று தெரிகிறது. தங்கள் பெண்ணை நான் பார்க்க விரும்பினதுண்டு. ஆனால் தங்களை இப்பொழுது பார்த்து விட்டதே போதுமானது. தாயைப்போல பிள்ளை, நூலைப் போல சீலை என்று சொல்லுவார்கள்.

கமலவல்லி. தாங்கள் பெண்ணைப் பார்க்க விரும்புவதும் அவசியமான காரியமே. நீங்கள் என்னுடன் இந்த வண்டியிலே வந்தால் பெண்ணைப் பார்த்துவிட்டுத் திரும்பி விடலாம். உங்கள் பிள்ளை வெளியே போயிருக்கிறாரோ? அவர் ஒரு சமயம் வந்துவிட்டால் காத்திருக்க நேரிடும். ஆகையால் தாங்கள் திரும்பிவரும்வரை வேலைக்காரி இங்கேயே இருக்கட்டும் வீட்டைத் திறந்து வைத்துவிட்டு நீங்கள் வரலாம்.

பத்மாவதி. தம்பி வெளியே எங்கும் போகவில்லை, ரயிலுக்குப் போயிருக்கிறான். ஏழுமணிக்கு வரும் வண்டியில் அவன் மாமன் ஒருவேளை சேலத்தில் இருந்து வரலாம்.

கமலவல்லி. அப்படியா! தங்கள் சகோதரர் சேலத்தில் இருக்கிறாரா? என்ன உத்தியோகம் பார்க்கிறார்?

பத்மாவதி. சேலம் டவுண் போலீஸ் இன்ஸ்பெக்டராகவிருக்கிறான்.

கமலவல்லி. நாம் வண்டியில் ஏறிக்கொள்வோம் நீங்களும் சீக்கிரமாகத் திரும்பவேண்டியவர்களாய் இருக்கிறீர்கள்.

பத்மாவதி. ஆமாம், நான் அங்கே அரைமணி நேரத்துக்குமேல் தாமசிக்கமுடியாது என்று சொல்லிக்கொண்டே இருவரும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். கமலவல்லி வேலைக்காரியிடம், பெரியம்மாள் திரும்ப வரும்வரைக்கும் அங்கேயே காத்திருந்து வந்தவுடன் வண்டியிலேறி வந்து சேரும்படிச்கும் கட்டளையிட்டாள். இங்கே இப்படியிருக்க ஜமீன்தார் அழகிரிசாமி நாயுடு மானேஜருடன் "கமல விலாசம்" என்னும் தன் சகோதரியின் மாளிகைக்குப போனதாகச் சொன்னது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவர் மானேஜருடன் மெத்தைக்குச் சென்றார். அங்கே கமலவல்லி காணப்படவில்லை. மரகதம் தன் அறையில் உலாவிக்கொண்டிருந்தாள். தன் மாமன் வந்ததைப் பார்த்ததும் "மாமா, வாருங்கள் இப்பொழுதுதான் வருகிறீர்களா? கூட யார் வந்திருக்கிறது" என்றாள்.

ஜமீன்தார். (மரகதத்தைப் பார்த்து) நான் இப்பொழுதுதான் வந்தேன். நம்முடைய கிராமம் மானேஜர் இவர்.

மரகதம். அம்மாள் அரைமணி நேரத்துக்கு முன்பு வெளியே போனார்கள். வருகிறசமயம் ஆயிற்று. ஜமீன்தார்

மானேஜரைக் கூட்டிக்கொண்டு கீழே இறங்கிவந்து (மானேஜரைப் பார்த்து மெல்லிய குரலில்) "அதுதான் மரகதவல்லியின் அறை. ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்" என்றார். இதற்குள் கமலவல்லியும், பத்மாதியும் வந்து சேர்ந்தார்கள். கமலவல்லி தன் தம்பி அங்கே நிற்பதைப் பார்த்தவுடன் "தம்பி நீ எப்பொழுது வந்தாய்" உனக்குத் தந்தி கிடைத்ததா?

ஜமீன்தார். இன்று மத்தியானம் கிடைத்தது. உடனே புறப்பட்டேன்.

கமலவல்லி. உன் அத்தான் ஆஸ்பத்திரில் இருந்து வருகிற சமயம் ஆயிற்று. நீ எங்கும் போகவேண்டாம். இராத்திரி இங்கேயே இருக்கலாம். என்று சொல்லிவிட்டு பத்மாவதி அம்மாளைக் கூட்டிக்கொண்டு மேல்மாடிக்குப் போனாள். பத்மாவதி அம்மாள் அம்மாளிகையின் அழகைப் பார்த்து ஆச்சரித்துடன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். கமலவல்லி மரகதத்தைக் கூட்டிக்கொண்டுவந்து பத்மாவதி அம்மாளுக்கு நமஸ்காரம் செய்யச் சொன்னாள். மரகதவல்லி நாணத்தினால் அடங்கி ஒடுங்கி அன்னம்போல் அடிபெயர்த்து வந்து பத்மாவதி அம்மாளுக்குத் தலைவணங்கிவிட்டுப் பக்கத்தில் நின்றாள். பத்மாவதி, மரகதவல்லியைப்பார்த்து "குழந்தாய் உட்காரு, நிற்க வேண்டாம்" என்று சொல்லி மரகதவல்லியின் அழகைத் தன் கண்களால் பருகிக்கொண்டேயிருந்தாள்.

கமலவல்லி. (பத்மாவதியைப்பார்த்து) மரகதம் இத்தனைநாள் என் குழந்தை. இனிமேல் உங்கள் குழந்தை.

பத்மாவதி. அதென்ன அம்படிச்சொல்கிறீர்கள் தங் களுக்கில்லாத சொந்தமா எனக்கு? அவள் எப்பொழுதும் உங்கள் குழந்தைதானே. என்னுடைய வாழ்க்கை ரொம்ப அதிசயமானது. நான் என் காலத்தை ஒருவிதமாகத் தள்ளிவிட்டேன். மாமியார், நாத்தனர் இவர்களின்கீழ் இருந்து நான் மிதிபடாதவள். அவர்களின் கொடுமை எப்படியிருக்குமென்பதும் தெரியாது.

கமலவல்லி. நான் உங்களை ஸ்தோத்திரம் செய்வ தாக நீங்கள் நினைக்கக்கூடாது. உங்களை நான் பார்த்த வுடனேயே நீங்கள் பொறுமையில் பூமிதேவி என்றும் கல்வி யில் சரஸ்வதியென்றும் நிதானித்துவிட்டேன். நல்லவர் களுக்கு எப்பொழுதும் நல்லவர்களே கிடைப்பார்கள். தெய்வ சங்கல்பந்தான் நம்மைக் கூட்டிவைத்தது.

பத்மாவதி. நீங்கள் இப்பொழுது சொன்னது சரி யான வார்த்தை. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. பொழுதுபோய்விட்டது, நான் புறப்படவேண்டுமென்று எழுந்திருந்தாள். கமலவல்லி தானும் எழுந்து, சம்மந்தி யம்மாளை வாசல்வரை கொண்டுவிட்டு வண்டியில் ஏறிக் கொண்டதும் திரும்பினாள். வெளியே உலாவிக்கொண்டு இருந்த ஜமீன்தார், தன் அக்காளிடம், தான் காலையில் வந்து அத்தானைப் பார்ப்பதாகச் சொல்லிவிட்டு மானேஜருடன் தன் பங்களாவை நோக்கிச்சென்றார்.

ஆரும் அத்தியாயம்.

நிச்சயதார்த்தமும் மெச்சிய வேஷமும்.

பத்மாவதி அம்மாளின் குமாரன் பாலகிருஷ்ணன், தன் மாமனை எதிர்கொள்ள இரயிலுக்குப் போயிருந்ததாக முந்தின அத்தியாயத்தில் சொன்னோம். பாலு ஸ்டேஷ்ணில் மணியைப் பார்த்தான். ஏழரைதான் ஆயிருந்தது. வண்டி எட்டுமணிக்கு வருகிறதென்று அங்குமிங்கும் உலாவிக்கொண்டு கூட்டத்தின் காட்சியைப்பார்த்தான். எக்மோர் ஸ்டேஷன் அதிக சுறுசுறுப்பாக விருந்தது. பல ஜாதியார்கள் தத்தம் பாஷையில் பேசும் சத்தமும் ஸ்டேஷனுக்குள்ளே டிக்கட் அறையில் பணத்தைக் கலகலவென்று எண்ணும் சத்தமும், டிக்கட்டில் டக், டக் என்று தேதி அடிக்கும் சத்தம் கடல் ஒலிபோல பேரிரைச்சலைவிளைவித்தன. அங்கொருபக்கம் வடதேசத்து லாடஜனங்கள் கருப்புக்கம்பளி மூட்டையும் கையில் காசிச்செம்பும் கக்கத்தில் நீளக்கம்பும் வைத்துக்கொண்டு டிக்கட்டு இல்லாமல் திறந்த வீடுகளில் நாய் நுழைவதுபோல் கேட்வழியாக நுழைந்து போவதையும் பார்த்தான்.

வண்டிவரும் நேரமாய்விட்டதை அறிந்த பாலு, பிளாட்பாரம் டிக்கட்டுடன் உள்ளே போனன். புருஷோத்தம நாயுடுவும் அவர் மனைவியும் அவருடன் இரண்டு போலீஸ் ஜவான்களும் வண்டியினின்று இறங்கினர்கள். புருஷோத்தம

நாயுடு பாலுவைப்பார்த்து "நீ ஸ்டேஷனுக்கு வந்திருப்பாய் என்று நான் நினைக்கவில்லை"; நிரம்ப சந்தோஷம் என்றார். ஜவான்கள் இருவரும் எஜமானுடைய பெட்டி படுக்கை முதலிய சாமான்களை எடுத்துக் கொண்டார்கள். வெளியே வந்ததும் புருஷோத்தம நாயுடு "பாலு, இரண்டு வண்டிவேணும். சேவகரும் சாமானும் ஒரு வண்டியில் நீ, நான், உன்மாமி, மூவரும் ஒரு வண்டியில் உட்காரலாம்" என்றார். பாலு உடனே 2 குதிரை வண்டிகளை வாடகைக்கு அமர்த்தினான். கால்மணி நேரத்துக்குள் திருவல்லிக்கேணிக்குப் போய்ச்சேர்ந்தார்கள். பத்மாவதி அம்மாள் சமையல் செய்து தயாராக வைத்திருந்தாள். தன் தம்பியையும் மதினியையும் அன்புடன் க்ஷேமம் விசாரித்தாள்.

நிச்சயதாம்பூலதினத்தன்று காலை பத்துமணிக்கு டாக்டர் நாயுடு தன்பந்துக்களிலும் நண்பர்களிலும் முக்கியமான சிலரைமட்டும் தன்னுடன் கூட்டிக்கொண்டார். ஜமீன்தார், மானேஜருடன் வந்திருந்தார். கமலவல்லியும் தன் தோழிமார் நாலைந்து பெண்களைச் சேர்த்துக்கொண்டாள். எல்லாரும் மேளதாளம், பாண்டு வாத்தியத்துடன் மெதுவாகக் கால் நடையாகவே மாப்பிள்ளை பாலகிருஷ்ண நாயுடுவின் கிரகத்துக்குப் போனார்கள். கமலவல்லியின் தோழிமார் இருவர் மஞ்சள், குங்குமம், தேங்காய், வெற்றிலை பாக்கு, சந்தனக்கும்பா, பழக்குலை, சர்க்கரை, கற்கண்டு வைக்கப்பட்ட தட்டுகளை எடுத்துக் கொண்டார்கள். கமலவல்லி வைத்துக்கொண்டிருந்த தாம்பாளத்தில் ஒருபெரிய வெள்ளிக்கிண்ணம் நிறைய திரட்டுப்பாலும், பையனுக்குப்பட்டில் ஜரிகைபோட்ட வேஷ்டியும் அங்கவஸ்திரமும் இருந்தது. புருஷோத்தம நாயுடுவும் பாலகிருஷ்ணனுடைய நண்பர்க

ளில் இரண்டொருவரும் நிச்சயதாம்பூலம் செய்யவந்த கன வான்களை வரவேற்று உபசரித்தார்கள். வந்தவர்களுக்குச் சந்தனம், தாம்பூலம், சர்க்கரை வழங்கப்பட்டவுன் பால கிருஷ்ணனைப் புதியபட்டாடைகளை அணியச்செய்து, அவ னுக்குப்பாலும் பழமும் கொடுக்கப்பட்டது. விவாஹத்திற்கு நாளும் குறிக்கப்பட்டவுடன் விருந்துச்சாப்பாடு சம்பிரமாக நடந்தது. டாக்டரும் கமலவல்லியும், தங்களுடன் வந்த பிரபுக்களையும் பெருமாட்டிகளையும் கூட்டிக்கொண்டு திரும் பினார்கள்.

சென்னையில் "கர்நாடக சங்கீத சபா" என்ற பெய ருடைய ஒரு சபை இருந்தது. அது ஸ்தாபிக்கப்பட்டுப் பத்து வருஷங்களாயின. அதில் பெரிய உத்தியோகஸ்தர் களும், வக்கீல்களும் அங்கத்தினராகச் சேர்ந்திருந்தார்கள். அந்தச்சபைக்கு டாக்டர் நரசிம்மலு நாயுடு கௌரவ காரிய தரிசியாக (Honarary Secretary) இருந்துவந்தார். அந்தச் சபையார் மாதத்துக்கு ஒரு நாடகம் அல்லது சங்கீதக் கச்சேரி நடத்தும் வழக்கம் உண்டு. சபையின் அங்கத் தினர்களில் அநேகர் ஆண், பெண் வேஷம்பூண்டு நடிக்கவும் அழகாய்ப் பாடவும் திறமைவாய்ந்து இருந்தார்கள். வயிற் றுப்பிழைப்புக்காக சில கம்பேனியார் நடத்திக்காட்டும் தெருக்கூத்தைப்போலிராமல் இச்சபையார் நடாத்தும் நாட கங்கள் ஒழுங்காயும், நவரச அலங்காரங்கள் பொருந்தியும் இருந்தன. ஸ்திரீவேஷம்பூண்டு நடிப்பதில் நரசிம்மலு நாயுடு அதிகப் பிரசித்திபெற்றிருந்தார். ஆடவர்களும் கண்டு மோகம்கொள்ளும்படியான இயற்கையழகு வாய்ந்த வர். குழலினும் யாழினும் இனிமையாய்த் தன் மெல்லிய குரலால் பாடக்கூடியவர். நாடகம் நடிக்கும்போது இவர்

செய்யும் அபிநயங்களைப் பார்த்தால், பெண்களும் மூக்கில் விரலைவைத்து அதிசயப்படுவார்கள்.

மரகதவல்லியின் நிச்சயதார்த்தம் நடந்த நாள் இந்தச் சபையார் நாடகம் நடத்தும் தினமாக ஏற்பட்டது. ராவ். பஹதூர் பி. சம்பந்த முதலியார் அவர்கள் எழுதியுள்ள லீலாவதி சுலோசனா என்னும் நாடகத்தை அன்று நடத்தத் தீர்மானித்து அதை வெளிஜனங்களுக்கும் விளம்பரப்படுத்தினார்கள்.

நாடகம் நடித்துக்காட்டுவதும் அதை ஜனங்கள்போய்ப் பார்ப்பதும் நல்ல வழக்கத்தைச் சேர்ந்ததல்ல வென்பது அநேகருடைய கொள்கை. நாடகத்தில் வேஷம்போட்டு ஆடுபவனை இழிவாகக் கூறுவது கொஞ்சகாலத்துக்கு முன் ஜனங்களின் வழக்கமாய் இருந்தது. இப்பொழுது பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் நாடகசபை ஏற்படுத்தி தாங்களே வேஷம்போட்டு ஆடத்தொடங்கின பிறகு நாடகத்தொழிலுக்கும் ஒரு புதிய கௌரவம் உண்டாயிருக்கிறது

நாடகம் என்றால் சிலருக்குச் சாப்பாடுகூட வேண்டாம். கையில் காசில்லாதபோனாலும் கடன்வாங்கிக்கொண்டாவது முதலில் போய் ஆஜராகிவிடுவார்கள். ஆனால் படித்த அறிவாளிகள்பலர் நாடகம் பார்ப்பதை வெறுக்கிறார்கள். என்ன நாடகம் வேண்டியிருக்கிறது? இப்பிரபஞ்சமே ஒரு நாடகசாலை. விடிந்தெழுந்தால் பொழுது சாயும்வரை பட்டப் பகலிலேயே ஒவ்வொரு வீட்டிலும் அற்புதமான நாடகங்கள் நடைபெற்றுவருகின்றன. பக்கத்துவீட்டுப் பாகீரதி

தங்கச்சங்கிலி செய்துபோட்டிருப்பதைப்பார்த்து அதைப் போல தானும் செய்து போட்டுக்கொள்ளவேணுமென் றெண்ணி தன் புருஷன் வீட்டுக்கு வந்தவுடன் அவனோடு மல்யுத்தம் செய்யும் மங்கையர்கள் எத்தனைபேர்? பாகீரதி யின் புருஷனுக்குப் பத்துவேலி நிலமிருக்கிறது. தன் புருஷனுக்குப் பத்து ரூபாய்ச் சம்பளத்தைவிட்டால் வேறு கதியில்லையென்பதைச் சில பெண்கள் உணர்கிறதில்லை.

சில வீடுகளில் படித்த புருஷனும் படியாத பெண்ணும் கூடிவாழ்வது ஒரு அற்புத நாடகம். இந்தப்பெண்களுக்குப் படிப்புவாசனை இல்லாமற்போனாலும் வாய்மட்டும் அதிகத் திற்கு வளர்ந்திருக்கும். புருஷன் ஒன்று சொன்னால் மனைவி ஒன்பது சொல்வாள்.

"அதிகப்பேச்சுக்காரி அவள்பெரும் வம்பி
ஆயிரமானாலும் அவள்வேண்டாம் தம்பி"

என்றார் ஸ்ரீமான் வேதநாயகம் பிள்ளையவர்கள். புருஷன் இறகு (pen) எடுத்துக்கொண்டுவாவென்றால் மனைவி விறகு எடுத்துக்கொண்டு போகிறாள். புருஷன் தன் கணக்குகளை கூட்டிப்பெருக்க உட்காரும் சமயம் மனைவியும் தன் வீட் டைக் கூட்டிப்பெருக்கத் துடைப்பமும்கையுமாய் நிற்கிறாள். புருஷன் உடுப்பு எடுத்துக்கொண்டுவா என்றால் மனைவி அடுப்பு ஊதப்புறப்படுகிறாள்.

இன்னும் சில வீடுகளில் மனைவியானவள் புருஷன் செய்யவேண்டிய அதிகாரத்தையெல்லாம் தானே செய்து விடுகிறாள். தான் புருஷனுடைய கட்டளைக்கடங்கி நடக்க வேண்டியவள் என்பதை மறந்து குருவுக்கு மிஞ்சின சிஷ

னைப்போல் தன் கணவனுக்கே புத்தி சொல்லவருகிறாள். அடுப்பண்டையிலிருந்து அழகாய்ச் சமைக்கவேண்டியதை விட்டு படிப்பறையில் புகுந்து பத்திரிகையைப் பார்க்கிறாள். புருஷன் பூனைபோல உள்ளே உட்கார்ந்திருக்கையில் மனைவி யானைபோலத் தெருவாசலில் நின்றுகொண்டு அசைந்தாடு கிறாள். இந்த மாதிரி வீட்டுக்கு வீடு எத்தனையோ நாடகக் காட்சிகள் நடக்கின்றன. பரபஞ்ச நாடக லீலா விநோதம் இவ்வாறிருக்க, நாம் இதை வளர்க்காமல் கதையைத் தொடங்குவோம்.

ஜமீன்தார் அழகிரிசாமி நாயுடு, மானேஜர் அனந்தராமய்யர், முனிசாமிக் கோனார், சபாபதித் தேவன் ஆகிய நால்வரும் மைலாப்பூர் பங்களாவில் பிற்பகல் நான்கு மணிக்குக் குசு குசு வென்று சில சங்கதிகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இரவு எட்டு மணிக்கு டாக்டர் நாயுடு அன்று நாடகத்தில் சுலோசனை வேஷம் பூண்டு ஆக்ட் செய்வதற்கு வேண்டிய உடைகளையும், தன் மனைவினுடைய காசுமாலை, சங்கிலி காப்பு முதலிய ஆபரணங்களையும் எடுத்துத்தன் தோற்பெட்டியில் வைத்துக் கொண்டார். அப்பொழுது அவருடைய அருமைக் குமாரத்தி மரகதவல்லி வந்து "அப்பா, நீங்கள் நாடகத்தில் பெண் வேஷம்போட்டு நடிப்பதை நானும் அம்மாவும் பார்க்க வரலாமா?

டாக்டர். நீங்கள் அங்கே வந்தால் நான் சரியானபடி ஆக்டுசெய்ய மனம் செல்லாது என்பேர் கெட்டுவிடும்.

மரகதம். ஆனால் உங்கள் வேஷத்தை நாங்கள் எப்பொழுது பார்த்து சந்தோஷப்படுவது? ஊரார் எல்லாரும்

பார்த்து மகிழும்போது நானும் அம்மாவும் மட்டுமோ பாவம் செய்தவர்கள்.

டாக்டர். குழந்தாய், அப்படியானால் நான் இன்று நாடகம் முடிந்தவுடன் என் வேஷத்தைக்கலைக்காமல் அப்படியேவந்து உங்களுக்குக் காட்டுகிறேன்.

மரகதம். அப்பா, நாங்கள் அதிகநேரம் விழித்துக் கொண்டு, காத்திருக்கவேண்டுமே!

டாக்டர் எங்கள் சபையின் நாடகம் தெருக்கூத்தென்று எண்ணிவிட்டாயா? மணி 12 அடித்தவுடன் நாடகம் முடிந்துவிடும். உடனே 'இரண்டு நிமிஷத்துக்குள் நான் வந்துவிடுவேன். என்று சொல்லிக் கொண்டிருந்தபோது ஜமீன்தார் 'அங்கே வந்தார். ஆனால் டாக்டர் சொன்ன வார்த்தைகள் அவர் காதில் விழவில்லை. "அழகிரி, சரியான சமயத்தில் நீயும் வந்தாய். சாப்பிட உட்காரலாம் வா" என்றார் டாக்டர். இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். டாக்டர் சாப்பிட்டுக்கொண்டே தன் மைத்துனனைப்பார்த்து "அழகிரி, இன்று எங்கள் சபையின் நாடகம், நீ பார்க்க வருகிறாயா?

ஜமீன்தார். அத்தான், நான் நாடகம்பாக்கும் வழக்கமில்லையே!

டாக்டர். யாரிடம் காதுகுத்துகிறாய். நாடகம் பார்ப்பதற்கென்று இராத்திரி காலங்களில் நீ உன் கிராமத்திலிருந்து சென்னைக்கு வருவதுண்டு. இப்பொழுது நல்ல பிள்ளையாக மாறிவிட்டாய் போலும்.

அழகிரி. நீங்கள் விரும்பிக் கூப்பிடுவதால் நான் வருவதற்குத் தடையில்லை.

டாக்டர். அடடா, என் கட்டாயத்திற்காக வரவேண்டாம், என்ருர்.

இவ்விதமாக இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டெழுந்தார்கள். அழகிரிசாமி நாயுடு டாக்டரைப் பார்த்து "அத்தான், என்னுடைய மானேஜர் என் பங்களாவில் இருக்கிருர். அவர் உங்கள் சபையின் நாடகம் பார்த்ததில்லை. நான் அவரைக் கூட்டிக்கொண்டு பத்துமணிக்குக் கொட்டகைக்கு வருகிறேன்.

டாக்டர். உன் இஷ்டம் எப்படியோ அப்படிச்செய். உனக்கு டிக்கட்டுகள் வேண்டாமா? நீ விலைக்கு வாங்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லி இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகளைக் கொடுத்தார்.

எட்டரை மணிக்குள் கொட்டகையில் கூட்டம் நிறைந்துவிட்டது. நாற்காலி, பெஞ்சி, தரை என்ற மூன்று வகுப்புகளிலும் உட்காருவதற்கு இடமில்லை. ஜமீன்தாரும் மானேஜரும் பத்து மணிக்குமேல் நாடகக்கொட்டகைக்கு வந்து ஒருமணிநேரம் இருந்து பார்த்துவிட்டு வெளிக்கிளம்பினர்கள். அவர்கள் பேருக்கு நாடகம்பார்க்க வந்தார்களேதவிர மனம் முழுதும் வேறிடங்களில் சஞ்சரித்தது. வெளியேறின ஜமீன்தாரும் மானேஜரும் டாக்டருடைய பங்களாவுக்கு வந்தார்கள். ஜமீன்தார், வாசற்பக்கம் கிடந்த ஒரு சிறு கட்டிலில் சாய்ந்தார். அன்று பகல்முழுதும் வெயிலின் கொடூரம் அதிகம். இரவிலும் காற்றென்பது கொஞ்சமேனும்

வீசவில்லை. பங்களாவைச்சுற்றி இருந்த மரங்களெல்லாம் தங்கள் கிளைகளையும் இலைகளையும் அசைக்காமல் தவம்புரியும் மௌனயோகிகளைப்போலிருந்தன. ஜமீன்தார் 12-மணி அடித்தவுடன் மானேஜரையும் வேலைக்காரர்களையும் எழுப்புவதாகச்சொன்னார். அவர்கள் திண்ணையின் ஒருபுறம் படுத்தார்கள்.

தன் தம்பியும் அவனுடைய மனிதரும் வெளியில் படுத்திருக்கும் சங்கதி கமலவல்லிக்குத்தெரியாது. தோட்டக்காரன் ஒருவன் வெளித்திண்ணையில் காவலுக்காகப் படுத்திருப்பது வழக்கம். 11 மணிக்கு இவர்கள்வந்ததும் அவனுக்குத்தெரியும். தன்எஜமானியும் தம்பியும் அவருடையமனிதர்களும் என்பதை அவன் அறிந்தவனாகையால் அவர்கள் அங்கே படுத்திருப்பதைப்பற்றி அவன் சந்தேகப் படவில்லை.

மரகதவல்லி எப்பொழுதும் தன் அறையில் படுத்துத் தூங்குவது வழக்கம். அன்று தன் தகப்பனார் நாடகத்துக்குப் போய்விட்டதாலும், தன் தாய் தனியாகப் படுக்க வேண்டியிருந்ததினாலும் தாயும் மகளும் டாக்டருடைய அறையில் படுத்தார்கள்.

மரகதவல்லி. அம்மா, தூங்கிவிடாதே, அப்பா பெண் வேஷத்தோடு 12-மணிக்கு வந்துவிடுவார். நாம் அதைப் பார்த்துவிட்டுத் தூங்கலாம்.

கமலவல்லி. உனக்குப் பைத்தியமா என்ன; நீ கேட்டதற்கு அவர் விளையாட்டாகச் சொன்னார். 12-மணிவரை விழித்திருந்தால் உடம்பு கெட்டுப்போகும். பேசா

மல் படுத்துத்தூங்கு என்றாள். மரகதவல்லி அதற்குமேல் பேசவில்லை. இருவரும் நன்றாய்த் தூங்குகிறார்கள். மணி 12 அடிக்கும் சமயம் தென்றற்காற்று மெல்லென வீசத் தொடங்கிற்று. ஜமீன்தாருக்கும் தன்னை அறியாமலே தூக்கம் வந்துவிட்டது. நித்திரையென்பது நாம் நினைத்த போது வருவிக்கவும் நீக்கவும்கூடிய ஒரு சாமான் அல்ல. உலகத்தில் மனிதர்கள் நித்திரைக்கு வசப்பட்டிருக்கிறார் களே ஒழிய நித்திரை மனிதனுடைய வசத்தில் கட்டுப்பட் டிருக்கவில்லை. இது தெய்வ சிருஷ்டியின் அமைப்பு. ஞானிகள்மட்டுமே தூக்கத்தை ஜயித்திவர்கள். அவர்கள் தூங்கினாலும் தன்னறிவோடு தூங்குவார்கள். அதற்குத் தான் யோகநித்திரையென்று பெயர். "தூங்காமற் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்" என்பது ஆன்றோர் வசனம். இதுநிற்க, நித்திராதேவி ஜமீந்தாரிடம் நெருங்கி அவரைத் தன்வசப்படுத்திக்கொண்டது.

டாக்டர் நாயுடு நாடகம் முடிந்ததும், தான் மரகதத்தி னிடம் சொன்னபிரகாரம் தன் வேஷத்தைக் கலைக்காமலே அதை அவளுக்கும் தன் மனைவிக்கும் காண்பிக்கும்பொருட்டு வேகமாக வீடுவந்தார். நேராக மெத்தைக்குப்போய் மரக தத்தின் அறைக்குள் நுழைந்தார். அவள் அங்கு இல்லை. தன் அறைக்குள் வந்து பார்த்தார். தாயும் மகளும் அயர்ந்து தூங்குவதைக் கவனித்தார். டாக்டருக்கு அவர்க ளுடைய தூக்கத்தைக்கெடுக்க விருப்பமில்லை. அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. காலை ஐந்து மணிக்கு இவர் கள் எழுந்திருப்பார்கள். அப்பொழுது இந்த வேஷத்தைக் காட்டலாம் என்றெண்ணி தன்னைத் தூக்கம் ஒருபுறம்

பிடித்து அசைத்ததனுல் மரகதத்தின் அறையில் அவள் படுக்கும் மஞ்சத்தில் சாய்ந்தார். அடுத்த நிமிஷம் தூங்கி விட்டார்.

ஜமீன்தார் ஏதோ நினைத்துக்கொண்டவர்போல் சட்டென்று எழுந்து அடடா என்னகாரியம் செய்துவிட்டோம். நம்மை அறியாமலே தூங்கிவிட்டோமே ஒன்று தன் கையில் இருந்த டார்ச் லைட்டினுல் கைக்கடியாரத்தில் மணி பார்த்தார். $12\frac{1}{2}$-மணி ஆயிருந்தது. இதுதான் சரியான சமயம் என்றெண்ணி படுத்துத்தூங்கிக்கொண்டிருந்த மானேஜரையும் வேலைக்காரர்களையும் சந்தடிசெய்யாமல் எழுப்பினுர். அவர்கள் மூவரும் எழுந்து மெத்தைப்படிகளில் ஏறி மேலே போனுர்கள். மானேஜரும் வேலைக்காரர்களும் மரகதவல்லியின் அறைக்குள் பிரவேசித்தார்கள். மரகதவல்லி தன் தாயுடன் படுத்துறங்தும் சங்கதி மானேஜருக்கு எப்படித் தெரியும்? பெண்வேஷத்தோடு தூங்கிக்கொண்டிருந்த டாக்டரை மரகதவல்லியென்றெண்ணி மானேஜர் தன்னிடம் வைத்திருந்த ஒரு மயக்க மருந்தை டாக்டர் மூக்கில் காட்டினுர். உடனே மூவருமாக அவரைத் தூக்கிக்கொண்டு வந்து கீழே இறங்கினுர்கள். ஜமீன்தார் தன் மோட்டாரை ஆயத்தப்படுத்தி அதை ஓட்டுவதற்காக முன்பக்கமாய் உட்கார்ந்தார். டாக்டரை மோட்டாருக்குள் கொண்டு வந்து படுக்கவைத்தவுடன் ஜமீன்தார் அதை வேகமாகச் செலுத்தினுர். ஒரு வேலைக்காரன்மட்டும் ஜமீன்தாரின் பக்கத்தில் இருந்துகொண்டான். மானேஜரும் மற்ருெரு வேலைக்காரனும் ரயில்மார்க்கமாய் வருவதாகச் சொன்னுர்கள்.

மோட்டார் காற்ருய்ப் பறந்தது. இரண்டுமெணி நேரத்துக்குள் அரியனூர் வந்துசேர்ந்து, ஜமீன்தார் டாக்டராகிய மரகதவல்லியைத் தன் மாளிகையின் பாதாள சுரங்கத்திலுள்ள ஒரு அறையில், சீதாப்பிராட்டியை இராவணன் அசோகவனத்தில் சிறைவைத்ததுபோல, ஒரு கட்டிலில் படுக்கவைத்துக் கதவுகளைப்பூட்டி சாவியைத் தன்னிடமே வைத்துக்கொண்டார். உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா? மரகதவல்லி இனிமேல் எங்கே ஓடமுடியும்? என்று எண்ணிக்கொண்டே ஜமீன்தாரும் படுக்கையில்படுத்துத் தூங்கினர்.

ஏழாம் அத்தியாயம்.

கூண்டில் அடைபட்ட புலி.

டாக்டர் நரசிம்மலு நாயுடு காலை 5 மணிக்கு எழுந்திருக்கும் சுபாவம் உடையவர். சூரியோதயத்துக்கு முன்பே அவருக்கு விழிப்பு வந்து விட்டது. கட்டிலில் படுத்த வண்ணம் கண்களைத் திறந்தார். பெண் வேஷத்துடன் வெகு நேரம் இருப்பது அவருக்கு அதிக வேதனையாயிருந்தது. மரகதவல்லியிடம் தன் வேஷத்தைக் காட்டிவிட்டு சீக்கிரம் உடைகளை மாற்வேண்டும் என்றெண்ணி கட்டிலிருந்து எழுந்திருந்தார். அப்பொழுதுதான் படுத்திருந்தது மரதவல்லியின் அறையல்ல. என்பதை உணர்ந்து "இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது. நான் இங்கே எப்படி வந்தேன், இது கல்கத்தா இருட்டறைபோல் இருக்கிறதே" என்றெண்ணி கதவைத் திறப்பதற்காக கதவண்டைபோய் அதைப்பிடித்திழுத்தார். அது வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருந்ததால் திறக்க முடியவில்லை. தன்னை இரவில் யாரோ தூக்கிக் கொண்டுவந்து சிறை வைத்திருக்கிருர்களென்று அவருக்கு நன்ருய் விளங்கிற்று. "ஒருசமயம் திருடர்கள் புகுந்து, என்நகைகளை அபகரிக்க எண்ணி தூக்கிக்கொண்டு வந்து இந்த இடத்தில் வைத்திருக்கலாம்" என்றெண்ணமிட்டுக்கொண்டே அந்தச் சிறுஅறையை நன்ருய் உற்று நோக்கினர். சுவர்கள் கருங்கற்களினுலும் சுண்ணும்பினுலும் கட்டப்பட்டு கதவும் அதிக உறுதியாகக் காணப்பட்டது. கிழண்டைச் சுவற்றின்மேல் அதிக உயரத்தில் ஒ

சிறு ஜன்னல் கதவுகளின்றி இரும்புக்கம்பிகளில் வைக்கப் பட்டிருந்தது. அந்த ஜன்னல் வழியாகத்தான் காற்றும் வெளிச்சமும் வந்தது, தன்னைத் தூக்கிக் கொண்டுவந்து இந்த அறையில் அடைத்து வைத்தவர்கள் யாராகவிருக்க லாம் என்று தன் புத்திக்கெட்டினமட்டும் ஆலோசித்துப் பார்த்தும் டாக்டருக்கு விளங்கவில்லை. "நான் இப்பொழுது எப்படி வெளியேறிச் செல்வது என்பதைப்பற்றி ஆலோ சிக்கவேண்டும். இந்தப் பெண் வேஷமல்லவா எனக்குப் பெரியகஷ்டத்தை உண்டாக்கினது" என்று சொல்லித்தன் கழுத்திலும் கைகளிலும் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றினார். அதன் பிறகு ரவிக்கை, புடவை முதலிய பெண் உடைகளையும் களைந்தார். உடம்பில் ஒரு பனிய னும் இடுப்பில் மல்வேஷ்டியும் தரித்திருந்தபடியால் இவ ருக்கு ஆண் உடை அவசியமில்லாதிருந்தது. நகைகளைப் புடவையின் ஒரு தலைப்பில் நன்ருய் முடிந்து எல்லாவற்றை யும் ஒருசிறு மூட்டையாய்க் கட்டி கட்டிலில் வைத்தார் கூண்டில் அடைபட்ட புலியைப்போல் அந்த அறையைச் சுற்றி அங்குமிங்கும் உலாவினர்.

டாக்டருடைய நிலைமை இப்படியிருக்க ஜமீன்தார் சூரிய உதயமாகி ஏழுமணி அடித்தபிறகுதான் எழுந்திருந் தார். உடனே மரகதவல்லியின் ஞாபகம் வந்தது. "நான் திருட்டுத்தனமாய்த் தூக்கிக்கொண்டு வந்ததைப்பற்றி அவளுக்கு என்மேல் அதிக கோபமிருக்கலாம். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தணிக்கவேண்டும். சென்னையில் மரகதத் தைக் காணவில்லையென்று அக்காளும் அத்தானும் எங் கெங்கே தேடுகிருர்களோ! இந்தக்காரியம் செய்தவன்

நானே என்பதை அக்காள் அறிந்தால் என்னைப்பற்றி எவ்வளவு கேவலமாக நினைப்பாள். அதுமட்டுமல்ல என் பெருமைக்குத் தகுந்த விதமாக நான் கலியாணத்தைப் பஹிரங்கமாகவும் ஆடம்பரமாகவும் நடத்தாமல் இரகசியத்தில் நடத்தி அந்த சங்கதி என் ஜனங்களுக்குத் தெரிந்தால் அவர்கள் என்னை மதிப்பார்களா? ஒருபெண்ணின் நிமித்தம் என்மதிப்பையெல்லாம் இழக்கவேண்டியிருக்கிறது,,' என்ற பலவித எண்ணங்கள் அவர் மனதில் உதித்து அவரை வதைத்தன. ஒரு காரியத்தைச்செய்ய தொடங்கு முன்பே தீரயோசிக்கவேண்டும். தொடங்கினபின் ஆலோசிப்பதில் பயனில்லை.

"எண்ணித்துணிக கருமம், துணிந்தபின்
எண்ணுவமென்பதிழுக்கு" என்றும்
"நுண்ணிய கருமமும் எண்ணித்துணி" என்றும்
பெரியோர்கள் பாடியிருக்கிறார்கள்.

ஜமீன்தார் மரகதக்கிளியைக் கூண்டிலிருந்து திறந்து வெளியே விடுவோம் என்ற எண்ணத்துடன் பூமிக்குக் கீழேயுள்ள பாதாள சுரங்கத்துக்குப் படிகள் வழியாய் இறங்கினார். அந்த அறை பூமிமட்டத்திலிருந்து 25 அடிக்குக்கீழே கட்டப்பட்டிருந்தது. யாரோ ஒருவர் பூட்டைத் திறக்கும் சத்தம் உள்ளே இருந்த டாக்டருக்கு கேட்டது. "இப்பொழுது என்ன ஆபத்து சம்பவிக்குமோ எதுவந்தாலும் வரட்டும்" என்றெண்ணி கட்டிலின் ஓரமாய் நின்றார். ஜமீன்தார் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தவுடன் மரகதவல்லிக்குப் பதிலாகத் தன் அத்தான் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். தான் காண்பது கனவோ, நனவோ எனமயங்கினார் "கிணறு வெட்டப்

பூதம் புறப்பட்டது போலாயிற்றே" மானேஜரும் வேலைக்காரரும் நம்மை மோசம் செய்துவிட்டார்களே" என்று வருந்தினார்.

டாக்டர், தான் எதிர்பாராதவண்ணம் தன்மைத்துனன் நுழைந்ததைப்பார்த்து "அழகிரி, சமயசஞ்சீவியைப்போல் நீ இப்பொழுது இங்கே எப்படி வந்துசேர்ந்தாய்? என்னை நேற்று இரவு நான் தூங்கிக்கொண்டிருந்தபொழுது திருடர்கள் யாரோ தூக்கிக்கொண்டுவந்து அடைத்து வைத்திருப்பதாக இதுவரை எண்ணிக்கொண்டிருந்தேன். நீ இப்பொழுது கதவைத்திறந்துகொண்டு நுழைந்ததைப் பார்த்தால், நீ இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக நினைக்கவேண்டியிருக்கிறது. இது யாருடைய வீடு? நான் இங்கே எப்படி வந்தேன்? உனக்குத் தெரிந்திருக்குமானால் நீ சொல்வாய் என்று நம்புகிறேன்" என்றார். அழகிரிசாமி நாயுடு, தான் இனிமேல் ஒன்றையும் மறைக்க முடியாதென்றெண்ணி தன் அத்தானைப் பார்த்து "அத்தான், நான் தவறுதலாய் ஒரு காரியத்தை ஆத்திரப்பட்டு செய்துவிட்டு இப்பொழுது பச்சாதாபப்படுகிறேன். நான் செய்த குற்றத்தை கௌரவத்தோடு தங்கள் முன்னிலையில் ஒப்புக்கொள்வதே நல்லது. நான் அப்படிச் செய்யும்பக்ஷத்தில் தங்களுடைய மன்னிப்பும் கிடைக்குமென்று உறுதியாய் நம்புகிறேன்" என்று தைரியத்தோடு சொன்னார்.

டாக்டர் அதற்கு மறுமொழியாக தன் மைத்துனனைப் பார்த்து "என் அன்புள்ள அழகிரி, நீ செய்த குற்றம் எதுவானாலும் என்னிடம் தெரிவிக்கலாம் உன்னைப்பார்க்கிலும் வேண்டியவர்கள் இவ்வுலகத்தில் எனக்கு ஒருவரும்

கிடையாது. நீ செய்தது வாஸ்தவத்தில் குற்றமேயானால் நான் உன்னை மன்னிக்கத்தடையில்லை" என்று சொன்னார். அழகிரிசாமி நாயுடு "அத்தான், நான் செய்த காரியத்தை என்னவென்று சொல்வேன். தாங்கள் என்னுடைய விவாகத்தைக் குறித்து கவனம் செலுத்தவில்லையென்றும், தங்கள் பெண் மரகதவல்லியை எனக்கு விவாஹம் செய்துகொடுக்கவில்லையென்றும் தங்கள்பேரில் உள்ள கோபத்தினால், மரகதத்தை ரகசியமாய்த் தூக்கிக்கொண்டுவந்து விவாகம் செய்துகொள்ளலாம் என்ற எண்ணத்துடன் இக்காரியம் செய்தேன். இப்பொழுது "நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது" என்ற பழமொழி போலாயிற்று. என்று தன் கண்களில் நீர்ததும்ப மொழிந்தார்.

டாக்டர் நரசிம்மலு நாயுடு "அழகிரி, என்னுடைய பெண் வேஷமே என் பெண்ணினுடைய மானத்தைக் காத்தீது. நீயும் உன் ஆட்களும் நேற்றிரவு என்னைக் கொண்டுவருவதற்குப் பதிலாக, மரகதவல்லியைக்கொண்டு வந்திருக்கும் பட்சத்தில் அது உண்மையாகவே நான் மன்னிக்கக்கூடாத ஒரு குற்றமாகும். அப்படி ஏற்படாமல் தெய்வம் என்சார்பில் இருந்ததைப்பற்றி சந்தோஷப்படுகிறேன். இதைக்குறித்து நீ மனம் வருந்தவேண்டாம். நடந்த விஷயத்தைக் கனவாக எண்ணி நான் மறந்துவிடுகிறேன். உனக்கும் இன்னும் ஒருவாரத்துக்குள் ஒரு பெண்ணைத்தேடி நிச்சயம்செய்து மரகதவல்லியின் கலியாணத்துடன் உன் விவாவகத்தையும் சேர்த்து சென்னையிலேயே நடத்துகிறேன்" என்று பெருந்தன்மையாகப்பதில் அளித்தார். ஜமீன்தார் மீண்டும் தன் அத்தானைநோக்கி "தாங்கள்

இந்த சங்கதியை அக்காளிடமும் மரகதத்தினிடமும் தெரிவிக்காமல் இருக்கும்படி தங்களை நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்.

டாக்டர் "நீ அதைப்பற்றி சொல்லவேணுமா? உனக்கு வந்த அவமானம் எனக்குத்தானே. நான் அவர்களிடம் வேறுவிதமாகச் சங்கதிகளைச் சொல்லிவிடுகிறேன். நான் இந்த நிமிஷமே ஊருக்குப்போய்ச்சேரவேண்டும். வீட்டிலும் ஆஸ்பத்திரியிலும் என்னைத் தேடிக்கொண்டிருப்பார்கள். உன் மோட்டாரைக் கொண்டுவரச்சொல். நான் அதில் ஏறிக்கொண்டு போகிறேன்'' என்றார்.

ஜமீன்தார். "அத்தான், தாங்கள் ஸ்நானம்செய்து காப்பி சாப்பிட்டுவிட்டுப் புறப்படலாம். இது என் மாளிகையின் பாதாள அறை. நாம் மேலே போகலாம் வாருங்கள். வெந்நீர்போட்டு தயாராகவிருக்கிறது. நீங்கள் ஸ்நானம் செய்யலாம்.''

டாக்டர். நான் வெந்நீரில் ஸ்நானம்செய்யும் வழக்கமில்லை. குளிர்ந்த ஜலமே போதுமானது என்று பேசிக்கொண்டு இருவரும் படிகளின்வழியாய் ஏறி மேலே போனார்கள்.

பத்துமணி அடிக்கும் சமயம் டாக்டர் தன் மைத்துனனுடைய மோட்டாரில் ஏறிசகொண்டு சென்னையிலுள்ள தன் பங்களாவிற்குப் போய்ச்சேர்ந்தார். கமலவல்லியும் மரகதவல்லியும் அப்பொழுது மாடியில் இருந்தார்கள். கையில் ஒரு சிறு மூட்டையுடன் தன் கணவன் வருவதைப் பார்த்த கமலவல்லி "நேற்று நாடகத்துக்குப் போனவர்கள்

இப்பொழுதுதான் வருகின்றீர்களா? காலையில் எழுந்திருந்து உங்களைக் காணுமல் நானும் குழந்தையும் மனம் துடித்துக் கொண்டிருக்கிறோம். ஆஸ்பத்திரியில் இருந்து 2 கம்பவுண்டர்கள் உங்களைத் தேடிக்கொண்டு வந்தார்கள். நீங்கள் இப்பொழுது எங்கேயிருந்து வருகிறீர்கள்.

டாக்டர். "கமலா, நேற்று இராத்திரி 12-மணிக்கு நாடகம் முடிந்தவுடன் என் வேஷத்தைக் கலைக்காமல் உனக்கும் குழந்தைக்கும் அதைக்காட்டவேண்டுமென்ற ஆசையுடன் புறப்பட்டேன். அந்த சமயம் என் பழைய சிநேகிதர் ஒருவர் என்னைவந்து பிடித்துக்கொண்டார். அவர் இருப்பது சைதாப்பேட்டை. அவருடைய தகப்பனுருக்கு திடீரென்று நெஞ்சு வலியினுல் பேச்சுமூச்சில்லாமல் இருப்பதாகவும் நான் உடனே வந்து பார்த்து சிகிச்சைசெய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். வீட்டுக்குப்போய் வேஷத்தைக் கலைத்துவிட்டு வருவதாய்ச் சொன்னேன். அதற்கு அவர், "அதுவரைக்கும் பொறுக்காது, நீங்கள் வேஷத்தை அங்கேவந்து கலைத்து உடைமாற்றலாம்" என்று சொன்னுர். நான் என் கைவசம் மருந்தொன்றுமில்லையென்றேன். அதற்கும் அவர் "அந்த ஊர் சின்ன டாக்டர் வந்து பார்த்துவிட்டு அங்கே காத்திருப்பதாகவும், அவரிடம் வேண்டிய மருந்து இருப்பதாகவும் சொன்னுர். நான் தப்புவதற்கு வேறு வழியில்லாமல் அவருடைய மோட்டாரில் ஏறிப்போனேன். ஒரு ஊசி போட்டவுடன் நோயாளி கண்களைத் திறந்தார். இப்பொழுது முற்றிலும் குணமடைந்துவிட்டார்.

கமலவல்லி. நீங்கள் ஏன் உடனே திரும்பிவிடகூடாது?

டாக்டர். அந்த சிநேகிதர் எனக்கு மிகவும் வேண்டியவர். என்னிடம் அன்பு மிகுந்தவர். இந்த இருட்டில் இப்பொழுதே போகவேண்டாம். இங்கே படுத்துக்கொள்ளுங்கள். காலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து காப்பி குடித்துவிட்டுப்போகலாம் என்று சொன்னார். நான் அதை மறுக்க முடியவில்லை என்று சொன்னார். அப்பொழுது மரகதவல்லியும் தன் தகப்பனாருடைய குரலைக்கேட்டு அப்பா வந்துவிட்டார் என்று அதிக சந்தோஷத்தோடு அங்கே வந்து நின்றாள்.

டாக்டர் இந்த சந்தர்ப்பத்தில் தன் மனச்சாட்சிக்கு விரோதமாகப் பொய்சொல்லும்படி நேரிட்டது. இந்த மாதிரி ஒரு முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கலாமா என்று இதை வாசிப்போர் வினவலாம். தன் பெண்ணினுடைய மானத்தைக் காப்பாற்ற டாக்டர் பொய் சொன்னவராதலால், சில சமயங்களில் நன்மையை உத்தேசித்துப் பொய்பேசுவதும் குற்றமாகாது. இதற்குத் தமிழ்வேதமாகிய திருக்குறளில் ஆதாரம் இருக்கிறது.

"பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்" என்றார் நாயனாரும்.

அன்று பிறபகல் மூன்றுமணிக்கு டாக்டர் நாயுடு ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டுமென்று புறப்பட்டார். அவர் அங்கே போவதற்குமுன் ஹிந்து, சுதேசமித்திரன் என்ற பத்திரிகாலயங்களுக்குப்போய் அந்த ஆபீஸ் மானேஜர்களிடம் ஒரு சிறு விளம்பரம் செய்யவேண்டுமென்று தெரிவித்து அதை ஒரு கடிதத்தில் எழுதிக்கொடுத்து அதற்

குள்ள கட்டணத்தையும் செலுத்தினர். அடுத்த நாள் வெளிவந்த பத்திரிகைகளில் பின்வரும் விளம்பரம் காணப் பட்டது.

தேவை.

"நாயுடு ஜாதியைச்சேர்ந்த ஒரு புரபு வம்சத்துப் பெண் ஒரு வாலிப ஜமீன்தாரை மணந்துகொள்வதற்குத் தேவை. பெண்ணின் வயது 18-க்கு மேற்படாமலும், பெண் அழகி லும், கல்வியிலும் சங்கீதத்திலும் தேர்ந்தவளாகவும் இருக்க வேண்டும். மற்ற விபரங்களுக்குக் கீழ்கண்ட விலாசத் திற்கு எழுதுவதுடன் பெண்ணின் போட்டோ (உருவப் படம்) வையும் அனுப்பவும்." நரஸிம்மலு, கமலவிலாஸ், சென்னை.

எட்டாம் அத்தியாயம்.

நாயக்கன்பட்டியும் கோமளவல்லி நாய்ச்சியாரும்.

மதுரை ஜில்லாவில் நாயக்கன்பட்டி என்ற ஒரு ஊர் உண்டு. ஏறக்குறைய நூறுகுடிபடைகளுக்குமேல் அந்த ஊரில் கிடையாது. அந்தஊர் ஜனங்கள் அவ்வளவு நாகரீகம் உடையவர்களல்ல அந்தஊரில் நஞ்சை நிலங்களும் புஞ்சைக் காடுகளும் ஏராளம். அவ்வூரார் வருஷா வருஷம் தங்கள் நிலங்களின் சாகுபடிக்கு மழையின் உதவியை எதிர்பார்க்க வேண்டியதாயிருந்தது. ஒரு குளம் ஒன்றுண்டு. மழை பெய்தால்தான் அதில் தண்ணீர் நிறையும். அந்த ஊர்க் குடிகள் தங்கள் நிலபுலங்களில் கமலைவெட்டி நீர்ப்பாய்ச்சுவதும் வழக்கம்.

அந்த ஊரில் கிருஷ்ணசாமி நாயுடு என்னும் பெயருடைய கனவான் ஒருவர் இருந்தார். அவ்வூர் நிலங்களில் பாதிக்கு மேலாகவே இவருக்குச் சொந்தம். இவருடைய முன்னோர்கள் காலத்தில் இருந்தே அந்த நிலங்களை இவர்கள் சர்வமானியமாகச் சர்க்கார் வரிசெலுத்தாமல் அனுபவித்து வந்தார்கள். இவர்களுக்கு இனம்தார் என்ற ஒரு பட்டப் பெயர் இருந்து வந்தது.

கிருஷ்ணசாமி நாயுடுவுக்கு ஐம்பது வயதிருக்கலாம். ஆறடி உயரமும் நீண்ட கைகளும் உடைய ஆஜானுபாகு. குப்பையின் மத்தியில்கிடக்கும் மாணிக்கம்போல அவ்வூர்

அநாகரீக ஜனங்களின் நடுவில் இவர்தாம் படிப்பிலும் நாகரீகத்திலும் மேம்பட்டு விளங்கினர். இவருக்கு இங்கிலீஷ் பாஷை தெரியாது. தமிழில் சிறந்த பண்டிதர். இவருடைய தந்தை இவரது இளம்பிராயத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தமிழ்வித்வானை வரவழைத்து ஐந்து வருஷம் அவரைத்தன் வீட்டிலேயே வைத்திருந்து சாப்பாடும் சம்பளமும் கொடுத்துத்தன் பையனுக்குக் கல்வி கற்பிக்கும்படி செய்தார். கிருஷ்ணசாமி நாயுடு தமிழ்ப்பாஷையில் உள்ள இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக்கற்று சங்க நூல், சமய நூல், காப்பியங்கள் இவைகளைத்தெளிவுடன் ஆராய்ந்து சிறந்த ஞானமுடையவராக விளங்கினர். அவருடைய வீட்டில் நான்கு கண்ணாடி பீரோக்கள் முழுதும் தமிழ்ப் புத்தகங்கள் நிறைந்திருந்தன.

நம்மவர்களில் அநேகர் தாய் பாஷையாகிய தமிழை அலட்சியஞ் செய்து இங்கிலீஷ், பிரென்சு, லத்தீன் முதலிய அன்னிய பாஷைகளையே விரும்பிப் படிக்கிறார்கள். இது எப்படி இருக்கிறதென்றால் பெற்றதாய்க்குச் சோறுபோடாமல் அன்னியர்களுக்கு விருந்தளிப்பது போலாகும். இங்கிலீஷ் இராஜ பாஷையாகவிருப்பதினாலும் நம் தேசத்துச் சட்டங்கள் அந்தப்பாஷையில் எழுதப்பட்டிருப்பதாலும் நாம் இங்கிலீஷ் படித்திருப்பது நல்லதுதான். ஆனாலும் தாய்ப்பாஷையைப் புறக்கணித்து அன்னிய பாஷைகளைப் போற்றுவது நல்லதல்ல. நம்மவர்களில் சிலருக்குத் தமிழில் பிழையில்லாமல், சரியாகக் கையெழுத்துபோடத் தெரியாமல் இருப்பது பரிதபிக்கத்தக்க விஷயம். வைத்தியநாதன் என்பதற்குப் பைத்தியநாதன் என்றெழுதுகிறார்கள். தற்காலத்து மாணவர்களுக்கு தமிழ்ப் புஸ்தகம் படிப்பதென்றால்

சுக்குக்கஷாயம் குடிப்பதுபோல் வெறுப்பாயிருக்கிறது. இவர்கள் தமிழில் பேசத்தொடங்கிவிட்டால் ஒரு தமிழ் வார்த்தையுடன் ஒன்பது இங்கிலீஷ் வார்த்தைகள் கலக்காமல் பேசத்தெரியாது. இவர்களுக்குப் பாஷாபிமானமும் கிடையாது. தேசாபிமானமும் கிடையாது. பள்ளிக்கூட மாணவர்கள் சுதேச பாஷையை அதிகமாய் அலட்சியம் செய்து வருவதை எண்ணி கல்வி இலாகா அதிகாரிகள் சர்க்கார் பரீட்சையில் பிள்ளைகள் இத்தனை அம்சம் (Marks) எடுக்கவேண்டுமென்றும் அதில் தவறினவருக்குத் தேர்ச்சியில்லையென்றும் ஒரு சட்டம் ஏற்படுத்தியிருப்பது மிகவும் பாராட்டத்தக்க விஷயமாகும். இது இவ்வாறு நிற்க.

நாயக்கன்பட்டி இனும்தார், தன் கிராமத்தில் உள்ள ஜனங்கள் கல்வி அறிவு இல்லாத மூடர்களாய் இருந்ததைப் பற்றி அதிக விசனம் அடைந்தார். இவர் அக்கிராமத்தில் ஒரு பெரிய இலட்சாதிபதியாகவும் அதிகாரியாகவும் இருந்தமையால், ஒரு சிறு பாடசாலை ஏற்படுத்தி ஆறு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கட்டாயம் பள்ளிக்கனுப்பவேண்டுமென்றும் பிள்ளைகள் சம்பளமில்லாமல் இலவசமாய்ப் படிக்கலாமென்றும் வற்புறுத்தினர். அப்படியிருந்தும் அவ்வூர் ஜனங்களுக்குத் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கனுப்ப மனமில்லை. தகப்பனுக்குப் படிப்பின் அருமை தெரிந்தால்தானே பிள்ளையைப் படிக்கவைப்பான். தங்கள் பிள்ளைகள் ஆடுமாடு மேய்த்தும், சாணம் குப்பை சேர்த்தும் விறகு வெட்டியும் புல் அறுத்தும் கொண்டுவந்தால் போதுமென்றெண்ணினர்கள். அந்த ஜனங்களின் வீடுகளையோ குடிசைகளென்றே சொல்லவேண்டும். தங்களுக்கும்

மிருகங்களுக்கும் பேதமில்லையென்பதைக் காட்டுவதுபோல் ஆடுமாடுகளையும் அக்குடிசையிலேயே கட்டிவைப்பார்கள்.

அந்த ஊரில் கிருஷ்ணசாமி நாயுடுவின் வீடு ஒன்றுதான் மாடிவீடு. இவர் தான் ஏற்படுத்திய பள்ளிக்கூடத்திற்கு ஒரு படித்த நல்ல உபாத்தியாயர் கிடைக்காமல் கஷ்டப்பட்டார். பிரைமரி பரீட்சையில் தேறின ஒரு உபாத்தியாயரை நியமித்து அவருக்கு மாசம் 15 ரூபாய் சம்பளம் கொடுத்து அவ்வூரில் குடியிருக்க ஒரு வீடும் கட்டிக்கொடுத்தார். வருஷத்திற்கொருமுறை பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்கள் வந்து பரீட்சை செய்வதுண்டு. ஒரு சமயம் ஒரு டிப்டி இன்ஸ்பெக்டர் ஒருவர் அக்கிராமப் பாடசாலையைப் பரீட்சை செய்ய வந்திருந்தார். அவர் அந்த ஊரில் தங்குவதற்கு வசதியான இடம் வேறு இல்லாமல் இனும்தாரின் வீட்டிலே இறங்கினார். காலை சுமார் ஒன்பது மணிக்கு இன்ஸ்பெக்டரும் இனும்தாரும் பாடசாலைக்குப் போனார்கள். அப்பள்ளிக்கூடத்தில் முதல் மூன்று வகுப்புகள்மட்டுமே இருந்தன. மூன்று வகுப்புகளிலும் சேர்ந்து மொத்தம் 30 பிள்ளைகள்தான் படித்தார்கள். இன்ஸ்பெக்டர் இரண்டாவது வகுப்புப் பிள்ளைகளுக்குக் கணிதபாடம் எவ்வளவுமட்டும் தெரியுமென்று பார்க்கச் சில கணக்குகள் போட்டுத் தொடங்கினார். அவர் பிள்ளைகளைப்பார்த்து "நான் இப்பொழுது ஒரு கணக்குச் சொல்லுவேன்; நீங்கள் வாயாற் கூட்டி விடை சொல்லவேணும். கற்பலகையில் எழுதிச் செய்யக்கூடாது" என்று பின்வரும் கணக்கைச்சொன்னார். ஒருவன் கடைக்குப்போய் அரிசி 0—2—0; நெய்0—4—0; வெல்லம் 0—1—0: மிந்திரிப்பருப்பு 0—0—6-க்கு வாங்கினால் மொத்தம் சேர்ந்து என்ன ஆகும்?

அந்த வகுப்பில் ஒரு பிராமணப்பையன் படித்துவந்தான். அந்த ஊரில் ஒரு பிராமணர் வீடுமட்டும் இருந்தது. அவர் வைஷ்ணவர். "கோவில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியைப்போல நாயக்கன்பட்டியிலும் கோவில் இல்லாத ஓர் குறையை நிவிர்த்திசெய்ய எண்ணி கிருஷ்ணசாமி நாயுடு சில வருஷங்களுக்கு முன்பு பெருமாள் கோவில் ஒன்றை ஸ்தாபனஞ்செய்து கும்பாபிஷேகம் நடத்தி நித்தியபூஜை நடத்துவதற்கும் ஒரு எளிய அந்தணனைத் தன் ஊரில் குடிவைத்திருந்தார். அந்தப் பிராமணருக்கு ஒரு மகன் உண்டு. அவனும் இந்தப்பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தான். அந்தப்பையன் எப்பொழுதும் பெருமாள் கோவில் பிரசாதம் சாப்பிட்டு வழக்கமுடையவனாதலால், இன்ஸ்பெக்டர் இந்தக்கணக்கைச் சொல்லி இரண்டு நிமிஷத்துக்குள் "எல்லாம் மொத்தம் சேர்ந்து சர்க்கரைப்பொங்கல் ஆகும்" என்றான். இதைக் கேட்டு இன்ஸ்பெக்டரும் இனம்தாரும் கலகலவென்று சிரித்தார்கள். அதன்பிறகு மூன்றாவது வகுப்புப் பிள்ளைகளுக்குப் பொது அறிவு (General knowledge) எப்படி இருக்கிறதென்று பரிசோதிக்க எண்ணி இன்ஸ்பெக்டர் ஒரு பையனைப்பார்த்து இஞ்சி எப்படியிருக்குமென்றார். பையன் சர்க்கரையைப்போலப் புளிப்பாயிருக்குமென்றான். இன்ஸ்பெக்டர் உபாத்திபாயரைப்பார்த்து "நீர் பிள்ளைகளுக்குப் பொதுவிஷயங்கள் போதிக்கிறதில்லையோ? என்றார்.

உபாத்தியாயர். போதிப்பதுண்டு. பையன் தவறுதலாய் வெங்காயத்தை நினைத்துக்கொண்டு சொல்லிவிட்டான்.

இன்ஸ்பெக்டர். பேஷ்! பையனைவிட உமக்கு அதிகம் தெரியும்போலிருக்கிறதே, என்றார். அதன்பிறகு இன்ஸ்பெக்டர் பூகோள சாஸ்திரத்தில் சில கேள்விகள் கேட்கத்தொடங்கி ஒரு பையனிடம் "பூமி உருண்டையாயிருக்கிறதென்பதற்கு இரண்டு காரணம் சொல்லு" என்று கேட்டார்.

பையன் அதற்குப்பதில் சொன்னதாவது:— முதல் காரணம் புஸ்தகத்தில் அந்தவிதமாக எழுதி இருக்கிறது. இரண்டாவது காரணம் உபாத்தியாயரும் பூமி உருண்டை என்று எனக்குச் சொல்லிக்கொடுத்தார்.

இந்தவிதமாகப் பரீட்சை முடிந்தது. இன்ஸ்பெக்டரும் இனும்தாரும் வீட்டிற்குத் திரும்பினார்கள். இன்ஸ்பெக்டர் இனும்தாரிடம் "இந்த உபாத்தியாயர் பிரயோஜனமில்லை. நான் ஒரு படித்த உபாத்தியாயரை அனுப்புகிறேன். ஆனால் அவருக்குச் சம்பளம் அதிகமாய்க்கொடுக்கவேண்டும்" என்றார். அதற்கு இனும்தார் "சம்பளம் எவ்வளவானாலும் நான் கொடுப்பதற்குச் சித்தமாய் இருக்கிறேன். என் கிராமத்துப் பிள்ளைகள் படித்து முன்னேற்றமடைந்தால் போதும்" என்றார்.

வாசகர்களே, பட்டணங்களில் காலேஜ்களும், ஹைஸ்கூல்களும் மற்றும் சில பாடசாலைகளும் மலிந்து கிடப்பதால் அங்கே பிள்ளைகள் படித்து விருத்திஅடைவது ஓர்ஆச்சரியமல்ல. நாயக்கன்பட்டியைப் போன்ற நாகரீகமற்ற அநேகம் ஊர்கள் நம் நாட்டில் இருக்கின்றன. துரைத்தனத்தார் அவ்வூர்களில் பாடசாலைகளை ஸ்தாபித்து கட்டாயப் படிப்

யைப் பரவச்செய்தால்தான் அந்த ஊர்களுக்கும் க்ஷேமம் பிறக்கும். ஒருசமயம் ஒரு தமிழ்ப்புலவர் நாயக்கன்பட்டி யின் வழியாய் நடந்துபோக நேரிட்டது. அவர் அந்த ஊரின் மாதிரியையும் அவ்வூர் ஜனங்களின் பேச்சு, நடை யுடை பாவனைகளையும் பார்த்துவிட்டுப் பின்வரும் பாடலைக் கொண்டுபோனார்.

"ஊரெல்லாம் பட்டிதொட்டி, உண்பதோ கம்மஞ்சோறு,
நீரெல்லாம் சேற்று நாற்றம், நிலமெலாம் கல்லு முள்ளும்
பேரெல்லாம் பொம்மை திம்மை பெண்களோ நாயும் பேயும்,
பார்தனில் இந்த ஊர்போல் எங்கணும் பார்க்கொணாதே."

இனும்தார் கிருஷ்ணசாமி நாயுடு ஒருநாள் காலையில் ஸ்நானம் பூஜை முடித்துத் தன் படிப்பறையில் இருந்தார். தபாற்காரன் வழக்கம்போல் சில கடிதங்களும், பத்திரிகை களும் கொண்டுவந்தான். அவர் தன்நாற்காலியில் சாய்ந்த வண்ணம் சுதேசமித்திரன் என்னும் பத்திரிகையைப் பிரித்து படிக்கலானார். அப்பத்திரிகையின் ஒருபுறத்தில் டாக்டர் நரஸிம்மலு நாயுடு கொடுத்திருந்த "தேவை" என்னும் விளம்பரத்தைப் படித்துப் பார்த்தார். பிறவிக் குருடனுக்குக் கண் கிடைத்ததுபோலப் பேரானந்தக்கடலில் மூழ்கினார்.

இனும்தாருக்குக் கோமளவல்லி என்னும் பெயருடைய ஒருகுமாரத்தி உண்டு. அவளுக்கு அப்பொழுது பதினெட் டாவது வயது கடந்து கொண்டிருந்தது. பெண் உருக்கி ஓடவிட்ட தங்கக்கொடி போலவும் ஆயிரம் மாற்றுடைய அபரஞ்சிப் பொன்போலவும் பளபளப்பும் மிருதுவுமான சரீரத்தை யுடையவள். இவள் தன் தாயை இழந்து பத்து

வருஷங்கள் ஆகின்றன. இனும்தார் தன் பெண்ணினிடம் தாயின் அன்பையும் சேர்த்தே காட்டினர். தனக்கொழிந்த நேரங்களில் சோமளவல்லிக்குத் தமிழ்ப் பாடங்களைக்கற்றுக் கொடுத்து வந்தார். அத்துடன் மதுரையில் இருந்து ஒரு உபாத்தினியையும் வரவழைத்துத் தன் பெண்ணிற்குச் சங்கீதமும் இங்கிலீஷ் பாஷையும் சொல்லிக் கொடுக்கும்படி செய்தார். தற்கால நாகரீகத்தை அனுசரித்து தான் இங்கிலீஷ் படியாமற் போனதைப்பற்றி இனும்தார் குறைவாக எண்ணியிருந்ததினல் தன் மகளுக்கு இங்கிலீஷ் படிக்கவும் எழுதவும் தெரியவேண்டுமென்று இந்தவிதம் செய்தார்.

கிருஷ்ணசாமி நாயுடு பத்திரிகையிலுள்ள விளம்பரத்தைப் படித்தவுடன் தன் மேஜையிலிருந்த லெட்டர் பேபரும் பவுண்டன்பேனவும் எடுத்து, டாக்டர் நரசிம்மலுநாயுடுவுக்கு ஒரு கடிதம் எழுதி அக்கடிதத்துடன் தன் பெண்ணின் உருவப்படமும்வைத்து அனுப்பினர். இப்பத்திரிகையின் விளம்பரத்தைப் பார்த்த கும்பகோணத்திலுள்ள ஒரு பலத்த மிராசுதார் கோபாலசாமி நாயக்கர் என்பவரும் கோயம்புத்தூர் டிப்டிகலெக்டர் இராஜகோபால நாயுடு என்பவரும் இன்னும் வேறு ஊர்களில் இருந்து இரண்டொரு கனவான்களும் தங்கள் பெண்ணைக்கொடுக்க விரும்புவதாக டாக்டருக்கு கடிதங்களும் போட்டோப் படங்களும் அனுப்பியிருந்தார்கள்.

இஃது இவ்வாறிருக்கச் சென்னையில் கமல விலாசில் நடந்த சில விஷயங்களைக் கவனிப்போம். டாக்டர் நாயுடு வழக்கம்போல் 11மணிக்கு ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்தவுடன் கமலவல்லி அவரிடம் நலைந்து கடிதங்களைக்

கொடுத்தாள். அவர் அவற்றை ஒவ்வொன்றாய்ப் பிரித்துப் பார்த்து சாமாசாரங்களைப் படித்து அவற்றில் வைத்திருந்த படங்களையும் கமலவல்லிக்குக் காட்டினார். அப்பொழுது மரகதவல்லியும் தன் தாயின் பக்கத்தில் வந்து நின்றாள்.

வந்திருந்த படங்கள் எல்லாவற்றிலும் கோமளவல்லி நாய்ச்சியாரின் படந்தான் டாக்டர் மனதிற்குப் பிடித்திருந்தது. அவர் தன் மனைவியைப் பார்த்து "கமலா, இந்தப் பெண்களின் உருவப் படங்களை நீயும் பார்த்தாய். உனக்கு மனசுக்கு எது பிடித்திருக்கிறது? எந்தப் பெண்ணை நிச்சயம் செய்யலாம்? என்று கேட்டார். கமலவல்லியும் இனும்தார் கிருஷ்ணசாமி நாயுடு அனுப்பிய படத்தையே எடுத்துக் கொடுத்தாள்.

உலகத்தில் சாதாரணமாக ஒவ்வொருவனும் தன் மனைவி அழகாயிருக்கவேணுமென்று ஆசைப்படுகிறான். அதைப்போலவே பெண்ணும் "கை நிறைந்த பொன்னைவிட கண் சிறந்த கணவனே மேல்" என்று கருதுகிறாள். ஆனால் அழகைவிட குணமே சிறந்ததென்பதை ஜனங்கள் நினைக்கிறதில்லை. அழகென்பது சிலகாலம்மட்டுமே இருக்கும். குணம் நீடித்தும் மாறாமலும் இருக்கும் தன்மையுடையது. ரோஜாபுஷ்பம் மலர்ந்திருக்கும்போது அழகுடன் விளங்கும் வாடிவிட்டால் அழகெல்லாம் பறந்துபோம். மேலும் ரோஜாப்பூ அழகாயிருந்தாலும் முட்களுடன் கூடியிருக்கிறது. அதைப்போல சிலர் வெளிப்பார்வைக்கு அழகுடன் தோன்றலாம். ஆனால் அவர் மனம் முட்களால் நிறைந்திருக்கும். நல்லபாம்பு படம் எடுத்து ஆடும்போது அழகாயிருக்கிறது. ஆனால் அதனிடம் கொடிய விஷம்

உண்டு. ஆகையால் ஒரு பெண்ணிற்கோ, ஆணிற்கோ அழகைவிட குணமே சிறந்தது. பெண்கள் அதிக அழகா யிருப்பதனால் சிற்சில சமயங்களில் அவர்களின் கற்புக்கு தீமை விளைகின்றது. "சீதை அழகாலே கெட்டாள், திரௌபதி வாயாலே கெட்டாள் என்றும், பார்யாரூபவதி சத்துரு" வென்றும் பழமொழிகள் வழங்கிவருகின்றன. மற்றும் ஸ்ரீமான் வேதநாயகம் பிள்ளை அவர்கள் தாமியற்றிய பாடலில்

"அழகு குணமுள்ளவள் அவள் நல்ல ஜோடு.
அழகில்லாவிடினும் குணத்தையே தேடு"

என்று சொல்லி இருக்கிறார்.

இதுநிற்க டாக்டர் நரசிம்மலு நாயுடு தன் மனைவியைப் பார்த்து "கமலா, நான் இன்றிரவு இங்கேயிருந்து புறப்பட்டு நாயக்கன்பட்டிக்குப்போய் இனும்தாரைக்கண்டு பேசி அழகிரிக்கு அந்தப்பெண்ணை நிச்சயம்செய்துகொண்டு வருகிறேன்" என்றார். அன்று மத்தியானம் நாயக்கன்பட்டி கிருஷ்ணஸ்வாமி நாயுடுவுக்குத் தன் வருகையைக்குறித்து ஒரு தந்தி கொடுத்தார்.

இனும்தார், தனக்குக் கிடைத்த தந்தியைப் பார்த்து, தனக்கு இங்லீஷ் தெரியாதாகையால் தன் மகளைக்கூப்பிட்டு தந்தியை வாசிக்கச்சொல்லி சமாசாரந் தெரிந்துகொண்டார். சென்னையிலிருந்து தன்னைப்பார்க்கவரும் டாக்டர் நரசிம்மலு நாயுடுவை ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்பதற்காகத் தன் பெட்டி வண்டியைப் போடச்சொல்லி கட்டளை இட்டார். வீட்டு வாசலுக்கு முன் ஒரு அழகிய பெட்டி வண்டி வந்து

நின்றது. அதிற் பூட்டிய காளைகள் பால்சங்கைப்போல் வெண்மை நிறம் உடையதாய் சிவபெருமானுடைய வாகனமாகிய ரிஷபமோ என்று சொல்லத் தக்கனவாயிருந்தன. சில வண்டி மாடுகள் ஜோடி சேருவது கஷ்டம். ஒன்று வடக்கே இழுத்தால் மற்றொன்று தெற்கே இழுக்கும். இந்த லக்ஷணத்தில் வண்டி எங்கே ஓடும்? இதைப்போல் தான் குடும்பமாகிய சகடத்துக்கும் 2 மாடுகள் உண்டு. அவை புருஷனும் மனைவியும் ஆவர். இவ்விருவரும் ஒற்றுமையாக இருந்தால்மட்டும் இல்லறமாகிய குடும்ப வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த முடியும்.

"காதன் மனையாளும் காதலனுமாறின்றித் தீதில் ஒரு கருமம் செய்யவே" என்றார் சிவப்பிரகாச சுவாமிகள். இன்னும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சிந்தாமணி என்னும் நூலில், அந்நூலாசிரியர் ஏமாங்கத நாட்டை வர்ணிக்கும்போது உழவர்களின் ஏரில் பூட்டிய மாடுகள் ஒற்றுமையாய் உழுதனவென்பதை,

"மாமனும் மருமகனும் போலு மன்பின
காமனும் சாமனும் போலும் காட்சியே"

என்று சிறப்பித்துப் பாடியிருக்கிறார்.

இது நிற்க, இனம்தாரின் வண்டியில் கட்டியிருந்த மாடுகள் தங்கள் கொம்புகளில் வெள்ளிப்பூண்கள் கட்டப் பட்டு கழுத்தில் சலங்கையணிந்து, கலீர், கலீர் என்ற சத்தத்துடன் புறப்பட்டன. இனம்தார் வண்டியில் ஏறி உட்கார்ந்து, அதில் போடப்பட்டிருந்த திண்டில் சாய்ந்தார்.

நாயக்கன்பட்டி என்ற ஊர் வாடிப்பட்டி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நான்கு மைல் தூரம் உள்ளது. வண்டி இப்பொழுது வாடிப்பபட்டி ஸ்டேஷனுக்குப் போய்க் கொண்டிருந்தது.

இனும்தார் ஸ்டேஷனில் இறங்கி பிளாட்பாரத்துக்குள் போனார். வண்டி வருவதற்குப் பதினைந்து நிமிஷம் செல்லும் என்று அறிந்தார். அந்த ஸ்டேஷன் மாஸ்டர் இனும்தாருக்குத் தெரிந்தவராகையால், இவரை வரவேற்றுத் தன் அறையில் ஒரு நாற்காலியில் உட்காரச்செய்தார். வண்டி வரும் சமயமாயிருந்ததனால் பட்டிக்காட்டு ஜனங்கள் இரண்டொருவர் டிக்கட் கொடுக்கும் ஜன்னலண்டை குழுமினார்கள். மற்றும் சிலர் கையில் சோட்டாத்தடியும் தலையில் பெரிய முண்டாசும் காலில் தோற்செருப்பும் அணிந்து ஸ்டேஷனை நோக்கி வேகமாய் வந்துகொண்டிருந்தார்கள். ஸ்டேஷன்மாஸ்டர் டிக்கட் கொடுப்பதற்காக ஜன்னல்கதவைத் திறந்தார். அப்பொழுது ஒரு

பிரயாணி. ஒரு டிக்கட்டு கொடுங்க.

ஸ்டேஷன்மாஸ்டர். எந்த ஊருக்கு?

பிரயாணி. என் மாமியா ஊருக்கு, சாமி.

ஸ்டேஷன்மாஸ்டர். உன் மாமியா ஊரு எது?

பிரயாணி. என் பொஞ்சாதி, பிள்ளையெல்லாம் அங்கதான் இருக்கு, அந்த ஊறுதான்.

ஸ்டேஷன்மாஸ்டர். (விழுந்து விழுந்து சிரிக்கிறார்) இன்னொரு பிரயாணி வந்தான். "ஆண்பிள்ளை டிக்கட்டு

இரண்டு, பெண்பிள்ளை டிக்கட்டு மூன்றுகொடுங்க" என்றான். இதைக்கேட்டவுடன் அங்கே நாற்காலியில் உட்கார்ந்திருந்த இனும்தாருக்குத் தன்னையறியாமலே சிரிப்பும், துக்கமும் வந்துவிட்டது. அவர் தனக்குள், இந்த ஜனங்கள் இவ்வளவு கேவலமாய் உலக அனுபவமும் நாகரீகமும் இல்லாமல் இருக்கிறார்களே இவர்கள் எப்பொழுது சீர்திருத்தம் அடைவது என்று மனம் வருந்தினார். இதற்குள்ளாக வண்டி வந்துவிட்டது. 2-வது வகுப்பு வண்டியில் இருந்து, நாணயமாக உடைதரித்த ஒரு இந்திய கனவான், கையில் தோற்பெட்டியுடன் இறங்கினார். இனும்தாரும் டாக்டரும் ஒருவரை ஒருவர் சுலபமாய் அறிந்துகொண்டார்கள். இருவரும் நாயக்கன்பட்டிக்கு வந்துசேர்ந்தவுடன் கலியாணப்பேச்சை பேசத்தொடங்கினார்கள். டாக்டர், தன் மைத்துனனுடைய விவாகத்தைக்குறித்துப் பத்திரிகையில் விளம்பரஞ்செய்திருந்ததாகவும் அவன் அரியலூர் எஸ்டேட் ஜமீன்தார் என்றும் சொல்லித் தான் கொண்டுவந்த போட்டோவை இனும்தாரிடம் கொடுத்தார். அவர் அப்படத்தைப்பார்த்துத் திருப்தி அடைந்த முகத்தோடு டாக்டரிடம் "உங்கள் சம்பந்தம் கிடைப்பதற்கு நான் அதிக பாக்கியசாலி என்றே சொல்லவேணும், விவாகத்திற்கு நிச்சயதாம்பூலம் செய்துவிடலாம்" என்றார். டாக்டர் அதற்கு மறுமொழியாக "என் பெண்ணின் விவாகத்தை நான் இன்னும் நான்கு தினங்களில் சென்னையில் என் கிரகத்தில் நடத்தப்போகிறேன். அந்தக்கல்யாணம் நிச்சயமாகி ஒருவாரமாகிறது. என் பெண்ணின் கல்யாணத்துடன் சேர்த்து என் மைத்துனன் விவாகத்தையும் நடத்த விரும்புகிறேன். உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை உண்டோ" என்றார்.

இனும்தார். எனக்குயாதொருவிதமான ஆட்சேபனை யும் இல்லை. கலியாணம் எந்த இடத்தில் நடப்பதாயிருந் தாலும் எனக்குச்சம்மதம்.

டாக்டர். நிச்சயதாம்பூலம் செய்வதற்கு வேண்டிய ஆயத்தத்தோடு நான் இப்பொழுது வரவில்லை. நான் சென்னைக்குப் போனவுடன் தங்களுக்கு ஒரு தந்தி கொடுக் கிறேன். தாங்கள் தங்கள் இனஜன பந்துக்களுடன் வந்து சேரவேணும். என் மைத்துனனுடைய சொந்த பங்களா மைலாப்பூரில் இருக்கிறது. நீங்கள் அங்கே தங்கலாம்.

இனும்தார். கலியாணத்திற்காக இங்கிருந்து என் னுடன் வரக்கூடிய உறவினர்கள் அதிகம் கிடையாது. நானும், பெண்ணும் என் வயதுசென்ற சகோதரியும் இரண் டொரு வேலைக்காரர்மட்டுமே.

டாக்டர். தங்கள் சம்சாரம்.

இனும்தார். அவள் காலம்சென்று பத்து வருஷங்கள் ஆகிறது.

டாக்டர். அது விசனமான விஷயம்.

இனும்தார். உங்கள் பெண்ணை யாருக்கு நிச்சயம் செய்திருக்கிறீர்கள்?

டாக்டர். அந்தப் பையன் சென்னையில் தானிருக்கி றான். பி. ஏ. பாஸ் பண்ணியிருக்கிறான். பையன் ஏழை தான். படிப்பை உத்தேசித்து அவனுக்குக் கொடுக்க விரும் புகிறேன். மேலும் என் பெண்ணும் எப். ஏ. வரை படித்

திருக்கிறபடியால் அவளுக்கு வரக்கூடிய புருஷன் அவளை விட படிப்பில் உயர்ந்திருக்க வேண்டும் என்பது என் எண்ணம்.

இனும்தார். நீங்கள் செய்தது உசிதமான காரியந் தான். உங்கள் மைத்துனர் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறாரா ?

டாக்டர். அவனுக்கு இங்கிலீஷ் பாஷை பேசவும் எழுதவும் நன்றாகத் தெரியும். இப்பொழுது இரண்டு வருஷமாகச் சென்னை சட்டசபையில் மெம்பராக இருந்து வருகிறான்.

இனும்தார். அவ்வளவு போதுமானது.

டாக்டர். நாங்கள் பெண்ணிற்கு என்ன நகை போட வேண்டும். அதைத் தெரிவித்தால் நான் ஊருக்குப் போனதும் செய்து முடிப்பேன்.

இனும்தார். என் பெண்ணுக்கு நகைகள் வேண்டியது செய்து போட்டிருக்கிறேன். உங்கள் விருப்பம் எதுவோ அப்படிச் செய்யுங்கள்.

டாக்டர். ஆனாலும் பெண்ணிற்குத் தேவையாகவுள்ளது எந்த நகை என்று தெரிந்தால் அதைச் செய்து போடுவது நல்லது. எங்களுக்கும் அது திருப்தியாயிருக்கும்.

இனும்தார். நான் என் மகளிடம்கேட்டு நீங்கள் புறப்படுவதற்கு முன் சொல்கிறேன் என்றார். இவ்விதமாக இருவரும் பேசி முடிந்தவுடன் வெளியே உலாவப் புறப்பட்டார்கள். வெள்ளைக்காரரைப் போல உடை தரித்துத்

தலையில் தொப்பியும் காலில் பூட்சும் மாட்டிக்கொண்டு இனும்தாருடன் வெளியே புறப்பட்ட டாக்டரைப் பார்த்து அவ்வூர் ஜனங்கள் தங்கள் கிராமத்துக்கு யாரோ ஒரு துரை வந்திருக்கிறார் என்று எண்ணி அவரைக் கண்டதும் இரண்டு கையும் கூப்பிக் கும்பிட்டார்கள். மதராஸ் முதலிய பட்டணங்களில் சிநேகிதர் ஒருவரை யொருவர் சந்திக்கும்போது சலாம் செய்யும் அறிகுறியாகத் தங்கள் கையால் தலையில் அடித்துக் கொள்வதும் மற்றும் சிலர் தொப்பியை உயத்துவதும் வேறு சிலர் சுட்டு விரலைமட்டும் நெற்றியில் வெட்டுவதும் போன்ற காரியங்களை இப்பட்டிக்காட்டு ஜனங்கள் பார்த்ததில்லை.

டாக்டர், தான் வந்த காரியம் கைகூடினதைப் பற்றிச் சந்தோஷத்துடன் திரும்பினார். இனும்தார் தன் பெட்டி வண்டியில் டாக்டரை ஏற்றி ரயிலுக்கனுப்பினார். புறப்படு முன் இனும்தார் தன் பெண்ணினிடம் நகை விஷயமாய்க் கேட்டதாகவும் கோமளவல்லி தனக்கு வைர ஒட்டியாணம் வேண்டுமென்று சொன்னதாகவும் சொன்னார். டாக்டர் "அதிக சந்தோஷம் நான் பி. ஆர். அண்டு சன்ஸ் கம்பெனியில் வயிரமிழைத்த தங்க ஒட்டியாணத்திற்கு ஆர்டர் கொடுத்து விடுகிறேன்." என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

சென்னைக்குப் போவதற்கு முன் டாக்டர், செங்கற்பட்டு ஸ்டேஷனில் இறங்கி தன் மைத்துனனுடைய ஊருக்குப் போனார். ஜமீன்தார் தன் அத்தானுடைய வருகைக்கு அகமகிழ்ந்து அவரை அதிகம் உபசரித்தார். டாக்டர் தன் மைத்துனனிடம் "அழகிரி, நான் இப்பொழுது நாயக்கன்

பட்டி என்ற ஊரில் இருந்து வருகிறேன். அது மதுரை ஜில்லாவைச் சேர்ந்தது. அவ்வூரில் உள்ள கிருஷ்ணசாமி நாயுடு என்னும் ஒரு பிரபுவின் குமாரத்தியை உன் சம்மதம் அறியாமலே உனக்கு நிச்சயம் செய்து விட்டேன்'' என்று சொல்லி அப்பெண்ணின் உருவப் படத்தையும் ஜமீன்தாரிடம் காண்பித்தார். ஜமீன்தார் அப்பெண்ணின் படத்தைப் பார்த்து முகமலர்ச்சியுடன் "நீங்கள் என்னைக் கேட்பானேன். உங்களுடைய வார்த்தைக்கு நான் மீறி நடப்பவனு?' என்று பதில் சொன்னர்.

டாக்டர். "அழகிரி. நீயும் இப்பொழுது என்னுடன் புறப்பட வேண்டும். கலியாணத்திற்கு இன்னும் மூன்று நாட்களே யிருக்கின்றன. அதற்குள் எத்தனையோ காரியங்கள் ஆகவேண்டி யிருக்கிறது. உன் மானேஜர், வேலையாட்கள் எல்லாரையும் ரயில் மார்க்கமாய் வந்து சேரும்படி சொல்லிவிடு, நீயும் நானும் இப்பொழுது உன் மோட்டாரில் போகலாம், நம்முடைய அந்தஸ்துக்குத் தகுந்தபடி கலியாணத்தை அதிக ஆடம்பரமாகவே நடத்தவேணும்.'' என்று சொன்னர் அதன் பின்பு இருவரும் மோட்டாரில் ஏறி சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஒன்பதாம் அத்தியாயம்.

கலியாண வைபவம்.

டாக்டர் நரசிம்மலு நாயுடு சென்னை இம்பீரியல் பாங்கில், தன் குமாரத்தியின் கலியாணத்திற்கென்று இருபதினாயிரம் ரூபாய் டிபாசிட்செய்துவைத்திருந்தார். அந்தப் பணத்தை இப்பொழுது எடுத்துச் செலவுசெய்தார். ஜமீன்தாரும் தன் கலியாணச்செலவிற்கென்று தன் அத்தானிடம் பதினாயிரம் ரூபாய் கொடுத்தார். டாக்டர் அப்பணத்தை வாங்கிக்கொள்ள முதலில் மறுத்தபொழுது ஜமீன்தார் நீங்கள் இப்பணத்தை அவசியம் ஏற்றுக்கொள்ளவேணும் "தாயும் பிள்ளையுமானாலும் வாயும் கையும் வேறு" என்று உலகத்தில் சொல்வார்கள். மேலும் எனக்கு நிச்சயம்செய்திருக்கிற பெண்ணுக்கு நகைபோட பி. ஆர். அண்டு சன்ஸில் வைர ஒட்டியாணத்துக்கு ஆர்டர்கொடுத்திருக்கிறீர்கள். அது கிட்டத்தட்ட ஐயாயிரம் ரூபாய்க்கு வரும். மற்றும் என்னிமித்தமான கலியாணச்செலவுகளும் இருக்கின்றன" என்றார். டாக்டர் அரைமனதுடன் பெற்றுக்கொண்டார். டாக்டரும் ஜமீன்தாரும் இயற்கையில் பெருந்தன்மையும் உதாரகுணமும் வாய்ந்தவர்கள்.

இது இவ்வாறிருக்க, டாக்டர் அதிகப்படாடோபமாகத் தங்கக்கில்ட் எழுத்துக்களில் கலியாணப்பத்திரிகையை அச்சடித்து நகர்முழுதும் நிறைந்துள்ள தன் நண்பர்களுக்கும் உத்யோகஸ்தர்களுக்கும் அனுப்பினார். தன் வீட்டு வாசலுக்குமுன் ஒரு அழகிய பந்தல் அமைக்க எண்ணி

ஆயிரம் ரூபாய்வரை அந்தவிஷயத்துக்குச் செலவழித்தார். அதனுள்ளே பிரவேசித்தவர்கள் "இது தேவேந்திரனுடைய கொலுமண்டபமோ" என்று திகைக்கும்படியாக இருந்தது. பலவர்ணம்உள்ள காகிதப்பூக்களாலும் சித்திரப்பொம்மைகளாலும் கார்சீப்வேலைகள் அமைத்தும், லஸ்தர், குளோப்புகள் தொங்கவிடப்பட்டும் பந்தல் ஜோடிக்கப்பட்டிருந்தது. முன்வாசலில் வாழை, கமுகு. ஈந்து முதலியமரங்கள் குலைகளுடன் கட்டப்பட்டன. பந்தலுக்குமுன்புறம் தேர்ச்சீலைகள் கட்டப்பட்டிருந்தன. அதன்முன் இரண்டு அழகிய குதிரைகள்மேல் நோக்கிப் பறந்துகொண்டிருப்பதுபோல் வைக்கப்பட்டிருந்தன. வெளியே நின்று பார்ப்பவர்களுக்கு அக்கொட்டகை ஒரு தேவவிமானம் போலவும் அசுவங்கள் அவ்விமானத்தை இழுத்துச் செல்வது போலவும் காணப்பட்டன, பந்தலுக்குள் தரையில் ரத்ன கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன.

பாலக்காட்டிலிருந்து தங்கமெடல் தோடா பரிசுபெற்ற பத்து பிராமணப் பரிசாரர்களும்; திருநெல்வேலியிலிருந்து சைவவேளாளப் பரிசாரர்கள் இருபது பேரும் சமையலுக்கென்று வரவழைக்கப்பட்டார்கள், சங்கீதத்திற்கு வரவழைக்கப்பட்டிருந்த வித்வான்களுக்கோ கணக்கில்லை. அவர்களின் பெயர் முழுதும் எழுதுவதாயிருந்தால் இப்புஸ்தகத்தில் இடம் போதாது. முக்கியமான சில வித்வான்களின் பெயரைமட்டும் இங்கே சொல்லுவோம். பெரிய மேளத்துக்குத் தஞ்சாவூர் பாண்டு. சின்னமேளத்திற்கு திருவிழிமிழலை பிரதர்ஸ்; பெரமனூர் அங்கப்பன்; தஞ்சை கோவிந்தசாமி பிள்ளை பிடில்; அரியக்குடி இராமனுஜ அய்யங்கார்

பங்களூர் சீதாபாய், ஜீவாபாய் இவர்கள் வாய்ப்பாட்டு நாகராஜ ராவ் புல்லாங்குழல்; திருநெல்வேலி கோமதி மிருதங்கம்; திருவாலூர் சின்னக் குஞ்சரம் சதிர், முதலிய வர்களாம்.

நாயக்கன்பட்டியிலிருந்து கிருஷ்ணசாமி நாயுடு கலியாணத்துக்கு ஒரு தினத்துக்கு முன்னமே, தன் மகளுக்குச் சீதனமாய்க் கொடுக்க வெள்ளிப் பாத்திரங்கள் வாங்கும் பொருட்டும் தன் மருமகனுக்கு ஆடை ஆபரணங்கள் எடுப்பதற்கும் சென்னைக்கு வந்து மைலாப்பூர் பங்களாவில் இறங்கினர்.

கலியாணத்துக்கு முந்தின நாளிரவு மாணிக்க முதலித் தெருவில் ஒரு சிறு வீட்டில் ஒரு பிராமணஸ்திரீ இராத்திரி ஒன்பது மணிக்கு வாசலில் நின்றுகொண்டு தன் புருஷன் வருகையை எதிர்பார்த்திருந்தாள். இவள் தனக்குள் "இந்த எழவு பிராமணன் இத்தனை தேசாலம் எங்கே போயிருப்பார் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் கலெக்டர் கூட ஆபீசி லிருந்து அஞ்சி மணிக்கு வீட்டுக்கு வருகிறன். இவரு டைய புரோகிதத் தொழிலுக்கு இராத்திரி ஒன்பது மணி ஆயும் ஒழியவில்லை என்று முணுமுணுத்துக் கொண்டிருந்த போது சுமார் அறுபது வயதுள்ள ஒரு கிழவர் கக்கத்தில் பஞ்சாங்க மூட்டையும் கையில் தடிக்கம்பும் தாங்கி ஆடி அசைந்து வந்து கொண்டிருந்தார். அதைப்பார்த்த அவர் மனைவி சேஷி உள்ளே போய்விட்டாள். அவர் உள்ளே நுழைந்தவுடன் சேஷி, "எங்காணும் ஒரு நாப்போல நித்தம் இப்படி சேசா, நான் பொம்மனாட்டி உமக்காக எத்தனை நாழி விழிச்சிண்டிருக்கிறது?"

பிராமணன். என்னடி நச்சு நச்செனு ஆத்துக்குள்ளே நுழையும் போதே, காரியம் இல்லாமல் நான் எங்கேயா வது சும்மா இருப்பேனு? நாளைக்கு ஒருபெரிய இடத்தில் இரண்டு கலியாணம் நடக்கிறது. அதற்காக நான் அந்த வீட்டிற்குப் போய் நாளை வைதீக காரியத்துக்கு வேண்டிய சாமான்களுக்கு ஒரு சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு அவர் கள் இடம் சொல்லிக்கொண்டு வருவதற்கு இத்தனை நாழி யாச்சு.

சேஷி. உங்கள் காரியந்தான் உங்களுக்குப் பெரிசு. வீட்டுக்கவலை கொஞ்சமாவது கிடையாது. சாலாக்ஷியைப் புக்காத்துக் கனுப்பணும் வெறுங்கழுத்தோடு நிற்கிருள்.

பிராமணன். அதுக்கென்ன? இந்தக் கலியாணத்தில் வருகிற வரும்படியில் அவளுக்குச் சங்கிலியாவது அட்டி கையாவது பண்ணிப்போடுகிறேன். நாளை முகூர்த்தத்திலே இரண்டு கலியாணத்திலும் சேர்ந்து சில்லரையாக ரூபாய் நூறுவரை பற்றிவிடுவேன். அதற்கப்புறம் சம்பாவனை இருக்கிறது, அது கடைசி நாளில் கொடுப்பார்கள். அதுவும் நூறு ரூபாய்க்குக் குறையாது. நாளைக்கு நீயும் வரவேண்டும். உன்னையும் கூட்டிக்கொண்டு வரும்படி சொல்லி இருக்கி ருர்கள். எனக்கு சோமன் ஜோடிப்பத்தாறும் உனக்கு பட்டுப் புடவையும் கிடைக்கும்.

சேஷி. நன்ருருக்கு, நான் அங்கேயெல்லாம் எப்படி வர்றது. எனக்கு வெட்கமாயிருக்கு.

பிராமணன். நீ சிறு பெண்ணு வெட்கப்பட, வயசு ஐம்பதாறது. வெட்கப்பட்டால் வரும்படி எப்படி கிடைக்கும்?

இவர்கள் இப்படி பேசிக்கொண்டிருந்த போது இவருடைய பையன் அங்கே வந்தான். அவன் பெயர் சீனிவாசன்.

பிராமணன். சீனு, எங்கே போயிருந்தாய்.

சீனிவாசன். எங்கேயும் போகவில்லை. என் அறையில் இருந்து படித்துக்கொண்டிருந்தேன்.

பிராமணன். சீனு, நீ நாளைய தினம் காலையில் என்னோடுகூட வரவேணும். ஒரு பெரிய இடத்திலே கலியாணம். நீ கூட இருந்தால் எனக்குக் கொஞ்சம் உதவியாய் இருக்கும்.

சீனிவாசன். அப்பா, நான் உம்மோடு வருவதில் என்ன பிரயோஜனம்? எனக்கு உம்முடைய மந்திரம், தந்திரம் ஒன்றும் தெரியாது.

பிராமணன். நீ ஒன்றும் செய்யவேண்டாம். உனக்கு சந்தியாவந்தனம் தெரியும். அந்த மந்திரத்தை வாயால் சொல்லிக்கொண்டிரு. மற்றக்காரியங்கள் எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். நீ போய் படுத்துக்கொள். நான் உன்னைக் காலையில் எழுப்புகிறேன், என்றார்.

இவர் யாரென்பதை அறிய வாசகர்களுக்கு ஆவல் இருக்கலாம். இவர்தான் டாக்டர் நரசிம்மலு நாயுடு வீட்டுப்புரோஹிதர். இவர் பெயர் அப்புவய்யங்கார். இவருக்குச் சீனிவாசன் என்ற ஒரு பையனும் விசாலாக்ஷி என்ற ஒரு பெண்ணும் உண்டு. பையனைத் தன் தொழிலில் பழக்க இஷ்டமில்லாமல் இங்கிலீஷ் படிக்கவைக்கிறார். பெண்ணிற்கு விவாகமாய்விட்டது, பெரியமனுஷியாகி வீட்டில்

இருக்கிருள். அவளுக்கு ருதுசாந்தி முகூர்த்தம் நடத்திப் புருஷன் வீட்டிற்கு அனுப்பணும். ரூபாய் ஐந்நூறுவரை பிராமணனுக்குத் தேவை.

இங்கே இப்படியிருக்க சென்னையை அடுத்துள்ள பல ஊர்களிலும் பட்டிகளிலும் டாக்டர்வீட்டு கலியாணப் பேச்சே மிகுந்திருந்தது. ஏழைப்பிராமணர்கள் எல்லாரும் கலியாணத்தில் சாப்பாடும், பூரிதக்ஷிணையும் கிடைக்குமென் பதை எண்ணி கூட்டங்கூட்டமாய் வந்துகொண்டிருந்தார் கள். சத்திரம் சாவடிகளில் தூங்கும் முழுச்சோம்பேறி, முக்கால்சோம்பேறிகளாகிய ஆண்டி பரதேசிகள், கழுத்தில் தாவடமும் மனத்தில் அவகடமும் நெற்றியில் திருநீறும், கையில் சுரக்குடுக்கையும் இந்தவிதமான சர்வாபரண பூஷித ராய் டாக்டர் அவர்கள் நடத்தும் விவாக மகோற்சவத்தை சிறப்பிக்க வந்துகொண்டிருந்தார்கள்.

இதுநிற்க, சென்னையை அடுத்த திருவொற்றியூரில் சிவன்கோவில் ஒன்றுண்டு. அந்தக்கோவில் குருக்களும் (பூசாரி) சுயம்பாகியும் (சமையற்காரன்) பின்வருமாறுபேசிக் கொண்டார்கள்.

சுயம்பாகி. குருக்களய்யா, சீக்கிரம் மணியை அடித் துத் தீபாராதனை காட்டும். கோவிலைச் சாத்தலாம்.

குருக்கள். இராமு (சுயம்பாகியின் பெயர் இராமு வையன்) மணி ஒன்பதுதானே ஆகிறது. என்ன விசேஷம்? 12-மணிக்கல்லவா உச்சிக்காலம் நடத்தவேணும்.

சுயம்பாகி. இன்றைக்கொருநாள்மட்டும் உச்சிக்கால பூஜையை ஒன்பது மணிக்கு செய்தாலென்ன? பட்டணத்

தில் ஒரு பெரிய டாக்டராம். அவர் மகளுக்கு இன்றைய தினம் கலியாணம். வந்த பிராமணர்களுக்கெல்லாம் லட்டு ஜிலேபியோடு சாப்பாடு. ஒரு ரூபாய் பூரிதக்ஷிணை. இன்று இராத்திரி தேவடியாள் சதிராட்டமாம். இங்கே இருந்து என்ன செய்யப்போகிறோம். வேடிக்கையாய்ப் போய் பார்த்துவிட்டு வரலாம்.

குருக்கள். நீ சொல்வது சரிதான். ஆனால் நாம் சாயங்காலத்திற்குள் திரும்பவேண்டுமே. சாயரக்ஷை பூஜை நடக்கவேண்டாமா ?

சுயம்பாகி. இன்றைக்கு ஒருநாள் ராத்திரி சாமியைப் பட்டினி போட்டாலென்ன வந்துவிட்டது. ஏகாதசி விரதமென்று சாமி நினைத்துக்கொள்ளட்டும் இராத்திரி அங்கே இருந்து தேவடியாள் சதிர் ஆட்டமும் பாத்துவிட்டு நாளைக்குக் காலையில் வந்துவிடலாம்.

குருக்கள். அது தப்பிதமான காரியம். இந்த சங்கதி ஊரில் யாருக்காவது தெரிந்து மொட்டைப்பிராது எழுதிப் போட்டால் அது விசாரணைக்குவந்து நமது வயிற்றுப்பாடு திண்டாட்டமாய்விடும். நீ என்னவோ சாமியைக் கேவலமாய்ப் பேசுகிறாய். இப்பொழுது சாமிதானே நமக்குச் சோறுபோடறது. பட்டணக்கரைகளில் ஒவ்வொருவன் பி. ஏ., எம். ஏ., பாஸ்பண்ணிவிட்டு பதினைந்து ரூபாய் குமாஸ்தா வேலை கிடைக்காமல் மண்டிபோடுகிறான்.

சுயம்பாகி. (கோபத்துடன்) ஓய், நீர்தானே இந்தக் கல்லைக்கட்டி அழும். நான் இப்பொழுது போகத்தான் போகிறேன். எனக்கு இன்று ராத்திரி ஒரு வேளைக்கு

மட்டும் ரஜா கொடும். நாளை காலை டியூட்டிக்கு வந்து சேருகிறேன்.

குருக்கள். உனக்குச்சரி. கவலையில்லாதவன், உனக்குப் பெண்டாட்டியா! பிள்ளையா!! நான் பிள்ளைகுட்டிக்காரன். என் பிழைப்புக் கெட்டுவிடும் என்றார். இந்த விதமாக ஊருக்கு ஊர், தெருவுக்கு தெரு, வீட்டிற்குவீடு நாயுடு அவர்கள் நடத்தும் கல்யாணத்தின் பேச்சே மிகுந்திருந்தது. இனி கலியாண விமரிசையைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுவோம்.

டாக்டர்வீட்டுக் கூடத்தின் மத்தியில் கிழக்குமுகமாய் இரண்டு சிறு மணமேடைகள் கட்டி சிறு வாழைக்கம்பங்களாலும் மாவிலைத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. முகூர்த்தம் காலை 5 மணிக்கு, சூரிய உதயத்துக்கு முன்பே நடத்தவேண்டியிருந்ததால் கலியாணத்திற்கு முந்தின நாள் இரவு 10 மணிக்கு மைலாப்பூர் ஜமீன்தார் பங்களாவில் இருந்து கோமளமல்லி நாச்சியாரையும் திருவல்லிக்கேணியிலிருந்து பாலகிருஷ்ண நாயுடுவையும் தனித்தனி இரண்டு குதிரை பூட்டிய சாரட்டுவண்டிகளில் மேளதாளத்துடன் "கமலவிலாஸ்" என்னும் மாளிகைக்கு அழைத்துக் கொண்டுவந்தார்கள். சீனு, ஜப்பான் முதலிய தேசங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட அபூர்வமான வாணங்களின் வேடிக்கை இடையிடையே நடந்தது.

டாக்டர் நரஸிம்மலு நாயுடு தன் மாப்பிள்ளைக்கு, ஆயிரம் ரூபாயில் வைரக்கடுக்கனும் ஐந்நூறு ரூபாயில் தங்க அரைஞாணும் கைக்கு மோதிரங்களும் தங்கச் சங்கிலியுடன்

சடியாரமும் விலையுயர்ந்த பட்டுடைகளும் விவாகசமயத்தில் கொடுத்தார். பத்மாவதியம்மாள் மரகதவல்லிக்கு இரண்டாயிரம் ரூபாய் பெறுமான வைரமும் கெம்பும் பதித்த வங்கியை முகூர்த்தகாலத்தில் கன்னிகாதான பூஷணமாகக் கொடுத்தாள். நிச்சயதாம்பூலத்துக்கு வந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் புருஷோத்தம நாயுடு கலியாணம் முடிந்த பிறகு ஊருக்குப் போகலாம் என்றெண்ணி இரண்டுவாரம் ரஜாவாங்கிக்கொண்டு சென்னையிலேயே இருந்தார்.

கலியாணம் மூன்று நாட்களும் வந்த கனவான்களுக்கெல்லாம் சாப்பாடும் தாம்பூலமும் கொடுக்கப்பட்டன. டாக்டர் நரசிம்மலு நாயுடு ஐரோப்பிய கனவான்களுக்கு ஒரு தனிவிருந்து நடத்தினர். அந்த விருந்துக்குக் கவர்னர் துரையவர்கள் தன் லேடியுடன் விஜயம்செய்தார். கிறிஸ்டியன் காலேஜ் தலைவர் மெஸ்டன் துரையும் அந்த விருந்துக்கு வந்திருந்து தன் மாணாக்கனாகிய பாலகிருஷ்ணனை ஆசீர்வதித்து டாக்டர் நாயுடுவையும் கௌரவப்படுத்தினர்.

மூன்றும்நாள் சாயங்காலம் மஞ்சள் நீராட்டம்நடந்தது. அதற்கு வசந்த ஆட்டம் என்றும் பெயர். இது ஒரு வேடிக்கையான விளையாட்டு கலியாணத்திற்கு வந்திருந்த பந்துக்களின் உடம்பிலும் ஆடைகளிலும் வசந்த நீர் தெளிப்பார்கள்; அல்லது பீச்சாங்குழலால் அடிப்பார்கள். இது முடிந்ததும் இரவு ஏழு மணிக்கு ஊர்கோலம் தொடங்கிற்று. நூறு கியாஸ்லைட்டுகள் வரவழைக்கப்பட்டிருந்தன. நகரெங்கும் ஜகஜ்ஜோதியாய் விளங்கிற்று. ஆடவர்கள் யாவரும் தங்களை மன்மதனாக எண்ணி உயர்ந்த உடைகளை அணிந்து

மார்பில் கலவைச் சந்தனமும் வாய் நிறைய வெற்றிலையு மாகப் புறப்பட்டார்கள். பெண்களோ பதினெட்டு முழ நீளமும் மூன்றுமுழ அகலமும் ஐம்பத்தாறுராத்தல் கனமும் உள்ள பலவிதமான பட்டுப்புடவைகளை அணிந்துகொண்டு சொந்தமும் இரவலுமான அநேக நகைகளைக் கழுத்திலும் கையிலும் பூட்டிக்கொண்டு, ஒரு பக்கமாக ஜதை சேர்ந்தார்கள். இவர்கள் தங்கள் டிரங்கு பெட்டிகளுக்குள் அடைத்துப் பத்திரப்படுத்திவைத்திருந்த புடவை, ரவிக்கைகளுக்கெல்லாம் அன்று க்ஷேமம் பிறந்தன. அவைகளும் ஊர் கோலத்தைப் பார்க்க வெளியே புறப்பட்டனவென்றே சொல்லலாம். இன்னும்சில பெண்கள் தங்கள் உடம்பு முழுதும் மூக்குக்கண்ணாடியின் உதவியில்லாமலே பார்ப்பவருக்குச் சுலபமாய் தெரியும்படியான அவ்வளவு மெல்லிய ஆடைகளைத் தரித்து இரண்டொரு நகைகள்மட்டும் வெகு நாணயமாய் போட்டுக்கொண்டு ராங்கியாகப் புறப்பட்டார்கள்.

ஜமீன்தாரும் கோமளவல்லியும் ஒரு மோட்டாரிலும், பாலகிருஷ்ணநாயுடுவும் மரகதவல்லியும் ஒரு மோட்டாரிலும் இருந்தார்கள். கோமளவல்லி தலை குனிந்தவண்ணம் ஆடாமல் அசையாமல் தங்கத்தில் வார்த்த பதுமையைப் போலிருந்தாள். தலையைக் கொஞ்சம் நிமிர்த்தி வாணவேடிக்கைகளின் அழகையும் கியாஸ் லைட்டுகளின் பிரகாசத்தினுல் காணப்படும் நகரத்தின் அழகையும் பார்க்கவேண்டுமென்று ஆசைதான். ஆனுல் நாணம் அவளை மூடிக்கொண்டது.

மரகதவல்லி படிப்பும் நாகரீகமும் நிறைந்த பெண்ணானதால் 'கலியாணத்திற்கு இத்தனை ஆடம்பரங்கள் அவசியமா!

வைதிக சம்பந்தமான சடங்குகளைத் தள்ள வேண்டாம். மற்றப்படி ஊர்கோலம், வாணவேடிக்கை, பாட்டு முதலியவைகளில் ஜனங்கள் கண் மூடித்தனமாய் பணத்தைச் செலவழிக்கிறார்களே. இந்தப் பணத்தினால் பொது ஜனங்கள் முன்னேற்ற மடையும்படி எத்தனையோ வகையில் செலவழிக்கலாமே என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள். இது நிற்க,

கலியாணம் என்பதென்ன? கலியாண காலத்தில் புரோகிதர் சொல்லும் மந்திரங்களின் தாத்பரியம் என்ன? ஒருவருக்குந்தெரியாது. ஒருவேளை விவாகத்தை நடத்தி வைக்கும் புரோகிதருக்குத்தான் தெரியுமோ? அதுவும் சந்தேகந்தான். ஆயிரக்கணக்கான பணம் செலவழித்துக் கலியாணம் நடத்தி ஊராரும் உற்றாரும் அறியும்படி புருஷன், மனைவி யென்று ஆனாலும் அநேக வீடுகளில் ஸ்திரீ புருஷர் மனஒற்றுமையோடு கூடிவாழாமல் கீரியும் பாம்பும்போல் இருக்கிறார்கள். மச்சு வீட்டில் இருந்தாலும் மனைவியும் புருஷனும் அன்னியோன்னியமாய் இருப்பதில்லை. கூச்சு வீட்டில் குடியிருந்தாலும் ஒரு குடியானவன் தன்மனைவியுடன் குதூகலமாய் காலந்தள்ளுகிறான். ஆகவே கலியாணத்திற்கு இன்றியமையாதது மணமக்களின் உள்ளன்பு. பெற்றோர் அதைக்கவனித்து விவாகத்தை நடத்த வேண்டும். இது இவ்வாறிருக்க.

சிலர் விவாஹ முதலிய சடங்குகளில் பெருந்திரளாகிய பொருளையெல்லாம் இரண்டு மூன்று தினத்துக்குள்ளே பாழாக்குகின்றனர். இந்தப் பொருளைக்கொண்டு இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படத்தக்கவையான சிறந்த தருமங்க

ளைச் செய்யலாம். வித்தியாசாலைகளை ஸ்தாபித்துக் கல்வியில் விருப்பமுடைய வறிய பிள்ளைகளுக்கு அன்ன வஸ்திரமும் புஸ்தகமும் கொடுத்து உதவி செய்யலாம். வைத்தியசாலைகள் இல்லாத ஊரிலே வைத்தியசாலை ஏற்படுத்தி இரக்கமுடைய வைத்தியர்களை நியமித்து ஏழைப் பிணியாளர்களுக்குத் தரும வைத்தியம் செய்யலாம். பணமுள்ளவர்கள்தான் பெருமைக்காகவேனும் கலியாணம் முதலிய சமயங்களில் ஆடம்பரமாகப் பணத்தைச் செலவழிக்கிறார்கள் என்றால், பணமில்லாதவர்களும், புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டதைப்போல் பணக்காரருக்கு நாங்கள் இளைத்தவரா என்றெண்ணிக் கடன் வாங்கிச் செலவு செய்கிறார்கள். கடன் வாங்கும் பொழுது சந்தோஷம். கொடுக்கும் பொழுது விசனம், சிலர் தாம்வாங்கின கடனைச் செலுத்துவதற்கும் வழியின்றித் தங்கள் சொத்துக்களை விற்றுக் கடன்காரருக்குக் கொடுத்துவிட்டு ஒட்டாண்டியாய் நிற்கிறார்கள். கடன் பட்டவன் மனம் கால் நாளிகை கூட நிம்மதியாயிராது. இராமனுடைய பாணம் இராவணனுடைய மார்பத் துளைத்த பொழுது அவனுடைய மனோநிலையைக் கவிச் சக்கிரவர்த்தியாகிய கம்பர்,

> "கடன் கொண்டார் நெஞ்சம் போலக்
> கலங்கினான் இலங்கை வேந்தன்"

என்று கடன்பட்டவன் மனதிற்கு ஒப்பிடுகிறார்.

ஆகையால், வாசகர்களே நம்மவர்கள் கலியாணம் முதலிய சுப காரியங்களில் மிதமிஞ்சி பணத்தைச் செலவழிக்காமல் பணத்தின் அருமையைத் தெரிந்து அதைக் கிரமமான வழியில்மட்டும் செலவிடுவது நல்லது. பொரு

ளில்லாதவனை இவ்வுலகத்தில் ஒருவரும் மதியார்கள். "இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள்" என்று நம் அவ்வை மூதாட்டியும், பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்று நாயனாரும் கூறியிருக்கின்றனர். இனி நாம் கதையை மேலே தொடங்குவோம்.

ஊர்கோலம் முடிவதற்கு இரவு மணி மூன்றாய்விட்டது. ஜமீன்தார் அழகிரிசாமி நாயுடு, கலியாணம் முடிந்த மறு நாள் தன் சமஸ்தானத்திற்குப் புறப்பட எண்ணித் தன் வருகையை அரியலூர் ஜனங்களுக்குத் தன் மானேஜர் மூலம் அறிவித்தார். கலியாணம் முடிந்து தம்பதி சகிதமாய் வரும் தங்கள் மகாராஜாவை எதிர்கொண்டழைப்பதற்காக, அரியலூர் மகாஜனங்கள் பூரணகும்பம், புஷ்பமாலை, வெள்ளித் தட்டில் பழம், கற்கண்டு முதலியவற்றுடன், மேளதாளம் பாண்டு வாத்தியங்கள் சகிதம் ஒரு மைலுக்கு அப்பால் கும்புகூடிக் காத்திருந்தார்கள். அரண்மனைப் புரோகிதர் அப்பா சாஸ்திரிகள், ஜமீன்தார் அந்த இடத்திற்கு வந்ததும் அவருக்கும் இராணியாருக்கும் மாலை போட்டு வெள்ளித் தட்டைக் கையில் கொடுக்க வேணுமென்று, தட்டைத் தாங்கிக்கொண்டு நின்றார்.

அரியலூரில், தெருக்கள் எல்லாம் குப்பைகூளமில்லாமல் சுத்தம் செய்யப்பட்டுப் புதிய வெண்மணல் பரப்பி, ஒவ்வொரு வீட்டின் வாசல் முன்பு கோலம் போடப்பட்டிருந்தது. ஜமீன்தார், ஜனங்கள் காத்திருக்கும் இடத்தை அடைந்ததும் மோட்டாரை நிறுத்தி அவர்கள் செய்த மரியாதையை ஏற்றுக்கொண்டு, ஊருக்குள் பிரவேசித்தார். ஒவ்வொரு வீட்டுவாசலுக்கு முன் மோட்டார் நின்றதும்

2 பெண்மணிகள் வந்து ஆலத்தி சுற்றினார்கள். அரியலூரில் ஒரு பெருமாள் கோவில் உண்டு. ஜமீன்தார் அக்கோவிலுக்குள் தன் மனைவியுடன் பிரவேசித்தார். ஆலயம் எங்கும் தீபங்கள் ஏற்றப்பட்டு அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோவில் அர்ச்சகர் தேங்காயுடைத்துத் தீபாராதனை காட்டி பூமாலை முதலிய பிரசாதத்தை ஜமீன்தார் கையில் கொடுத்தார். அதன் பிறகு ஊரை வலமாகச் சுற்றிக்கொண்டு தன் அரண்மனைக்குள் வந்து, கோமளவல்லி அம்மாள் வலது காலை முன் வைத்து உள்ளே செல்லத் தான் அவள் பின்னே பிரவேசித்தார். கொலு மண்டபத்துக்குள் ஜமீன்தாரும் ராணியும் இரண்டு ஆசனங்களில் அமர்ந்தார்கள். அங்கு வந்தவர்களுக்கெல்லாம் சந்தன தாம்பூலம், வழங்கப்பட்டது. சிலம்ப வித்தையில் தேர்ந்த சிலர் மகாராஜவுக்கு முன்னிலையில் கம்புகளைத் தாங்கிச்சிலம்பம் ஆடினார்கள். சமஸ்தான விகட கவி கொஞ்ச நேரம் விகடம் நடத்தினர். அரண்மனைத் தமிழ் வித்வான் தருமலிங்கக் கவிராயர் ஜமீன்தார் பேரில் ஒரு வாழ்த்துக் கவிபாடி அதன் பொருளையும் விளக்கினார். ஜமீன்தார் அவர்களுக்கெல்லாம் தக்க வெகுமதி அளித்துத் தன் ஜனங்களுக்கும் வெகு நேர்த்தியாய் விருந்தளித்தார்.

நாயக்கன்பட்டி கிருஷ்ணசாமி நாயுடு தன் மருமகனிடம் விடை பெற்றுக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டார். தான் இன்னும் ஒரு மாசத்திற்குள் திரும்ப வந்து தன் மகளையும் மருமகனையும் ஊருக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். கோமளவல்லி, தன் தந்தையைப் பிரிய மனம் சகியாமல் கண்களில் நீர்ப்பெருக்கினாள். கிருஷ்ணசாமி

நாயுடுவுக்கும் அந்தச் சமயம் அதிக துக்கம் வந்துவிட்டது. தன் மகளை அருகணைத்து உச்சிமோந்து "குழந்தாய், அழாதே, நான் கூடியசீக்கிரம் வந்து உன்னையும் உன் புருஷனையும் கூட்டிக்கொண்டு போவேன்" என்று தேற்றினார்.

ஜமீன்தாரின் சகோதரி கமலவல்லி அம்மாளும் கிரகப் பிரவேசம் முடிந்தவுடன் தன் தம்பியிடம் சொல்லிக்கொண்டு மோட்டாரில் ஏறிசென்னைக்குப் போய்ச்சேர்ந்தாள்.

பத்தாவது அத்தியாயம்.

நாயகன் பிரிவைச் சகியாத நங்கை.

பெற்ரேர் தங்கள் பிள்ளைகளுக்குக் கலியாணம் முடித்தவுடன் அவர்களை வேருக இருக்கச் செய்து இல்லறம் நடத்தும்படி செய்கிருர்கள். வைசியர்களுக்குள் இவ்வழக்கம் புராதனகாலம் தொட்டு இருந்து வருகிறதென்பது சிலப்பதிகாரக் கதையின் மூலம் தெரிகிறது. காவிரிப்பூம்பட்டிணத்தில் சிறந்து விளங்கின வணிகர் குலத்திலகனுகிய மாசாத்துவன் தன் மகன் கோவலனுக்கு விவாகம் நடத்திய பின் அவனையும் அவன் மனைவி கண்ணகியையும் தனி மாளிகையில் வைத்து இல்லறம் இனிது நடத்தும்படி செய்தான். "காதல் இருவர் கருத்தொத்து ஆதரவுபட்டதே இன்பம்" என்று ஔவைப் பிராட்டியார் கூறியுள்ள பிரகாரம் நாயகனும் நாயகியும் ஒருமித்து இன்புற்று வாழ்வதற்கு இது அனுகூலமாயிருக்கிறது. ஆனல் சிலவீடுகளில் புதிதாக மணம் செய்துகொண்ட புருஷன் மனைவி இவர்களின் நிலைமை அதிகப் பரிதாபமாய் இருக்கிறது. "கலியாணம் ஆகியும் பிரம்மச்சாரி, கடன் வாங்கியும் பட்டினி" என்ற கதை போல, புருஷனும் மனைவியும் தங்கள் இஷ்டப்படி பேசிக்கொள்ளவும் வெளியிடங்களுக்கு உலாவப் போகவும் வழியில்லாமல் வீட்டில் உள்ள கிழடுகட்டைகளின் இடைஞ்சல் அதிகம். மாமியார் அரசு செலுத்தும் வீட்டில் மருமகளுக்கு ஒரு அதிகாரமும் கிடையாது. தன் புருஷனிடம் பேசவேண்டுமென்ருலும் மாமியின் அனுமதி வேணும்,

சிலவேளை அனுமதி பெறுமல் பேசிவிட்டாலோ உடனே யுத்தத்திற்குப் புறப்பட்டு விடுவாள் மாமி யென்ற பத்திர காளி. வாசகர்களே! இதற்குக் காரணம் என்ன? மாமி மார்களிடம் கல்வி அறிவும் நாகரீகமும் கடுகளவும் இல்லா ததுதான். நமது கதாநாயகியாகிய மரகதவல்லிக்கு இப்படிப் பட்ட உபத்திரவமும் கொடுமையும் ஏற்படவில்லை. அவளுக்கு வாய்க்கப்பெற்ற மாமி பத்மாவதி அம்மாள் படித்தவளாயும் சிறந்த விவேகியாயும் இருந்தபடியால் மரகத வல்லியைப் பெற்ற பெண்ணினும் மன்மடங்கு அதிகமாய் நேசித்தாள்,

மரகவல்லிக்கு விவாகமான சமயம் சென்னையில் கோடை வெப்பம் தாங்க முடியாமல் இருந்து. இதை அறிந்த டாக்டர் நரசிம்மலு நாயுடு, தன் மகளேயும் மருமகனேயும் திருக்குற்ருலம் என்னும் இடத்தில் ஒரு மாசம் வசிக்கும்படி அனுப்பினுர்.

பாலகிருஷ்ண நாயுடு, லண்டனுக்குப் புறப்பட ஒரு மாசகாலமே இடையில் இருந்தது. இந்த ஒரு மாசமும் புதிய மணமக்கள் சுயேச்சையாயும் இன்பமாயும் இருக் கட்டும் என்பது டாக்டருடைய நோக்கம். திருக்குற்ருலம் என்பது திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி ரயில்வே ஸ்டேஷனில் இருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ள ஒரு மலைப்பிரதேசம். அங்கே ஐந்தருவி, தேன்அருவி, சண்பகாதேவி, முதலிய அநேக நீர்வீழ்ச்சிகள் உண்டு. கோடை காலத்தில் குளிர்ச்சிக்காக அநேக கனவான்கள் அங்கே வசிக்க வருகிருர்கள். சில பிரபுக்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் அங்கே சொந்த பங்களாக்கள் உண்டு. வாடகைக்கு

விடும் பொருட்டும் அநேகம் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தன.

திருக்குற்றாலம் சைவ சமய குரவர்களால் பாடல் பெற்ற ஸ்தலங்களில் ஒன்று.

"காலன் வருமுன்னே கண் பஞ்சடை முன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல் விழுந்து
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடு முன்னே
குற்றாலத் தானையே கூறு."

என்று ஒருஞானி பாடியருளியிக்கிறார். இக்கவியின் பொருள் யாதெனில் மனிதனுடைய சரீரம் அநித்யம். ஆகையால் கூற்றுவன் வருவதற்கு முன்னே கடவுளை நினைந்து வழிபடு என்பதாம்.

"யமஸ்ய கருணா நாஸ்தி தஸ்மாத்
ஜாக்ரத. ஜாக்ரத: என்று வடமொழியிலும்

ஒரு சுலோகம் உண்டு. அதாவது யமனுக்குக் கருணை கிடையாது. போற்றினும் போகான், பொருளொடும் போகான். ஆகையால் முன் ஜாக்கிரதையா யிருந்துகொள். என்பது இந்த சுலோகத்தின் பொருள். இதுநிற்க பத்மாவதி அம்மாள், மரகதவல்லி, பாலகிருஷ்ணன் இம்மூவரும் சென்னையினின்றும் புறப்பட்டு குற்றாலம் வந்து சேர்ந்து ஒருசிறுபங்களாவை ஒருமாசத்திற்கு வாடகைக்கு அமர்த்தி அதில் குடியிருந்தார்கள். உதவிக்காக ஒரு வேலைக்காரியையும் கூட்டிக்கொண்டு போனார்கள்.

இவ்வுலகில் மலையைக்காட்டிலும் மனதிற்கு உற்சாகத்தையும், பயத்தையும், பெருமையையும் கொடுக்கக்கூடிய

பொருள் வேறில்லை. மலைகள் உயர்ந்தோங்கி ஆகாயத்தை அளாவி இருப்பதனால் நீருண்டு செல்லும் மேகத்தைத் தடுக்கின்றன. தடைப்பட்ட மேகம் தாரைதாரையாய் மழை பெய்கின்றது. அதனால்தான் மலைப்பிரதேசங்களில் அதிக மழை பெய்கிறது. நாம் நோய்வாய்ப்பட்ட காலங்களில் உட்கொள்ளும் மருந்துப் பச்சிலைகளும் மூலிகைகளும் மலைகளிலிருந்து கிடைக்கின்றன.

"உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாருமுண்டு"

என ஔவையாரும் பாடியுள்ளனர்.

பாலகிருஷ்ணன், பத்மாவதியம்மாள், மரகதவல்லி ஆகிய மூவரும் போயிருந்த சமயம் குற்றாலம் அறிவியிலிருந்து நீர் பொழிந்துகொண்டிருந்தது. இவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் அருவிநீரில் தலை வைத்து ஸ்நானம் செய்தார்கள். இவர்கள் ஓர்நாள் ஐந்தருவி (Five Falls) என்னும் இடத்தைப் பார்க்கப்போனார்கள். அது குற்றாலத்திலிருந்து இரண்டு மைல் தூரம் உள்ளது. இவர்கள் உலாவப்போனது சாயங்கால நேரம். மரகதமும் பாலுவும் கைகோர்த்துக்கொண்டு பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே போனார்கள். பத்மாவதியம்மாளும் வேலைக்காரியும் இவர்களுக்குப் பின்னே வந்தார்கள்.

ஐந்தருவியின் சமீபத்தில் தருக்களடர்ந்த ஓர் பூஞ்சோலையுண்டு. அந்த சோலைக்குள்ளே மரகதமும் பாலுவும் நுழைந்தார்கள். அச்சோலையில் இருந்த மான்கூட்டங்கள்

இவர்கள் வருவதைக்கண்டு அஞ்சி ஓடின. பாலகிருஷ்ணன் மரகதத்தைப்பார்த்து "மரகதம், இதோ பார். இம்மான்கள் உனது நடைக்கும் மருண்ட பார்வைக்கும் நாணி அப்பாற் போகின்றன." என்றார். மரகதவல்லி "இல்லை இல்லை. உங்களைக் கண்டுதான் அவை அஞ்சி ஓடுகின்றன. புருஷர்கள் எப்பொழுதும் பொல்லாதவர்கள். அவர்களால் என்ன அபாயம் வருமோ என்று நினைத்துத்தான் ஓடுகின்றன" என்று பதில் கூறினாள். ஒரு மல்லிகைக்கொடி, சண்பக மரத்தைச் சுற்றிக்கொண்டிருந்தது. அக்காட்சியைப்பார்த்த பாலகிருஷ்ணன், "மரகதம், இங்கே பார்த்தனையா, இப்பசுங்கொடி தனக்கொரு ஆதரவின்றி இச்சண்பக விருக்ஷத்தை அணைந்துகொண்டிருக்கிறது. இதிலிருந்து பெண்மக்களுக்கு ஆண்கள்தான் ஆதரவு என்பது விளங்கவில்லையா என்றான். இவர்கள் இந்தவிதமாக வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்த சமயம் பத்மாவதி அம்மாளும் வேலைக்காரியும் அங்கே வந்து சேர்ந்தார்கள். பாலு தன் தாயைப் பார்த்து, "அம்மா, இம்மலைத்தொடரின் காக்ஷி எப்படியிருக்கிற" தென்றான்.

பத்மாவதி. பாலு, பட்டணத்துக்கு இந்த இடம் எவ்வளவோ ரம்மியமாயும் மனதிற்கு நிம்மதியாயுமிருக்கிறது" என்றாள்.

பாலு. அம்மா, இப்பொழுது இருட்டும் சமயம் ஆகிவிட்டது. நாம் இனிமேல் இங்கிருப்பது உசிதமல்ல. புலி, கரடி, பாம்பு முதலிய துஷ்ட மிருகங்கள் இரைதேடும் நிமித்தம் வெளியே கிளம்பலாம். ஆகையால் நாம் வேகமாகவே நடந்து பங்களாவிற்குப் போகலாம் என்றான்.

இவர்கள் பங்களாவிற்குப் போய்ச் சேருவதற்குள் நன்ருய் இருட்டிவிட்டது. பாலகிருஷ்ணன் வாசலில் கிடந்த ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். அப்பொழுது ஒரு சிறு பையன் வந்து அச்சடித்த விளம்பரம் ஒன்றைப் பால கிருஷ்ணனிடம் கொடுத்தான். அது என்ன நோட்டீஸ் என்பதை அறிய பாலகிருஷ்ணனுக்கு அதிக ஆவல் உண்டான தால் கூடத்திற்குப்போய் வெளிச்சத்தில் படித்துப்பார்த் தான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:—"நாளைய தினம் மாலை நான்கு மணிக்குக் குற்ருலநாதர் ஆலயத்தை அடுத்துள்ள சித்திரமண்டபத்தில் நன்னிலம் ஸ்ரீலஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகள் "மோட்ச மார்க்கம்" என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவு நடத்துவார்கள். பக்தர்கள் அனைவரும் வந்து கேட்டு சிரவணனந்தம் அடை யும்படி வேண்டிக்கொள்கிருேம்."

பாலகிருஷ்ணன் இந்த விளம்பரத்தைப் படித்து முடிந் ததும் அதைக் கேட்டுக்கொண்டிருந்த பத்மாவதியம்மாள் "பாலு, நாளைய தினம் ஒரு சத்கால க்ஷேபம், நான் அவசியம் அந்தப் பிரசங்கத்தைக் கேட்கவேண்டும்" என்ருள்.

பாலு. அம்மா, நீங்கள் மட்டும்தாஞ போகவேண்டும். நானும் மரகதமும்கூட வரலாம் அல்லவா.

பத்மாவதி. நீங்கள் சிறுபிள்ளைகள். உங்களுக்கு இந்த வயசிலே இதெல்லாம் கேட்கவேண்டுமென்று அவசியமில்லை. நீங்கள் வெளியே போய் வேடிக்கையாய் உலாவிவிட்டு வாருங்கள். நான் வேலைக்காரியத் துணைக்குக் கூட்டிக் கொண்டு கோவிலுக்குப் போய்விட்டு வருவேன். என்று

சொன்னாள். அப்பொழுது மரகதவல்லி "மாமி, ஞானோபதேசத்தைக் கேட்கவும், ஞானமார்க்கத்தை அனுசரிக்கவும் சிறியவர், பெரியவர் என்ற பேதம் உண்டா? பிரக்லாத ஆழ்வாரும் துருவனும் சிறுபிள்ளைகளாய் இருந்தபொழுது அவர்களுடைய பக்திக்கு இரங்கி பரந்தாமன் காக்ஷி தந்து முக்தி கொடுக்கவில்லையா? நாங்களும் பிரசங்கத்தைக் கேட்க ஆசைப்படுகிறோம் என்று சொன்னாள். பத்மாவதியம்மாள் தன் மருமகளின் புத்திசாலித்தனத்திற்கு மெச்சி மனதிற்குள் சந்தோஷப்பட்டாள்.

பிரசங்கம் நான்குமணிக்குத் தொடங்குகின்றபடியால் மணி மூன்று அடித்தவுடன் பத்மாவதியம்மாள் ஸ்தானம் செய்து வெண்பட்டு உடுத்தி ஜாதியாசாரப்படி நெற்றியில் திருமண், ஸ்ரீ சூரணம் தரித்து கழுத்தில் துளசிமாலையணிந்து புறப்படுவதற்கு ஆயத்தமானாள். மரகதமும் பாலுவும் பத்மாவதியம்மாளுடன் புறப்பட்டார்கள். அவர்கள் குடியிருந்த வீட்டிற்கும் கோவிலுக்கும் அரை மைல் தூரம் இருந்தது. இவர்கள் போனதும் பிரசங்கியாரும் மேடைமேல் ஏறிநின்று சொற்பொழிவுக்கு ஆரம்பித்துவிட்டார். அவர் செய்த பிரசங்கத்தை நாம் அப்படியே எழுதவில்லை யென்றாலும் அதன் சாராம்சங்களைமட்டும் சுருக்கமாய்ச் சொல்லுவோம். அது பின்வருமாறு.

சபையோர்களே! நான் இப்பொழுது இச்சபையின் கண் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட விஷயம் மோட்சமார்க்கம் என்பதே. மோட்சமார்க்கம் என்பதற்கு மோட்சத்தை அடைவதற்குரியவழி என்றுபொருள். மோக்ஷம் என்றால் என்ன? அதை அடைவதற்குரிய வழி யாது?

என்பதைப்பற்றி நாம் இப்பொழுது ஆராயவேண்டும். மோக்ஷம் என்பதற்கு "விடுதலை" (Release) என்றர்த்தம். ஜீவன் அல்லது இச்சரீரத்தினின்றும் விடுதலை அடைவது' அதாவது சரீரமாகிய சிறையில் பிரவேசியாமல் இருப்பது என்பது விரிவுரையாகும். மோக்ஷம் என்ற பதத்திற்கு எதிரிடை "பந்தம்" அல்லது கட்டு. பந்த மோக்ஷங்களின் இலட்சணத்தைத் தெரிந்து பந்தமாகிய தளையை அறுத்து மோட்சத்தை அடையாத பாமரஜனங்கள் "புனரபிஜனனம், புனரபி மரணம் என்ற பிரகாரம் பிறப்பு இறப்பாகிய கால சக்கரத்தில் சுழன்றுகொண்டே யிருப்பார்கள். பிறப்பு, இறப்பு, இவ்விரண்டும் இல்லாத இடமே மோட்சமாகும்.

பிறவிக்குக் காரணம் எதுவென்பதை ஆராயப் புகுந்தால் அது ஆசையேயாகும்.

"அவாவென்ப எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாப் பிறப்பீனும் வித்து"

என்றார் திருவள்ளுவ நாயனார். ஆகையால் நாம் கடவுளிடம் கேட்கவேண்டிய வரம் பிறவாமை. அப்பிறவாமை, ஆசை நீங்க அற்றுப்போகும்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை
மற்று அது வேண்டாமை வேண்ட வரும்."
என்று குறளில் கூறப்பட்டுள்ளது.

"மாதா வுடல்சலித்தாள் யான் மனம்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே" என்றும்
"அன்னை யெத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பெண்டிர் எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ"

என்றும் பட்டினத்தடிகள் பிறவிப்பிணியின் கொடுமையைப் பற்றிப் புலம்புகிறார்.

நாம் இப்பொழுது பந்தமோக்ஷத்தின் தன்மையைத் தெரிந்துகொண்டோம். இனி மோட்சத்தை அடையும் மார்க்கமென்ன ? என்பதைப்பற்றி சிந்திப்போம்.

இவ்வுலக ஆசையில் ஈடுபடுவதற்கும் அதை வெறுப்பதற்கும் நமது மனமே முக்கிய காரணமாயிருக்கிறது. ஆகையால் மனம் சுத்தமாகவேண்டும். "மனமது செம்மையானல் மந்திரம் ஜெபிக்கவேண்டாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனமே மாயையின் வடிவாயிருப்பதனல் மனதை அடக்கினவன் எவனே அவனே மாயையை ஜயிக்கிறான்.

"மனம் மனம் எங்குண்டு மாயையும் அங்குண்டு
மனமாபை அன்றி மற்றொன்று மில்லை"

என்று ஆன்றோர் கூறியுள்ளார்கள். ஆனல் மனமோ இலேசில் அடங்காதது. ஒரு குரங்கிற்கு எத்தனை சேஷ்டையுண்டோ அவ்வளவு சேஷ்டையும் மனதிற்குண்டு. எப்பேர்ப்பட்ட துஷ்ட ஜந்துக்களையும் அடக்கிவிடலாம். உலகத்தில் எவ்வளவு அரியபெரிய காரியமும் நிறைவேற்றலாம். ஆனல் மனதைமட்டும் அடக்குவது கஷ்டம் என்பதைக் குறித்து. நிஷ்டானுபூதிச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் கூறுகிறது என்னவென்றால்:—

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்
ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி யெடுத்தாட்டலாம்

வெந்தழலி னிரதம்வைத்து ஐந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்,
வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்
விண்ணவரை யேவல் கொள்ளலாம்,
சந்ததமும் இளமையோ டிருக்கல ம் மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்,
ஜலமேல் நடக்கலாம், கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்.
சிந்தையை அடக்கியே சும்மா விருக்கின்ற
திறம் அரிது. சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான
தெய்வமே தேஜோமையானந்தமே.

தன்னையறிந்தால் தலைவனை அறியலாம். ஆகையால் ஒவ்வொருவரும் தன்னை அறியவேண்டும். அதாவது நான் யார் என்பதே. இங்கே "நான்" என்பது அநித்தியமாகிய சரீரத்தை உணர்த்தாமல் நித்திய வஸ்துவாகிய ஜீவனைக் குறிக்கிறது.

"நானார், என்னுள்ளமார், ஞானங்களார்
என்னை யாரறிவார்?" என்றார் மாணிக்கவாசக சுவாமிகள். நான் என்பது தேகமல்ல தேகத்திற்குள்ளிருக்கும் தேகி. தேகத்துக்கும் தேகிக்கும் உள்ள சம்பந்தங்களைத் தெரிந்து தேகியைத் தேகத்தோடு இணைக்காமல் விலகியிருக்கும்படி செய்வதே மோட்சமார்க்கமாகும். இம் மார்க்கத்தை இல்லறத்திலிருந்தே அனுசரிக்கலாம். துறவறம் புகவேண்டுமென்ற நியதி இல்லை. காவி வஸ்திரம்

அவசியமில்லை. ஜெபமாலை வேண்டியதில்லை. இவை எல்லாம் வெளி வேஷமே.

இல்லறத்தில் இருந்தால் கர்மம் செய்ய நேரிடுகிறது. கர்மம் பிறப்புக்குக் காரணம் அல்லவா? என்று சிலர் வினவலாம். அதன் இரகசியத்தை இங்கே இப்பொழுது சொல்வேன். கர்மம் "காமிய கர்மம் என்றும், நிஷ்காமிய கர்மம்" என்றும் இருவகைப்படும். காமியகர்மம் என்றால் ஏதேனும் ஒரு பலனை விரும்பி தருமம், யாகம் முதலியவற்றைச்செய்வது. இந்தக் கர்மந்தான் பிறப்புக்குக் காரணமாகும். ஆகையால் நாம் நமது ஜீவியத்தில் செய்யும் எந்தக் கிரியையும் அதன் பலனை ஆசிக்காமல் அந்தப் பலனை ஈஸ்வரனுக்கு அர்ப்பணமாகச்செய்தால் அதுமே நிஷ்காமிய கர்மம் ஆகும். இந்த நிஷ்காமிய கர்மத்தால் பிறவிப்பிணி ஒழியும். பக்வத்கீதையிலும் இவ்விஷயமே கூறப்பட்டிருக்கிறது. "அர்ஜுனா, எவனொருவன் எந்தக் கர்மாவையும் அதன் பலனைத்தான் விரும்பாமல் எனக்குக் கொடுக்கிறானோ அவன் மோட்சமாகிய வைகுண்டத்தை யடைகிறான்." என்று கிருஷ்ண பரமாத்மா உபதேசிக்கிறார். மேலும் "எவனொருவன் இல்லறத்திலிருந்தாலும் சம்சார பந்தத்தில் கட்டுப்படாமல் சதா என்னைத் தியானம் செய்கிறானோ அவனுடைய குடும்ப யோகக்ஷேமத்தை நான் கவனிக்கிறேன்" என்று அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். இதற்குத் திருஷ்டாந்தமாகக் குசேல முனிவரின் சரித்திரத்தைக் கூறலாம்.

குசேலரும் கண்ணபிரானும் இளம்பிராயத்தில் சாந்தீப முனிவரிடம் கல்வி கற்றவர்கள் குசேலர், சுசீலை என்னும் மங்கையை மணந்து காட்டின் ஒருபுறத்திலிருந்து வாழ்ந்து

பிரயோஜனப்படுகிறதில்லை. "பள்ளிக்கணக்கு புள்ளிக்குதவாது" என்று ஒரு பழமொழியுண்டு. சிலர் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும் இனிமேல் படிக்கவேண்டியதில்லையென்றெண்ணி புஸ்தகங்களைக் கையால் தொடுகிறதில்லை. இது மூடத்தனமான காரியம். பள்ளிக்கூடத்திலிருந்து வெளிவந்தபிறகு நாம் செய்யும் ஜீவியந்தான் நமது படிப்பை அபிவிர்த்தி செய்யவும் படித்த விஷயங்களைச் சிந்திக்கவும் பயன்படுகிறது. மேலும் நாம் இவ்வுலகில் வாழ்வதற்கு, உலக வர்த்தமானங்களும், பலதேசத்தாருடைய நடை, உடை, பாவனைகளும் நமக்குத் தெரியவேண்டியது அவசியமாக இருக்கிறது. நாம் எவ்வளவு கற்றிருந்தபோதிலும் உலக அனுபவம் தெரியாமலும் உலகத்தாருடன் ஒத்துவாழ இயலாமலும் இருப்பது பரிதாபமான விஷயம்.

"உலகத்தோடொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்." என்றார் நாயனார்.

ஆகையால் ஒவ்வொரு மனிதனுக்கும் உலக அனுபவமும், பொது விஷயங்கள், துரைத்தன விஷயங்களில் அறிவும் இருக்கவேண்டியது அவசியம். ஆகவே ஒவ்வொருவருக்கும் புஸ்தகசாலையிலிருக்கும் இடங்களுக்குப்போய் பல புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் படித்து விஷயங்களைத் தெரிந்துகொள்வது முக்கிய கடமையாகும்.

இனி புஸ்தகசாலையென்றால் என்ன? புஸ்தகங்களின் உபயோகம் என்ன? என்பதை சொல்லிவிட்டுக் கதையைத் தொடங்குவோம். புஸ்தகசாலையென்பது பலவிதமான புஸ்தகங்கள் (வேதாந்தம், சித்தாந்தம், தர்க்கம், காவியம், இலக்

கணம், மருத்துவம், ஜோதிஷம் முதலியன) பீரோக்களிலும் தட்டுகளிலும் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் ஓர் இடம் பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பொது அறிவு விருத்தியாக வேண்டுமென்ற நோக்கத்தோடு, கல்வி இலாகா அதிகாரிகள், ஒவ்வொரு உயர்தரப் பாடசாலையிலும் புஸ்தகசாலை (Library) அவசியம் இருக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இவற்றைத்தவிர பொது ஜனங்கள் வாசிக்கும்படியான புஸ்தகசாலைகள் சில நகரங்களிலும் கிராமங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. சென்னைமா நகரில் பொது ஜனங்கள் வாசிப்பதற்கு ஒரு புஸ்தகசாலை இருக்கிறது.

புஸ்தகங்களை நமது உயிர்த்தோழர் என்று சொல்லலாம். எப்படியெனில் நாம் மனச்சோர்வு அடையும்பொழுது நமக்கு ஆறுதலைத்தந்தும் நாம் செய்யவேண்டிய கடமைகளையும் அக்கடமைகளை முடிக்கும் விதங்களையும் போதிக்கின்றன. கல்விச்செல்வம் நிறைந்த புஸ்தகப்பெட்டிகள் பணப்பெட்டிகளைவிட எவ்வளவோ சிறந்தன. பணப்பெட்டியிலிருந்து பணத்தை எடுக்க எடுக்கக்குறையும். புஸ்தகப்பெட்டியிலுள்ள புஸ்தகங்களைத் திறந்து அவற்றைப் படிப்பதனால் அறிவு விர்த்தியாகும். ஆகையால் நாம் பணப்பெட்டியையும் அதில் உள்ள பணத்தையும் பத்திரப்படுத்துவதுபோல் புஸ்தகங்களையும் உறைபோட்டுக் கிழியாதபடி பாதுகாக்கவேண்டும்.

இது நிற்க, ஜமீன்தார் அழகிரிசாமி நாயுடு தன் மனைவியின் விருப்பத்தைப் பூர்த்திசெய்தார். தன் அரண்மனையில் உபயோகமில்லாமல் இருந்த ஒரு பெரிய அறையைப் புஸ்தகசாலைக்கென்று ஒழித்துக்கொடுத்தார். பெரிய புஸ்தக

வியாபாரிகளிடமிருந்து பல புஸ்தகங்களையும் வரவழைத்து அவற்றைக் கண்ணாடி பீரோக்களில் நிரப்பினார். காலையி லும் மாலையிலும் இரண்டுமணி நேரம் புஸ்தகசாலை திறந்து வைக்கப்படுமென்றும் அந்த சமயங்களில் யாவரும் புஸ்தகங் களைப்படிக்கலாம் என்றும் தன் ஊர் ஜனங்களுக்குத் தமுக்கு அடித்து அதன் மூலமாய் அறிவித்தார்.

கோமளவல்லி நாச்சியாரின் அனுக்கிரகத்தினால் அரிய லூருக்கு இப்பொழுது ஒரு பெண்பாடசாலை, தருமவைத் தியசாலை, வாசகசாலை இம்மூன்றும் ஏற்பட்டன. அரியலூர் கிராமம், நாளுக்குநாள் கல்வி, நாகரீகம், ஒற்றுமை தேசாபி மானம், முதலியவற்றில் முன்னேற்றம் அடைந்தது. இதற் கிடையில் நாயக்கன்பட்டி கிருஷ்ணசாமி நாயுடு அரியலூ ருக்கு வந்து அவ்வூர் அடைந்த சீர்திருத்தங்களைப் பார்த் தும் அவையெல்லாம் தன் குமாரத்தியின் முயற்சியால் உண்டானவை யென்பதைக் கேட்டும் பரமானந்தம் எய்தி னார். அவ்வூரில் சில நாட்கள் இருந்துவிட்டுத் தன் மகளையும் மருமகனையும் கூட்டிக்கொண்டு தன் ஊருக்குப்போனார்.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு நீங்கிற்று.

"மணி ஒன்பதாகிறது. இன்னும் தபால்காரனைக் காணோமே. என் சடிகாரந்தான் விரைவாய்ப் போகிறதா? சீமைத் தபாற்கடிதங்கள் இன்று வரவேண்டிய நாள் அல்லவா? ஒரு சமயம் கடிதம் அனுப்பவில்லையோ என்னவோ! இந்தப் புருஷர்களை நம்பவேகூடாது. என்னுடைய ஞாபகம் அவருக்கு இருக்கிறதோ இல்லையோ" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு மணியைப் பார்ப்பதும் வாசலுக்குப் போய்த் தபாற்காரனைப் பார்ப்பதுமாக ஊஞ்சலாடிக்கொண்டிருந்தாள் மரகதவல்லி.

பாலகிருஷ்ணன் சீமைக்குப் போனபிறகு நான்கு மாதம் வரை மரகதம் தன் மாமியின் வீட்டில் இருந்தாள். அதற்குப்பின் டாக்டர் நரசிம்மலு நாயுடு தன் பெண்ணைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவந்தார். மரகதவல்லி அப்பொழுது 5 மாசம் கர்ப்பமாயிருந்தாள். கர்ப்பஸ்திரீகளுக்குச் செய்யவேண்டிய சூல்காப்பு, சீமந்தம் முதலிய சடங்குகளை நடத்தவேண்டியதற்காக டாக்டர் நாயுடு மரகதவல்லியைத் தன் வீட்டுக்கழைத்துக்கொண்டு வந்திருந்தார். பத்மாவதி அம்மாள் தன் தம்பி இருக்கும் இடத்துக்குப் போய் இரண்டுமாசம் இருந்துவிட்டு அதன்பிறகு வரலாம் என்றெண்ணி சேலத்திற்குப் போய்விட்டாள்.

டாக்டர் நாயுடுவுக்கு வரும் கடிதங்கள் அவருடைய ஆஸ்பத்திரிக்கு வருவது வழக்கம். ஆனல் சீமையிலிருந்து பாலகிருஷ்ணன் மரகதவல்லிக்கு அனுப்பும் கடிதங்கள் பங்களாவிற்கு வருவதுண்டு. பாலகிருஷ்ணன் சீமையிலிருந்து, தன் மாமனுருக்கு ஒரு கடிதமும் மனைவிக்கு ஒரு கடிதமும் எழுதி ஓரேநேரத்தில் தபாலுக்கு அனுப்பியிருந்தான். மரகதவல்லியின் கடிதமும் ஆஸ்பத்திரிக்கு வந்து டாக்டர் கையில் கிடைத்தது. அவர் வழக்கம்போல் 11-மணிக்கு வீட்டுக்கு வரும்பொழுது 2 கடிதங்களையும் கொண்டுவந்தார். தனக்கு எழுதியிருந்த லட்டரைப் பிரித்துப் படித்து ஆஸ்பத்திரியிலிருந்தபொழுதே சமாசாரங்களைத் தெரிந்துகொண்டார். மரகதத்தின் கடிதத்தைப் பிரிக்காமல் அதை அப்படியே அவளிடம் கொடுத்தார். கமலவல்லி அப்பொழுது அங்கே வந்தாள். ஏது, கடுதாசி, மாப்பிள்ளையிடமிருந்து வந்திருக்கிறதா என்று கேட்டாள்.

டாக்டர். எனக்கு ஒரு லட்டரும் குழந்தைக்கு ஒரு லட்டரும் வந்திருக்கிறது.

கமலவல்லி. குழந்தை காலையிலிருந்து காப்பிகூட குடிக்காமல், கடுதாசி வரவில்லையே என்று அழுதுகொண்டிருந்தாள். இப்போதான் அவள் முகம் சந்தோஷமாயிருக்கிறது. மாப்பிள்ளை உங்களுக்கு என்ன சேதி எழுதியிருக்கிருர்? க்ஷேமந்தானே.

டாக்டர். சுகமாகவிருக்கிருன். வேறு விசேஷமொன்றுமில்லை. சீமைக்குப் பக்கத்தில் உள்ள ஒரு ஊருக்குப் பிள்ளைகள் எல்லாரும் (Excursion) எக்ஸ்கர்ஷன் போகப்போகிருர்களாம். அங்கே ஒருவாரம் தாமசம்செய்து

பின்பு சீமைக்கு வருவார்களாம். குதிரை சவாரிக்கு பழகு வதற்கு அந்தவூர் தகுந்ததாம். என்று சொன்னார். இவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கையில் மரகதம் கடிதத்துடன் தன் அறைக்குப் போனாள். அவளுடைய சந்தோஷத்துக்கு அளவேயில்லை. கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள். அக்கடிதத்தில் பின்வரும் சமாசாரங்கள் வரையப்பட்டிருந்தன:—

லண்டன் நகரம்.

15—12—xx.

என் ஆருயிர்க்காதலி மரகதம்!

நீ எழுதியனுப்பிய திருமுகம் கிடைக்கப்பெற்று நினது திருமுகத்தை நேரில் கண்டதுபோல் களிப்பெய்தினேன். நான் சீமைக்கு வந்ததுமுதல் 6 மாதகாலமாய் உனக்கு இங்கிலீஷில் கடிதங்கள் எழுதினேன். ஆனால் இன்று தமிழில் எழுதினதைப்பற்றி நீ ஆச்சரியமடையலாம். இங்கே எப்பொழுதும் இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய அந்நிய பாஷைகளின் நடமாட்டந்தான் அதிகம். என்னுடன் பழகும் இந்தியர்களோ மிகவும் சொற்பம். ஆகையால் எங்கள் நாவில் எப்பொழுதும் இங்கிலீஷ் பாஷைதான் சஞ்சாரம். இந்த நிலைமையில் நான் சிறுவயதில் படித்த சொற்பத்தமிழும் பழக்கத்துக்கு வழியில்லாமல் மறந்துவிடுமோ என்ற பயம் ஏற்பட்டது. ஆகையால் உனக்கு எழுதும் கடிதங்களை இனிமேல் தமிழ்ப்பாஷையில் எழுதவேண்டுமென்று தீர்மானித்தேன்.

நாம் அன்னிய பாஷையில் எவ்வளவு தேர்ச்சிபெற்றிருந்தாலும் தாய்ப்பாஷையை அலக்ஷியம்செய்வது சரியல்ல. தாய்ப்பாஷையை மறப்பவர்கள் தங்கள் சொந்தத் தாயையும் தாய்க்குச் செய்யவேண்டிய கடமைகளையும் மறந்துவிடுவார்கள். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்ற ஆன்றோர் வசனப்படி பாஷாபிவிர்த்திக்கு பேச்சும் எழுத்தும் அவசியம். ஆகையால் நீ இனிமேல் எனக்கு எழுதும் கடிதங்களையும் தமிழிலியே எழுதுவாயென்று நம்புகிறேன்.

நான் இங்கே வந்தபிறகு எடுத்த போட்டோப்படம் ஒன்றை இக்கடிதத்துடன் அனுப்பியிருக்கிறேன். நான் முகத்தில் மீசை வைத்துக்கொண்டிருப்பதை நீ அதில் பார்க்கலாம். அது உனக்கு எப்படிக் காணப்படுகிறது?

எங்கள் பள்ளிக்கூடம் தலைமை ஆசிரியர் பெண்ணிற்குச் சென்ற வாரம் விவாகம் நடந்தது. விவாக தினத்தின் இரவில் அவர் ஒரு பெரிய விருந்து நடத்தினர். பள்ளிக்கூட மாணவர்களையும் அழைத்திருந்ததனுல் நானும் அந்த விருந்துக்குப் போயிருந்தேன். அவருடைய மாளிகையின் அழகைப் பார்ப்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டுமேயொழிய இரண்டு கண்கள் போதாது. நான் உனக்கு ஒரு சங்கதி சொல்கிறேன். நம்முடைய இந்தியா தேசத்தைப் பூலோகம் என்று சொன்னுல் இங்கிலாந்து தேசத்தைத் தேவலோகம் என்றும், அதன் தலைநகராகிய லண்டன் பட்டணத்தைத் தேவேந்திரனுடைய அமராவதி பட்டணம் என்றும் சொல்ல வேண்டும். தமிழ்ப்பாஷையில் உள்ள புராண இதிகாசங்களில் சிறப்பித்துக் கூறப்படும் கந்தர்வர், யக்ஷர், முதலிய தேவர்களை நாம் இங்கே பிரத்தியட்சமாய்க் காணலாம்.

இன்னும் ஒரு வாரத்தில் நாங்கள் இந்நகரின் அருகில் உள்ள ஒரு கிராமத்திற்குப் போவோம். அங்கே ஒரு பெரிய மைதானம் உண்டு. எங்கள் பள்ளிக்கூடத்து தேகப் பயிற்சி ஆசிரியரும் (Physical Training Instructor) எங்களுடன் வருவார். குதிரைசவாரி செய்யும் விதமும் முரட்டுக் குதிரைகளை அடக்கும் விதமும் நாங்கள் அந்த சமயம் தெரிந்துகொள்வோம். நீ உன் நாட்களை சென்னையில் எப்படிக் கழிக்கிறாய்? இந்தக் கடிதம் பார்த்தவுடன் பதில் எழுதத் தவறாதே. தமிழ்ப்பாஷையில் எழுத மறந்து விடாதே. உன் நாயனாவுக்கும் அம்மாவுக்கும் என் வணக்கமுள்ள நமஸ்காரம். உனக்கு என் அன்பார்ந்த முத்தம்.

இப்படிக்கு,

உன் அன்புள்ள பாலு.

மரகதவல்லி கடிதத்தை வாசித்துமுடித்து அதில் வைக்கப்பட்டிருந்த படத்தையும் பார்த்தாள். முகம் கொஞ்சம் மாறுதலாகக் காணப்பட்டாலும் அழகாகவே இருக்கிறதென்று திருப்தி அடைந்தாள். சீமைத் தபால் அடுத்த வாரம் சென்னையிலிருந்து போகுமாதலால் பதில் கடிதம் சாவகாசமாய் எழுதலாம் என்று எண்ணிக் கடிதத்தைப் பெட்டியில் வைத்தாள்.

இங்கே இவ்வாறிருக்க சேலத்தில் பத்மாவதி அம்மாளின் தம்பி புருஷோத்தம நாயுடு ஓர்நாள் ஸ்நானம் பூஜை முடித்துக் காலை ஆகாரம் செய்துவிட்டு வாசலில் வந்து நின்றார். அவர் அன்று ஒரு கேஸ் விஷயமாக அடுத்த கிராமத்துக்குப் போகவேண்டியிருந்தது. வாசலின் முன்

பக்கம் கைகட்டிவாய் புதைத்து நின்றுகொண்டிருந்த ஒரு போலீஸ் ஜவானைப்பார்த்து, "அடே 341, என் சைக்கிளைச் சுத்தம்பண்ணித் துடைத்துவைத்தாயா? என்று கேட்டார். "எஜமாங்க அப்பவே செய்துவைச்சிட்டேன்" என்றான். நாயுடு மறுபடியும் அவனைப்பார்த்து நீ போய் சப்இன்ஸ்பெக்டர் சாரங்கபாணி முதலியாரைக் கூட்டிக்கொண்டு வா. எட்டு மணிக்குள் இங்கே வருவதாகச் சொன்னார். அந்த மனுஷன் ஒரு முழுச்சோம்பேறி. போலீஸ் உத்யோகத்திற்கும் அவருக்கும் வெகுதூரம், என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு போலீஸ் உத்யோகஸ்தர் தன் பைசிக்கிளினின்றும் இறங்கி புருஷோத்தம நாயுடுவுக்குச் சலாம் செய்தார்.

புருஷோத்தம நாயுடு. என்னங்காணும் இவ்வளவுநேரம் தூங்கினீரா?

சப் இன்ஸ்பேக்டர். இல்லே, சார், சைக்கிள் பஞ்சராய் விட்டது. சரிபண்ணிக்கொண்டிருந்தேன் என்று பதில் சொன்னார்.

சாரங்கபாணி முதலியார் என்பவர் சேலம் டவுண் சப் இன்ஸ்பெக்டர். இவருக்கு உயிர் எல்லாம் தன் சைக்கிள் மேல்தான். தனக்குப் பிறந்த சீமந்த புத்திரனைப்போல் அதைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்துவந்தார். சில வீடுகளில் பெண்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தலைசீவி முகம் துடைத்து, கண்ணுக்கு மையிட்டு நெற்றிக்குப் பொட்டிட்டு அழகுபார்ப்பதுபோல் சில ஆண்மக்களுக்கும் தங்கள் பைசைக்கிளாகிய குழந்தையைத் தினந்தோறும் துடைத்து, துவாரங்களுக்கு எண்ணெயிட்டு, காற்றாகிய உணவைக்

கொடுத்து அவரோடு கொஞ்சிக்குலாவுவதில் உற்சாகம் அதிகம். அப்படிப்பட்டவர்களில் சாரங்கபாணி முதலியார் ஒருவர்.

இது நிற்க, நாயுடுவும் முதலியாரும், தாங்கள் போக வேண்டிய இடத்திற்குப் புறப்பட ஆயத்தமானார்கள். அப்பொழுது தபாற்காரன் சில கடிதங்களைப் புருஷோத்தம நாயுடுவிடம் கொண்டுவந்து கொடுத்தான். ஆபீஸ் சம்பந்தமான கடிதங்களையெல்லாம் வாசித்து அவற்றை ஒரு பக்கமாக வைத்தார். தனக்கு வந்த சொந்தக் கடிதம் ஒன்று இருந்தது. அதையும் உடைத்துப் படித்தவுடன் "இந்தப் போலீஸ் உத்யோகத்தில் லீவா, மண்ணா, ஒரு எழவும் கிடையாது. இந்த லக்ஷணத்தில் நமக்கு வரும் அழைப்புக் கடிதங்களுக்கோ அளவில்லை என்று முணுமுணுத்துக் கொண்டே உள்ளே போனார்.

தன்னுடைய சகோதரன் வெளியே போவதற்குப் புறப்பட்டவன், உள்ளே திரும்பிவந்ததைப் பார்த்த பத்மாவதி அம்மாள் "தம்பி, நல்ல சகுனம் ஆகவில்லையா! இந்தப் பலகையில் உட்காரு கொஞ்சம் தீர்த்தம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்றாள்.

பு. நாயுடு. அக்கா, நீங்கள் ஒரு பழைய கர்நாடகமாயிருக்கிறீர்கள். போலீஸ் வேலைக்குச் சகுனமும் நாளும் நக்ஷத்திரமும் பார்த்து முடியுமா. பட்டணத்திலிருந்து கலியாணக் கடிதம் வந்திருக்கிறது. மரகதவல்லிக்குப் புதன்கிழமையன்று வளைகாப்பும் பூச்சூட்டுதலும் நடக்கிறதாம். குடும்பசகிதம் உங்களையும் அழைத்துக்கொண்டு வரும்படி எழுதியிருக்கிறது.

பத்மாவதி. உனக்கு லீவு கிடைக்குமா? நீயும் சௌந்திரவல்லியும் வருவதாயிருந்தால் அவர்கள் நிரம்ப சந்தோஷப்படுவார்கள். நான்மட்டும் போவதென்றால் நன்றாயிருக்காது.

பு. நாயுடு. அந்த லீவு சங்கதி சொல்வதற்குதான் உள்ளே வந்தேன். புதன்கிழமையன்று செஷன்ஸ் கோர்ட்டில் ஒரு கொலைக்கேஸ் விசாரணை. நான் அவசியம் இருக்க வேண்டும். விசாரணை அன்று முடிவாகாதபோனால் அடுத்த நாளும் தொடர்ந்து நடக்கும். ஆகையால் நான் புறப்பட்டு வருவது அசாத்தியமான காரியம்.

பத்மாவதி: அப்படியானால் சௌந்திரத்தையும் குழந்தையையும் என்னுடன் அனுப்பு. நாங்கள் போய்விட்டு வருகிறோம்.

பு நாயுடு: அப்படிச்செய்வதுதான் உசிதமாகத் தோன்றுகிறது. நான் வெளியே போய்விட்டு நான்கு மணிக்குள் வந்துவிடுவேன். நான் வந்தபிறகு உங்களை இராத்திரி வண்டியில் அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டு வெளியேவந்து சப் இன்ஸ்பெக்டருடன் புறப்பட்டார். அன்று ராத்திரி வண்டியில் பத்மாவதியம்மாள், சௌந்திரவல்லியம்மாள் (பு. நாயுடுவின் மனைவி) அவருடைய பெண் குழந்தை மூவருமாகப் பட்டணத்துக்குப் புறப்பட்டார்கள்.

மரகதவல்லி தன் மாமியின் வருகைக்கு மகிழ்ந்து மாமியையும் சௌந்திரவல்லியையும் வணங்கினாள். கமலவல்லி அம்மாள் அவ்விருவரையும் அன்புடன் உபசரித்தாள். அரியலூரில் இருந்து ஜமீன்தார் அழகிரிசாமி நாயுடுவும்

அவர் மனைவி கோமளவல்லியும், வளைகாப்புச் சடங்கிற்கு முந்தினநாளிரவு ஏழுமணிக்குச் சென்னைக்குவந்து சேர்ந்தார்கள். கமலவிலாஸ் அன்று ஒரு கலியாண வீடுபோல் விளங்கிற்று.

ஜமீன்தாரும் டாக்டரும் இரவு எட்டு மணிக்குச் சாப்பிட்டு முடிந்தவுடன் வாசலில் வந்து 2 நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டு வேடிக்கையாய்ப் பல விஷயங்களைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு தந்தி சேவகன் டாக்டருக்கு ஒரு அவசரத் தந்தியைக் கொண்டு வந்து கொடுத்தான். "தந்தி" என்றதும் இரண்டுபேருக்கும் தூக்கி வாரிப்போட்டுவிட்டது. டாக்டர் தைரியத்துடன் அதை வாசித்துப்பார்த்தார். அதில் பின்வரும் சமாசாரம் எழுதப்பட்டிருந்தது. "குதிரைசவாரி செய்யும்போது கீழே விழுந்து உடம்பில் பலத்த காயம். உயிருக்கு அபாயமில்லை பயப்படவேண்டாம்" = பாலகிருஷ்ணன் =

இரண்டு நிமிஷத்துக்குள் தந்தி சமாசாரம் உள்ளே இருந்த பெண்கள் காதிற்கும் எட்டிவிட்டது. பத்மாவதி அம்மாள் "ஐயோ, மகனே பாலு, ஐயாயிரம் மைலுக்கு அப்பால் ஆஸ்பத்திரியிலிருந்துகொண்டு என்ன கஷ்டப் படுகிறாயோ ? இந்த செய்தியைக் கேட்கவா நான் சேலத்திலிருந்து வந்தேன். பாவியாகிய நான் என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்க இவ்வுலகில் இருப்பேனோ தெரியவில்லை. ஹா. ஜகதீசா ! என் வயிற்றில் பாலை வார்க்கமாட்டாயா ? எனக்குச் சிறகிருந்தால் பக்ஷியாய்ப் பறந்துபோய் என் அருமைக்குழந்தையை காண்பேனே. என்று வாய்விட்டுப் புத்திரவாஞ்சையால் புலம்பத்தொடங்கினாள்.

இவ்வுலகில் ஒருவனுக்கு வரும் எத்தகைய துக்கங்களி லும் புத்திரசோகம் மிகவும் கொடியது. புத்திர சோகத் தினல்தானே தசரத சக்கரவர்த்தியும் மரணமடைந்தார் இராமன்மேலுள்ள அபிமானத்தினல் அவனைப்பிரிய மன மில்லாமல், அவன் காட்டிற்குச்சென்ற சங்கதியைக் கேட்ட தும் அவர் ஆவியும் நீங்கிற்று. புத்திர வாஞ்சையினல் தான்சொன்ன வாக்கையும் தவறி கைகேயியைப் பார்த்து,

"கண்ணே வேண்டும் என்னினும் ஈயக்கடவேன்யான்
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றைய தொன்றுமற என்றான்."

அதாவது "நீ என் கண்களை விரும்பிக் கேட்டபோதிலும் நான் கொடுக்கத் தடைசெய்யமாட்டேன். நீ கேட்ட 2 வரங்களில் பூமியை எடுத்துக்கொள் அதைப் பரதனே ஆளட்டும். மற்றவரம் ஒன்றையும் மறந்துவிடு" என்று சொன்னர். உலக முழுவதையும் திக்குவிஜயம் செய்து, தேவாதிதேவர்களையும் தனக்கடிமையாக்கி ஏக சக்ராதிபத் யம்செய்த இலங்கை வேந்தனகிய இராவணனும், தன் மகன் இந்திரஜித்து போர்க்களத்தில் இறந்தபொழுது அடைந்த சோகத்தைக் கம்பர் பின்வரும் கவியால் விவரிக்கிறார்.

"இருபதென்னும் எரிபுரை கண்களும்
உருகு செம்பென ஓடிய தூற்றுநீர்."

பத்மாவதியம்மாள் இவ்வாறு புலம்பி நிற்க, மரகத வல்லி சாப்பிட்டுக்கொண்டிருந்தவள் தந்தி சமாசாரம் கேட்ட வுடன் அப்படியே மூர்ச்சித்துக் கீழே சாய்வதற்குள் கோமளவல்லி விரைவாக ஓடிவந்து தலையைத் தாங்கிக்

கொண்டாள். ஒரு நொடிப்பொழுதில், சந்தோஷத்தால் நிரம்பியிருந்த அவ்வில்லம் துக்கமாக மாறிற்று. கடவுளின் செயல்தான் என்னே! நாமெல்லாம் கடவுளிடம் அகப்பட்ட பொம்மைகள். அவர் ஆட்டிவைக்கும் விதம்போல் நாமெல்லாம் ஆடவேண்டியதுதான்.

இராத்திரி 12 மணிக்கு மரகதவல்லிக்கு கடுமையான ஜுரம் வந்துவிட்டது. தங்கள் மருமகன் கண்காணாத சீமையில் தேக உபாதையால் ஆஸ்பத்திரியிலிருந்து அவதிப்பட்டுக்கொண்டிருப்பதையும் தங்கள் ஏகபுத்திரி இந்த விதமாய் ஸ்மரணையற்று ஜுரத்தால் வருந்துவதையும் பார்த்து கமலவல்லியும் அவள் கணவனும் இருதலைக்கொள்ளி எறும்புபோல எங்கினார்கள். அவர்கள் மனம் தாமரையிலைத் தண்ணீர்போலத் தத்தளித்தது. தெய்வத்தின்மேல் பாரத்தைப்போட்டு "வருவது வரட்டும், எல்லாம் நன்மைக்குத் தான் என்று அவர்கள் மனோ தைரியத்தை விடாமல் இருந்தார்கள்.

சில தினங்களுக்குப்பின் பாலகிருஷ்ணனிடமிருந்து கடிதம் வந்தது. தான் முற்றிலும் சுகமடைந்து ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேவந்து படிப்பதைத் தொடங்கிவிட்டதாகவும் தன்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாமென்றும் எழுதியிருந்தான். அதைப்பார்த்தவுடன் யாவருடைய மனமும் கொஞ்சம் ஆறுதலடைந்தது. ஆனால் மரகதவல்லியின் தேக நிலைமை அதிகக்கெடுதலாயிருந்தது. அவளுடைய ஜுரம் நாளுக்கு நாள் அதிகரித்து ஜன்னியில் கொண்டு வந்துவிட்டது. அது 21 நாள் ஜன்னி. டாக்டர் ஜன்னி தோஷம் மாறுவதற்காக உயர்ந்த இங்கிலீஷ் மருந்துகளைக்

செலுத்தினர். டாக்டருக்குத் தெரியாமல் கமலவல்லியும் பத்மாவதியும் நாட்டுவைத்தியனை வரவழைத்து அதிகக் கொடூரமான மருந்துகளை மரகதவல்லியின் உடம்பில் ஏற்றினார்கள். இவையெல்லாம் ஒன்று சேர்ந்து மரகதவல்லியின் கர்ப்பத்துக்குச் சேதம் விளைவித்தது. பிரசவவலி உண்டாகி குழந்தை உயிரோடு பிறக்காமல் செத்துவிழுந்தது. வட்டியை இழந்தாலும் முதலுக்கு மோசம் இல்லாமல் இருந்தால் போதும் என்பதைப்போல குழந்தைபோனாலும் மரகதவல்லி பிழைத்து எழுந்தால்போதும் என்று எல்லாரும் ஆவலோடு இருந்தார்கள். தெய்வானுக்கிரகத்தினால் 21 நாட்கள் கழிந்தவுடன் மரகதவல்லியின் ஜன்னிதோஷம் நீங்கி ஜுரமும் குறைந்தது. அவள் உடம்பு துரும்பாய் மெலிந்துபோயிருந்தது. இந்தமட்டாவது உயிர்பிழைத்து எழுந்தாளே என்று எல்லாரும் பரம சந்தோஷம் அடைந்தார்கள். இந்தவிதமாகப் பாலகிருஷ்ணனுக்கும் மரகதவல்லிக்கும் தலைக்குவந்த துன்பம் தலைப்பாகையோடு நீங்கிற்று. மரகதவல்லியின் தலைக்குத் தண்ணீர்விட்டவுடன் அவள் உடம்பு புஷ்டியடைய டாக்டர் நல்ல ஔஷதங்களையும் உயர்ந்த ஆகாரங்களையும் கொடுத்துவந்தார்.

பத்மாவதி அம்மாளும் சௌந்தரவல்லியும் ஒருமாதம் வரை சென்னையிலே இருந்தார்கள். மரகதவல்லி பூரண சுசம் அடைந்ததும் பத்மாவதி அம்மாள் சேலத்துக்குப் புறப்பட்டுப் போனாள். ஜமீன்தாரும் அவர் மனைவியும் கொஞ்சகாலம்வரை மைலாப்பூரில் உள்ள தங்கள் பங்களாவிலிருந்துகொண்டு அடிக்கடி கமலவிலாஸுக்கு வந்து மரகதவல்லியின் தேகஸ்திதியைப் பார்த்துவிட்டுப் போனார்கள். அவர்களும் இப்பொழுது அரியலூர்போய்ச் சேர்ந்தார்கள்.

———

பதின்மூன்றாம் அத்தியாயம்.

மோஹினி அவதாரம்.

சீமையிலிருந்து பாலகிருஷ்ணன் எழுதின தமிழ் கடிதத்திற்கு மரகதவல்லி பதில் எழுதுவதற்குமுன் வியாதியில் விழுந்து எமனுடன் வாதாடிப் போர்புரிந்து உயிர்பெற்று மீண்டாள் என்பதை வாசகர்கள் அறிவீர்கள். சுகமடைந்ததும் மரகதம் தன் நாயகன் எழுதின லெட்டருக்குப் பதில் எழுதத் தொடங்கினாள். அவள் எழுதின கடிதம் பின் வருமாறு:—

க்ஷேமம். சமலவிலாஸ், சென்னை.

10—2—xx.

அன்புள்ள பிராணநாதருடைய திருவடிக் கமலங்களுக்கு தீர்க்கதெண்டமிட்டு, மரகதம் வணக்கமாய் எழுதிக் கொள்வது. இவ்விடம் யாவரும் க்ஷேமம். அவ்விடம் தங்களுடைய க்ஷேமத்திற்குப்பதில். தாங்கள் எழுதியனுப்பின தமிழ்க்கடிதத்துக்கு நான் உடனே பதில் எழுத முடியாமல்போனதற்குக் காரணம் தங்களுக்குத்தெரியும். யமனுக்குக் கருணையில்லை என்றும் அவன் கொடியவன் என்றும் ஜனங்கள் சொல்கிறார்கள். அது நிஜமல்லவென்பது என்னுடைய அபிப்பிராயம். சாவித்திரி தேவியின் பதிபக்திக்கு மெச்சி சத்தியவானுடைய உயிரை யமன் விட்டுவிடவில்லையா? அதையாவது பழங்கதை அல்லது புராணம் என்று சொல்லலாம். இப்பொழுது எமலோகம்

வரையில் சென்ற நம்மிருவரையும் அவன் தன் வசப்படுத்திக்கொள்ளாமல் விட்டுவிட்டது ஒரு அதிசயமல்லவா. ஒருவேளை நான் ஒரு பெரிய டாக்டருடைய பெண்ணென்றும் தாங்கள் அவருடைய மாப்பிள்ளையென்றும் எண்ணி நம்மை உயிரோடு விட்டுவிட்டான் என்று நினைக்கிறேன். இது நிற்க, தாங்கள் ஐயாயிரம் மைலுக்கப்பால் இருந்த போதிலும் ஒவ்வொரு நாளும் இராத்திரியில் என்னுடைய கனவில் இரகசியமாய்த்தோன்றி என்னுடன் பேசிவிட்டுப் போகிறீர்கள். அதைப்போல தைரியமிருந்தால் பகல் காலத்திலும் வரவேண்டும். அதைவிட்டு சொப்பனத்தில் தோன்றி ஓடிப்போவது ஒரு பெருமையா?

நானும் "கண்ணுறங்கேன், உறங்கினும் என் கணவரோடு கலக்கும் கனவே கண்டு மகிழ்வேன். சிற்சமயம், மண் உறங்கும், மலையுறங்கும், அலைகடலும் உறங்கும், மானிலத்து யானுறங்கேன்."

தங்களுக்குப் பரீட்சை எப்பொழுது முடியுமென்றும் தாங்கள் எப்பொழுது வந்து திருமுக தரிசனத்தைக் காட்டுவீர்கள் என்றும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன். தாங்கள் இந்த இரண்டு வருஷத்துக்குள் என்னை மறந்து இங்கே வந்தபிறகு "துஷ்யந்த மகாராஜன் சகுந்தலையைப் பார்த்து நீயார் என்று கேட்டதுபோல என்னையும் கேட்பீர்களோ என்று பயமாய் இருக்கிறது. ஆனால் நீங்கள் என்னைப்பார்த்து அப்படிக் கேட்குங்காலத்தில் எனக்கும் பதில் சொல்லத் தெரியும்.

தங்களுடைய புகைப்படத்தில் தங்கள் வடிவத்தைப் பார்த்துச் சந்தோஷப்படலாம் என்றால் படத்தைக்கையில்

எடுக்கும்பொழுதே துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டு கண்களில் நீர் பெருகுவதால் படத்தைப்பார்த்து ஆனந்திக்கவும் முடியவில்லை.

தங்களைப்போல ஒரு படம் எழுதத்தொடங்கி அந்த விதமாகப் பொழுதுபோக்கலாம் என்றால் தாங்களோ "ஓவியத்தெழுதவொண்ணு வுருவத்தை" உடைத்தாயிருக்கிறீர்கள். ஆகையால் தங்களை நேரில்பார்த்து ஆனந்திப்பதைவிட வேறுவழி ஒன்றுமில்லை. தாங்கள் இந்த ஐ. ஸி. எஸ். பரீட்சையில் ஜயம்பெற்று சுகபத்திரத்தோடு திரும்ப வேண்டுமென்று கடவுளை நோக்கிப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும் தங்கள் அன்புள்ள

மரகதம்.

இந்தவிதமாகக் கடிதம் எழுதி அதைச்சீமைத் தபாலுக்கனுப்பினுள். இங்கே இவ்வாறிருக்க, லண்டன்நகரில் நடக்கும் சில முக்கியமான விஷயங்களைச் சொல்லவேண்டியது அவசியம்.

லண்டன் நகரில் மிஸ்டர் ஹெர்பர்ட் என்னும் பெயருடைய ஒரு பிரபு இருந்தார். அந்நகரில் உள்ள கோடீஸ்வரர்களில் அவர் ஒருவர் அவருக்கு இவ்வுலக முழுவதும் சுற்றிப் [illegible]க்கவேண்டுமென்றும் இவ்வுலகத்திலுள்ள சகல பாஷைகள் [illegible] கற்றறியவேண்டுமென்றும் அதிக ஆசை உண்டு. அவர் தம் யௌவனப் பருவத்தில் ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா முதலிய கண்டங்களில் உள்ள தேசங்களைச் சுற்றிப்பார்த்து வந்துவிட்டார். தான் விருத்தாப்பிய தசை அடைவதற்குள் இந்தியா தேசத்தையும் ஒருமுறை பார்த்துவிட்டு வரவேண்டுமென்று எண்ணினர்.

இந்தியாவில் வழங்கப்பெறும் தமிழ், தெலுங்கு, ஹிந்துஸ்தானி முதலிய பாஷைகள் அவருக்குத் தெரியாது. அந்தப் பாஷைகளைக்கொஞ்சம் பேசக் கற்றுக்கொண்டு அதன்பின்பு இந்தியாவிற்கு யாத்திரைபோகலாம் என்று நினைத்தார்.

மிஸ்டர் ஹெர்பர்ட் ஓர்நாள் பாலகிருஷ்ணனுடைய ஆசிரியர்களில் ஒருவருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த பொழுது தனக்குத் தெலுங்கு பாஷையும் தமிழ்ப்பாஷையும் கற்றுக்கொடுக்கக்கூடிய ஒரு இந்திய கனவான் வேண்டுமெனத் தெரிவித்தார். அப்பொழுது அவ்வாசிரியர், தன் மாணவர்களில் ஒருவருக்கு அவ்விரண்டு பாஷையும் தெரியுமென்றும் அவரை அனுப்புவதாகவும் சொன்னார்.

சிலதினங்களுக்குள் பாலகிருஷ்ணன், மிஸ்டர் ஹெர்பர்ட் பிரபுவுக்குத் தமிழும் தெலுங்கும் போதிக்கும் ஆசிரியராக அமர்ந்தான். தினந்தோறும் மாலைவேளையில் ஒருமணி நேரம் படிப்பும் சம்பாஷணையும் சொல்லிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டான். ஹெர்பர்ட் பிரபு மாசம் நூறு ஷில்லிங்கு கொடுப்பதாகச்சொன்னார். பாலு அதற்கு மறுமொழியாக "சார், நான் சம்பளத்திற்காகத் தங்களுக்குப் போதிக்கவரவில்லை. தங்களுக்கு இந்திய பாஷையில் உள்ள அபிமானத்தை எண்ணியும், என் ஆசிரியர் வார்த்தையைத் தட்டக்கூடாதென்று உத்தேசித்துமே நான் ஒப்புக்கொண்டேன். எனக்கு ஒரு காசுகூடத் தேவையில்லை" என்றான். பிரபுவும் பாலுவினுடைய பெருந்தன்மையான குணத்தைப்புகழ்ந்து அதிகமேன்மை பாராட்டினார்.

ஹெர்பர்ட் பிரபுவுக்கு ஒரு குமாரத்தி இருந்தாள். அவளுக்கு ஏறக்குறைய 20 அல்லது 22 வயதுக்குமே

விராது. அவளுடைய அழகை வர்ணிப்பதற்குக் கவிஞர்க ளாலும் முடியாது. அவளைப்படைத்த பிரம்மதேவனே வர வேண்டும். பாலகிருஷ்ணன் அவளழகைக்கண்டு "இப் பெண் மஹாவிஷ்ணு எடுத்த மோஹினி அவதாரமோ என்று ஆச்சரியமடைந்தான்.

மிஸ். லிலி ஹெர்பர்ட் லண்டன் யூனிவர்சிடியில் பி. எ., பரீட்சை பாஸ்பண்ணிவிட்டு, வீட்டிலேயே சீரும்சிறப்புமாய் இருந்துவந்தாள். பாலகிருஷ்ணன் மிஸ்டர் ஹெர்பர்ட்டுக் குப்பாடம் சொல்லிக்கொடுத்தபிறகு அவருடைய குமாரத்தி யுடன் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருப்பான். அன் னியபுருஷரைக் கண்டதும் அடுக்குகளுக்குள்போய் ஒளிந்து கொள்ளும் இந்தியப் பெண்களைப்போல் இல்லாமல், மிஸ். லிலி பாலுவுடன் கூச்சமின்றி சரசமாகவும் நாணயமாகவும் பேசி அவனை இன்புறச்செய்வது வழக்கம்.

ஹெர்பர்ட் பிரபுவின் மாளிகையைச்சுற்றி ஒரு சிங்கார வனம் (Park) இருந்தது. அத்தோட்டத்தின் ஒருபுறம் பந்தடிமேடை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மிஸ். லிலிக்கு பந்தாட்டத்தில் மிகுந்த பைத்தியம். சாயங்கால நேரங் களில் அவள் தன்தோழிமாருடன் பந்தாடுவாள். சிலசமயங் களில் பாலகிருஷ்ணனையும் பந்துவிளையாடக் கூப்பிடுவாள். இருவரும் அதிக நேர்த்தியாய்ப் பந்தாடுவார்.

பந்தாட்டம் தேகத்திற்குப் பலமும் மனதிற்கு உற்சாக மும் கொடுக்கும் ஒரு விளையாட்டு. பந்தாட்டம் இங்கிலீஷ் விளையாட்டு என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இங்கி லீஷ் நாகரீகம் இந்தியாவில் நுழைவதற்கு வெகுகாலத்துக்கு முன்பே இந்திய மக்கள் பந்தாடும் வழக்கம் உண்டு என்ப

தற்குப் புராண இதிகாசங்களில் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. இந்திய மக்களிலும் முக்கியமாகப் பெண்கள் தான் புராதன காலத்தில் பந்து விளையாடினதாகத் தெரிகிறது.

தாடகையென்னும் அரக்கியை இராம லக்ஷ்மணர்கள் சம்ஹாரம் செய்தபின் விஸ்வாமித்திரரோடு மிதிலைக்குப் போனார்கள். மிதிலா நகரின் காக்ஷியைப் பார்த்துக் கொண்டே போகும்போது ஆங்கு ஓரிடத்தில்

"மையரி நெடுங்கண்ணோக்கம் படுதலும் கருகிவந்து
கைபுகிற் சிவந்துகாட்டும் கந்துகம் பலவும் கண்டார்"

அதாவது பெண்கள் பந்தாடும்போது அவர்களுடைய கண்களின் கருவிழிபட்டுக் கருமைநிறம் அடைந்தும் கையில் எடுத்தவுடன் செந்நிறமடைந்தும் காட்டும் பல பந்துகளைக் கண்டார்.

இது இவ்வாறிருக்க, பாலகிருஷ்ணன் லீவு நாட்களில் மத்தியானமே மிஸ்டர் ஹெர்பர்ட்டின் மாளிகைக்குப் போவான். மிஸ். லிலிஹெர்பர்ட் பியானோ என்னும் சங்கீதக் கருவியில் அழகாய்ப் பாடுவது வழக்கம். இவனும் பியானோ வாசிப்பதற்குக் கொஞ்சம் பழகிக்கொண்டான். சில சமயங்களில் பொழுது போக்கிற்காக சதுரங்கம் (Chess) என்னும் ஆட்டம் இருவரும் விளையாடுவார்கள்.

ஒருநாள் சாயங்காலம் நான்கு மணிக்கு மிஸ். லிலி தேயிலைப்பானம் பருகுவதற்குப் பாலகிருஷ்ணனையும் வேண்டிக்கொண்டாள். பொறித்த மீன், கோழி முதலிய பதார்த்தங்களைத் தட்டுகளில் கொண்டுவந்து வைத்துத் தானும் சாப்பிட்டுக்கொண்டே பாலுவையும் சாப்பிடச் சொன்னாள்.

ஆனால் பாலகிருஷ்ணன், ரொட்டியும், பிஸ்கட்டும் மட்டும் எடுத்துக்கொண்டு மற்ற பதார்த்தங்களைத் தொடவில்லை. லிலி, பாலுவைப்பார்த்து "நீர் மாமிசம் சாப்பிடும் வழக்க மில்லையோ?" என்று கேட்டாள். நான் சாப்பிடும் வழக்க மில்லை. மேலும் நான் சீமைக்குப் புறப்படும்பொழுது மூன்று வாக்குறுதிகள் என் தாயாரிடம் செய்துவிட்டு வந் தேன். அவைகளில் ஒன்று மாமிசம் புசிக்கக்கூடாதென் பது என்று பதில் சொன்னர்.

அதன்பிறகு லிலி, உயர்ந்த திராக்ஷை ரசத்தை ஒரு கோப்பையில் விட்டுப் பாலுவைப் பருகும்படி வேண்டினாள்.

பாலு. "லிலி, மன்னிக்கவேணும் நான் திராக்ஷ ரசம் பருகும் வழக்கமில்லை, சோடா, கலர், காப்பி, டீ முத லியவற்றைக் குடிக்க ஆட்சேபணையில்லை. எந்த சந்தர்ப்பத் திலும் மதுபானம் செய்யக்கூடாதென்பது என் தாயின் 2-வது கட்டளை.

லிலி. அப்படியா, உமது தாயின் கட்டளைகள்தான் எத்தனை? மாமிசம்கூடாது மதுபானம்கூடாது. இன்னும் ஏதேனும் உண்டோ?

பாலு. இன்னும் ஒரு கட்டளையுண்டு. அதைப் பின் னல் சமயம் வாய்க்கும்போது தெரிவிக்கிறேன் என்று பதில் சொன்னன்.

ஒருநாள் இவர்கள் இருவரும் பந்தாட்டம் ஆடி முடிந்த வுடன் சிங்காரத்தோட்டத்தைச்சுற்றி உலாவப் புறப்பட் டார்கள். தென்றல்காற்று ஜில்லென்று வீசத்தொடங் கியது. சந்திரனும் இவர்களுக்குச் சகாயமாய் வானத்தில்

கிளம்பினான். ஷண்பகம், மல்லிகை, முல்லை முதலிய செடிகளிலுள்ள மலர்கள் இவர்களின் வருகைக்கு இன்புறுவன போல் முகமலர்ந்து தங்களிடமிருந்த மகரந்தப்பொடியை இவர்கள்மேல் வாரி இறைத்தன. மன்மதனும் இதுதான் சமயம் என்று தன் புஷ்ப பாணங்களை இவர்கள்மேல் எய்தான். காமவிகாரங்களை மனிதர்க்கு உண்டுபண்ணுவதற்கு மாலைக்காலந்தான் ஏற்றது. திருவள்ளுவ நாயனாரும்

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய்" என்றார்.

பாலகிருஷ்ணன் ஒரு பூங்கொம்பில் மலர்ந்திருந்த மலர் ஒன்றைப் பறித்து "லிலி இப்புஷ்பம் கிளையில் இருப்பதை விட உன் கூந்தலில் இருந்தால் அதிக அழகாய் இருக்குமல்லவா?" என்றான். லிலி "அதைக்கொடுங்கள் என் கூந்தலில் சூடிக்கொள்கிறேன்" என்றாள்.

பாலு. உனக்கு அத்தனை சிரமம் வேண்டாம் நானே உன் கூந்தலில் வைக்கிறேன் என்று சொல்லி அம்மலரை அவள் கூந்தலின் நடுவில் வைத்தான். அதன்பிறகு அவர்கள் அச்சோலையின் நடுவில் இருந்த பளிங்குக்கல் மேடையில் உட்கார்ந்தார்கள். லிலி, தான் கொய்த சில மல்லிகை மலர்களால் ஒரு சிறு செண்டு கட்டி அதைப் பாலுவிடம் கொடுத்தாள். பாலு அதைச் சந்தோஷமாய்ப் பெற்றுக் கொண்டான்.

இருட்டும் சமயம் ஆகிவிட்டதனால் இருவரும் பிரிந்தார்கள். அன்று இரவு பாலகிருஷ்ணன் சாப்பிட்டு முடிந்தவுடன் படிக்கத் தொடங்கினான். அவனுக்குப் படிப்பில்

புத்தி செல்லவில்லை. அவன் தனக்குள் "என்ன ஆச்சரியம்! எனக்கு இப்பெண்மேல் அளவுகடந்த அன்பு உண்டாய்விட்டது. ஒருவேளை இது தீமையாய் முடிந்தாலும் முடியும். நான் இதற்கு இடம் கொடுக்கக்கூடாது. என் அன்னையிடம் நான் செய்துகொடுத்த வாக்குத்தத்தத்தை மறந்து அதற்கு விரோதமாக நடக்கலாமா? என்று தன் மனதைக் கண்டித்துக்கொண்டான்.

இங்கே பாலுவின் நிலைமை இப்படி இருக்க, மிஸ். லிலி ஹெர்பர்ட் அன்று தன் படுக்கை அறையில் மஞ்சத்தில் படுத்து அங்குமிங்கும் புரண்டுகொண்டு தூக்கம் வராமல் பின்வருமாறு மனதில் நினைக்கலானாள். மிஸ்டர் பாலகிருஷ்ணன் இன்று சாயங்காலம் செடியினின்றும் மலர் பறித்து என் தலையில் சூட்டினரே. அவருடைய உள்ளக் குறிப்பு யாதாயிருக்குமோ? இந்தியர்களில் இவ்வளவு அழகுடைய கனவானை நான் பார்த்ததில்லை. ஒருவேளை அவருக்கு விவாஹமாயிருக்கிறதோ என்னமோ தெரியவில்லை. நான் அந்த விஷயத்தை அவரிடம் எப்படி கேட்பேன்? அவர் விவாஹம் செய்துகொண்டவராக இருந்தால் நான் அவரைக் காதலிப்பது முறையல்ல. நம்முடைய மதக் கொள்கையும் அதற்கு இடம்கொடாது. அவர் பிரம்மச்சாரியாய் இருக்குங்பக்ஷத்தில் நான் அவரை மணந்துகொண்டு அவருடன் இந்தியாவுக்குப் போய் வாழலாம். அவரும் ஒரு பெரிய கலெக்டர் உத்யோகத்துக்கு வரக்கூடியவர்.

இந்தவிதமாய் பலஎண்ணங்கள் அவள் மனதில் தோன்றி அவளை வதைக்கலாயின. இந்த சம்பவம் நடந்த மறுநாளும் பாலகிருஷ்ணன் வழக்கம்போல் மிஸ்டர் ஹெர்பர்ட்டுக்குப்

பாடம் சொல்லிக்கொடுக்கப்போனான். அவனுக்குப் பரீக்ஷை நெருங்கிவிட்டதனால் அவருக்குச் சொல்லிக்கொடுத்த நேரம் போக ஒழிந்தநேரத்தில் சோலையில் தனிமையாயிருந்து பாடம்படிக்கலாம் என்ற எண்ணத்துடன் ஒரு புஸ்தகமும் கொண்டுபோனான். அப்புத்தகத்தில் மரகதவல்லி இவனுக்கு எழுதிய கடிதமும் அவள் வியாதியாய் இருந்து சுகமடைந்த பின் எடுத்த படமும் இருந்தது. பாலகிருஷ்ணன் அதைக் கவனிக்கவில்லை. மிஸ்டர் ஹெர்பர்ட்டுக்குப் பாடம் சொல்லி முடித்தபிறகு பாலு, சோலையில் புகுந்து இரத்தின கம்பளம் விரித்தாற்போன்றிருந்த பசும்புற்றரையில் அமர்ந்து புஸ்தகத்தை விரித்து அதை வாசிப்பதில் கவனத்தைச் செலுத்தினான். மிஸ். லிலி, தன் தோழிமாருடன் பந்தாட்டம் ஆடிவிட்டு, பாலகிருஷ்ணனைக் காணாமையால் தனியாய்ச் சோலையைச்சுற்றி உலாவப்போனாள். கொஞ்சதூரம் போனதும் பாலு, புஸ்தகமும் கையுமாய் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, ஹலோ, மிஸ்டர் பாலு, தனிமையாய் என்ன செய்கிறீர்? இதென்ன புஸ்தகம், என்று அதை அவனிடமிருந்து வாங்கினாள். அப்பொழுது புஸ்தகத்திலிருந்து கடிதமும் படமும் கீழே விழுந்ததைக் கவனித்தாள். அப் படத்தைப் பார்த்தவுடன் அவள் முகம் திடீரென்று மாறுபட்டது. ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். பாலகிருஷ்ணன் மிஸ். லிலியின் முகவாட்டத்தைக் கவனியாமலிருக்கவில்லை. "லிலி என்ன ஒருமாதிரியாய்க் காணப்படுகிறாய்" என்று கேட்டான்.

லிலி. உமக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லையென்றெண்ணியிருந்தேன். இப்படத்தைப் பார்த்தவுடன் நீர் விவாகம் செய்துகொண்டவர் என்று தெரிகிறது.

பாலு. ஆம், சென்னையில் ஒரு பெரிய டாக்டருடைய பெண்ணை விவாகம் செய்துகொண்டிருக்கிறேன். அவளும் இங்கிலீஷ் படித்த பெண்தான். நாம் அன்று தோப்பிலேப் பானம் பருகும்போது என் அன்னையின் மூன்றாவது சட்டளை என்னவென்று கேட்டாயல்லவா? அதைச் சொல்வதற்கு இதுதான் சமயம். எனக்கு ஏற்கனவே கலியாணமாயிருப்பதனால் அன்னிய ஸ்திரீகளைச் சொந்த சகோதரி போல நேசிக்கவேண்டும் என்பதுதான்.

மிஸ். லிலி, அப்பொழுது, தனக்குள் "நான் இவரைக் காதலிப்பது சரியல்ல" என்றெண்ணி தன் மனதைத் திருப்பிக்கொண்டாள்.

அன்று முதல் பாலகிருஷ்ணனும் மிஸ். லிலியும் சகோதர அன்போடு இருந்துவந்தார்கள். அவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த களங்கம் நீங்கிவிட்டது.

தன் அன்னையிடம் செய்துகொடுத்த மூன்று வாக்குறுதிகளையும் தான் சரியாய் நிறைவேற்றினதைக்குறித்து பாலு அதிக சந்தோஷமடைந்தான்.

———

பதினான்காம் அத்தியாயம்.

பிரிந்தவர் கூடினால் பேசவேண்டுமோ.

பாலகிருஷ்ணனுக்கு ஐ. ஸி. எஸ். படிப்பு 2 வருஷமும் முடிவு அடைந்தது. அவன் பரீட்சையில் திருப்தியாக விடை அளித்தான். அவனுடைய புத்திசாலித்தனத்தைக் குறித்துப் பரீட்சாதிகாரிகள் மெச்சினார்கள். தான் சீமையிலிருந்து புறப்பட்டுவிட்டதாகவும் பம்பாய்த் துறைமுகத்துக்கு இன்ன தினத்தில் வந்துசேர்வதாகவும் தன் மாமனாருக்குத் தந்தி அடித்தான்.

பாலகிருஷ்ணன் சீமையிலிருந்து கப்பல் ஏறுவதற்கு முந்தின தினம், மிஸ்டர் ஹெர்பர்ட் பிரபுவிடமும் அவர் குமாரத்தியிடமும் விடைபெற்றுக்கொள்ளப்போனான். மிஸ்டர் ஹெர்பர்ட் பாலுவின் கைகளைப் பிடித்துக்குலுக்கி அவனை ஆசீர்வதித்து பிரியாவிடை கொடுத்தார். அதன் பின்பு லிலி ஹெர்பர்ட்டிடம் சொல்லிக்கொள்ள அவள் இருக்கும் அறைக்குள் நுழைந்தான். அன்புமேலீட்டினால் இருவரும் கண்ணீர் வடித்தார்கள். மிஸ். லிலி தன் புகைப் படங்களில் ஒன்றை ஞாபகமாய்க் கொடுத்தாள். அவளிடமும் விடைபெற்றுக்கொண்டு குறித்த காலத்தில் கப்பல் ஏறினான்.

பம்பாய்த் துறைமுகத்தில் பாலகிருஷ்ணன் வந்திறங்குவதைப் பார்ப்பதற்காக டாக்டர் நரசிம்மலு நாயுடு, மரகத

வல்லி, பத்மாவதி அம்மாள், ஜமீன்தார் அழகிரிசாமி நாயக்கர் ஆகிய நால்வரும் வந்துசேர்ந்தார்கள். பம்பாய் நகரின் அழகைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையால் அவர்கள் ஒரு தினத்துக்குமுன்பே வந்து அப்பட்டணத்தின் சாக்ஷிகளைப் பார்த்தார்கள். சீமைக்கப்பல் துறைமுகத்தில் வந்து நின்றதும் பாலகிருஷ்ணன் அதினின்றும் இறங்கி வந்து முதலில் தன் அன்னையையும் மாமனையும் நமஸ்கரித்தான். ஜமீன்தாரையும் வணங்கினபின், மரகதவல்லியைத் தழுவிக்கொண்டான். ஐவருமாகச் சென்னைக்கு வந்துசேர்ந்தார்கள். பாலகிருஷ்ணன் மரகதவல்லியுடன் தான் சீமையில் இருந்தபொழுது நடந்த சம்பவங்களையும் அதிசயங்களையும்சொல்லி வேடிக்கையாய்ப்பேசிக்கொண்டே வந்தான்.

தன் மகன் சௌக்கியமாய்த் திரும்பிவந்ததை முன்னிட்டு பத்மாவதி அம்மாள் திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப்பெருமாளுக்கு அன்றிரவு விசேஷ அர்ச்சனைகளும், பூஜைகளும் நடத்தி, ஆலயமுழுவதும் நெய்விளக்கேற்றினாள். கப்பலில்வந்த சிரமம் நீங்குவதற்காக, பாலகிருஷ்ணன் ஒருவாரம் வெளியே எங்கும்போகாமல் வீட்டிலேயே இருந்தான்.

ஒருநாள் சாயங்காலம் டாக்டர் நாயுடுவும் பாலகிருஷ்ணனும் சென்னை கவர்னர் துரையவர்களைப் பார்க்கப் போனார்கள். கவர்னர் இருவரையும் அன்போடு வரவேற்று பேசிக்கொண்டிருந்தபொழுது பாலகிருஷ்ணனைப் பார்த்து "கடப்பை ஜில்லாக் கலெக்டர் மிஸ்டர் கால்ட்வெல் அடுத்த மாசம் முதல் பர்லோவில் (Furlough) தன் சொந்த தேசம் போகிறார். அவருடைய ஸ்தானத்தில் உன்னை ஆக்டிங்

டிஸ்டிரிக் கலெக்டராக நியமித்திருக்கிறேன். கடப்பை தெலுங்கு ஜில்லாவைச்சேர்ந்தது. உனக்குத் தெலுங்கு தாய்ப்பாஷையாகையால் உன்னையே அந்த வேலைக்கு சிபார்சு செய்திருக்கிறது. கூடியசீக்கிரம் உனக்கு உத்தரவு கிடைக்கும். ஆபீஸ் உத்தியோகஸ்தர்களுடன் ஒற்றுமையாய் இருந்து ஒழுங்காய் வேலை பார்ப்பாய் என்று நம்புகிறேன். கடப்பை அவ்வளவு நாகரீகமான ஜில்லாவல்ல. நீ அங்கே அநேக சீர்திருத்தங்கள் செய்யவேண்டியதாயிருக்கும்" என்றார். பாலகிருஷ்ணன் "நான் வேலைக்குப் புதியவனாயிருந்தபோதிலும் தங்கள் ஆசீர்வாதத்தால் கூடியமட்டும் விசுவாசத்தோடு வேலைசெய்வேன்" என்று பதிலளித்தான். அதன் பின்பு இருவரும் கவர்னர் துரையிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினார்கள். டாக்டர் நாயுடு தன் மருமகனுக்கு ஆரம்பத்திலேயே ஜில்லாக் கலெக்டர் வேலை கிடைத்ததற்காக அதிக சந்தோஷம் அடைந்தார். பாலகிருஷ்ணன் சர்க்கார் உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

மிஸ்டர் கால்ட்வெல் என்பவர் கடப்பை ஜில்லாவில் ஐந்து வருஷகாலமாய் கலெக்டர் உத்யோகம் பார்த்துவந்தார். இவரைப்போன்ற யோக்கியராயுள்ள உத்யோகஸ்தரைத் தற்காலத்தில் காண்பதரிது. வேலை விஷயத்தில் வெகு கண்டிப்புள்ளவர். சத்தியத்துக்கு அஞ்சியும் தெய்வத்துக்கு பயந்தும் உண்மையோடு உழைப்பவர்களிடம் இவருக்கு அதிகப் பிரியம். பொய் சொல்லுதல், இலஞ்சம் வாங்குதல் என்னும் குணங்களையுடைய அநேக தாசில்தார்களையும் சப்மாஜிஸ்திரேட்டுகளையும் இவர் தன் காலத்தில் சீட்டுக்கொடுத்து விட்டுக்கனுப்பிவிட்டார். இவருக்கு ஞாபகசக்தி அதிகம். தன் ஜில்லாவில் ஒரு சிறு கிராமத்

தில் வேலைபார்க்கும் கிராம முனிசீப், கர்ணம் முதலியவர்களின் பெயர்முதல் இவருக்கு ஞாபகம் உண்டு. இவர் கிராமங்களைச் சுற்றிப்பார்க்க வருகிறாரென்றால் அங்குள்ள அதிகாரிகளுக்கு சிம்ம சொப்பனந்தான். இத்தனை கண்டிப்போடு இவரிடம் தயாளம், இரக்கம், அன்பு, அஹிம்சை முதலிய சிறந்த குணங்களும் குடிகொண்டிருந்தன. உத்யோகசாலையில் தன் குமாஸ்தாக்களிடம் குற்றமிருந்தால் கடுமையான சொற்கள் வழங்குவார். ஆனால் கால்ரூபாய் கூட அபராதம் விதிக்க அவருக்கு மனம் வராது. முதுகில் அடிப்பாரேயொழிய வயிற்றில் அடிக்கும் வழக்கமில்லை. உத்யோக தோரணையில் சிங்கம்போல் கர்ஜிப்பார். மற்ற சமயங்களில் தன்னை வந்து பார்ப்பவர்களிடம் தங்கம்போல் பேசுவார். மிஸிஸ். கால்ட்வெலும் இவரைப்போலவே புன்சிரிப்பும் இன்சொல் வழங்கலும் உடையவர். இவர்களுக்கு குழந்தைகள் ஒரு குறையைத் தவிர வேறு குறையில்லை. இவர்கள் இப்பொழுது 18 மாதம் பர்லோவில் சீமைக்குப் போக ஆயத்தமானார்கள். மிஸ்டர் கால்ட்வெல் புறப்படுவதற்கு இரண்டு தினங்களுக்குமுன் கலெக்டர் ஆபீஸ் உத்யோகஸ்தர்கள் இவருடைய பிரிவை முன்னிட்டு இவருக்கு விருந்து அளித்து உபசாரப்பத்திரம் வாசித்தார்கள்.

இதற்கிடையில் பாலகிருஷ்ணனுக்கு கலெக்டர் வேலைக்கு உத்தரவு வந்தது. வேலையை ஒப்புக்கொள்வதற்காகத் தான்மட்டும் முதலில் புறப்பட்டுப் போனான்.

புதிய கலெக்டராக வரும் இந்திய கனவானை வரவேற்பதற்காக அன்று கடப்பா ஸ்டேஷனுக்கு அந்த டவுனில் உள்ள முக்கிய அதிகாரிகளும் நகரபரிபாலனசங்கத் தலைவ

ரும் (Municipal Chairman) டிஸ்டிரிக்ட்போர்ட் பிரசிடெண்ட், தாசில்தார், கலெக்டர் ஆபீஸ் சிரேஸ்தாதார், முதலிய உத்தியோகஸ்தர்களும் வந்து காத்திருந்தார்கள்.

மிஸ்டர் பாலகிருஷ்ண நாயுடு முதல்வகுப்பு வண்டியினின்றும் கீழே இறங்கினவுடன் நகரபரிபாலனசங்கத் தலைவர் மிஸ்டர் நாயுடுவுக்கு வணங்கி கையில் வைத்திருந்த ரோஜாப்புஷ்ப மாலையை அவர் கழுத்தில் போட்டார். எல்லாரும் கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். அதன்பிறகு சேர்மன் தன்னுடைய மோட்டாரில் பாலகிருஷ்ண நாயுடுவை ஏற்றிக்கொண்டு கலெக்டர் ஆபீசுக்குப் போனார். ஸ்டேஷனுக்கு வந்திருந்த ஜனங்கள் யாவரும் தங்கள் தங்கள் வாஹனங்களிலும், கால்நடையாய் நடந்தும் கலெக்டர் ஆபீசுக்குப் போனார்கள். அங்கே வரவேற்பு விழா (Welcome Ceremony) நடைபெற்றது.

ஆபீசுக்குமுன் ஒரு சிறு கொட்டகை போடப்பட்டு வாழை, கமுகு, மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எண்ணிறந்த நாற்காலிகளும் பெஞ்சிகளும் போடப்பெற்றிருந்தன. உத்யோகஸ்தர்களும் நகர ஜனங்களும் கொட்டகையில் வந்து குழுமியவுடன் பாலகிருஷ்ண நாயுடுவை ஒரு அழகிய ஆசனத்தில் அமரச்செய்து முனிசிபல் சேர்மென் சில வார்த்தைகள் பேசினார். அவர் பேசின விஷயமாவது :—

சகோதரர்களே! நமது ஜில்லாவுக்கு இப்பொழுது ஒரு சுதேச கனவான் கலெக்டராக வந்திருப்பது நம்முடைய பாக்கியமும் அதிர்ஷ்டமும் என்றே சொல்லவேண்டும்.

பாம்பறியும் பாம்பின்கால் என்று ஒரு பழமொழியுண்டு. அதைப்போல இந்தியரின் குறைகளும் கஷ்ட நிஷ்டூரியங் களும் இந்தியருக்கே தெரியவரும். மிஸ்டர் நாயுடு அவர் களின் ஆதீனத்தில் இந்த ஜில்லா வாசிகள் அநேக க்ஷேம லாபங்களையும் நன்மைகளையும் பெறுவார்கள் என்பது திண் ணம். மிஸ்டர் நாயுடு எனக்குப் புதியவராய் இருந்தாலும் இவருடைய மாமனாராகிய டாக்டர் நரசிம்மலு நாயுடுவும் நானும் ஒருசாலை மாணாக்கர்கள். நாங்கள் இருவரும் ஆதி யில் கிறிஸ்தவக்கல்லூரியில் பி. ஏ., வகுப்புவரை ஒன்றாகப் படித்தோம். அவன்பின்பு அவர் வைத்தியகல்லூரியில் சேர்ந்துவிட்டார். நான் சட்ட கலாசாலையில் சேர்ந்தேன். எனது அன்பார்ந்த நண்பருடைய மருமகனே இப்பொழுது கலெக்டராக வந்திருப்பதைப்பற்றி எனக்கு அதிக சந்தோ ஷம். அதன்பின் கலெக்டர் ஆபீஸ் சிரஸ்தார் வரவேற்புப் பத்திரம் வாசித்து அதை மிஸ்டர் நாயுடுவின் கையில் கொடுத்தார்.

வரவேற்புப்பத்திரம் வாசித்து முடிந்ததும் மிஸ்டர் நாயுடு சபையோரைப்பார்த்து ஒரு சொற்பொழிவு செய் தார். அவர் பேசியதாவது :—

கனவான்களே! நீங்கள் இன்று எனக்களித்த மரியா தைக்காக நான் என் மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்து கிறேன். நான் இப்பொழுது இந்த ஜில்லாவுக்கு கலெக்ட ராக வந்திருக்கிறேன். அரசனைக் [illegible] ளுடைய கண் என்று சொல்வார்கள். அரசன் [illegible] தன் உயிர் போலக் கருதவேண்டும். தசரத சக்ரவர்த்தியின் அரசியலைப் பற்றிக் கம்பர் வர்ணிக்கும்போது "உயிரெலாம் தாங்கு

மோர் உடம்பும் ஆயினன்." என்றும் தாயொக்கும் அன்பில் என்றும் சிறப்பித்துப்பாடுகிறார். குடிகளும் அரசனிடம் விசுவாசமாய் இருக்கவேண்டும். அரசனைத் தெய்வமாகக் கருதவேண்டும். அரசன் திருமாலின் அவதாரம் என்று புராணங்கள் சாற்றுகின்றன.

"திருவுடை மன்னரைக் கண்டால் திருமாலைக்
கண்டேன் என்பர்."

அரசனுடைய கட்டளைக்கடங்கியே குடிகளும் நடக்கவேண்டும். "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பது ஆன்றோர் வசனம். இது நிற்க ஒரு அரசனுக்குக் குடிகளிடம் எவ்வளவு கடமையும் பொறுப்பும் உண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு. உங்களுடைய உதவியும் ஊக்கமும் இல்லாமல் நான் செய்யும் வேலை பயன்படாது. இதற்குமுன் என் ஸ்தானத்தில் அநேக கனவான்கள் வேலை பார்த்திருக்கிறார்கள். அவர்களுடைய நல்ல பேரை நான் கெடுக்கமாட்டேன் என்று நம்புகிறேன். என்று பேசி முடித்தார். அதன்பிறகு அங்கிருந்தவர்களுக்கெல்லாம் சர்க்கரையும் சந்தன தாம்பூலமும் வழங்கப்பட்டது. அத்துடன் சபை கலைந்தது. பாலகிருஷ்ண நாயுடு தனக்கேற்பட்டிருந்த பங்களாவிற்குப் போய்விட்டார்.

பாலகிருஷ்ணன் வேலையை ஒப்புக்கொண்டு ஒருவாரத்துக்குப்பின் தன் தாய் பத்மாவதி அம்மாளையும், மனைவி மரகதவல்லியையும் தன்னிடம் வரவழைத்தான். கிராமங்களைச் சுற்றிப்பார்க்கப்போகும் காலங்களில் இவர்களையும் கூட அழைத்துக்கொண்டுபோவான். பாலகிருஷ்ண நாயுடு

கலெக்டர் உத்யோகம்செய்த மாதிரியைப்பற்றி இங்கே கொஞ்சம் சொல்லவேண்டுவது அத்தியாவசியம். சிலபெரிய உத்யோகஸ்தர்கள் வேலைபார்க்கும் விதம் வெகு அற்புதமாயிருக்கும். கிளார்க்குகளும், பியூன்களும் தங்கள் கொண்டு வந்து நீட்டும் காயிதங்களில் கையெழுத்துப் போடுவதுதான் தங்கள் கடமையென்று எண்ணுகிறார்கள். காகிதத்தில் எழுதியிருக்கும் சமாசாரத்தை வாசித்து பார்ப்பதற்குக்கூட சோம்பல். மாசத்துக்கு ஒருமுறை இருமுறை உத்யோக சாலைக்குப் போவதுகூட அபூர்வம். பங்களாவில் இருந்து கொண்டு வேலைக்காரர்களைத் தூதனுப்புவது வழக்கம். அதிகாரி இவ்விதம் இருந்தால் அவரிடம் வேலைசெய்யும் குமாஸ்தாக்கள் பாடு கொண்டாட்டந்தான். தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்ற பழமொழியைப்போல காலை 10 மணிக்குப்பதிலாக 12 மணிக்கு மேல் ஆபீசுக்குப்போவதும் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு நாவல்களைப் படிப்பதும், இன்னும் சிலர், மயில் தன் தோகையை விரிப்பதுபோல தங்கள் கூந்தலை விரித்து சிக்கெடுத்துக்கொண்டும், தமாஷாய் வெற்றிலை போட்டுக் கொண்டும் பொழுதுபோக்கிவிட்டு மாலை 5 மணிக்குள் வெளிக்கிளம்புகிறார்கள்.

ஆனால் மிஸ்டர் பாலகிருஷ்ண நாயுடு வெளியூர்க் கிராமங்களுக்குப் போகாத நாட்களில் பத்து மணி அடித்தவுடன் ஆபீசுக்கு வந்துவிடுவார். தினந்தோறும் வரும் தபாலைத் தானே உடைத்துப்பார்த்துப் பதில் எழுதி அதன்பின்பு குமாஸ்தாக்களிடம் அனுப்புவார். குமாஸ்தாக்கள் தூங்குகிறார்களா அல்லது வேலைசெய்கிறார்களாவென்று அடிக்கடி

சுற்றிப்பார்ப்பார். மாலை 5 மணிக்குமேல் ஆபீஸ் உத்யோகஸ்தர்களுடன் பந்தாடிவிட்டு அதன்பின்பு பங்களாவுக்குப் போவார்.

கடப்பை ஜில்லாவில் உள்ள ஜனங்கள் கல்வியிலாவது நாகரீகத்திலாவது அவ்வளவு தேர்ந்தவர்கள் அல்ல. பெண்களின் முன்னேற்றத்தைக் கருதி மரகதவல்லி ஒரு சங்கம் ஏற்படுத்தினாள். பெண்களின் அபிவிர்த்தி சங்கம் (Women Development Society) என்று அதற்குப்பெயர். அந்த சங்கத்துக்கு அவளே தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். அநேக பெரிய உத்யோகஸ்தர்களின் மனைவிமாரும் அச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தார்கள். அத்துடன் மரகதவல்லி ஜில்லாக்கல்விச் சபையிலும் (District Educational Council) ஒரு மெம்பராகவிருந்து பெண்களின் கல்விக்காக மிகவும் உழைத்தாள்.

இங்ஙனம் இவ்வாறிருக்க லண்டன் நகரில் இருந்து மிஸ்டர் ஹெர்பர்ட் பிரபு இந்தியாவைச்சுற்றிப் பார்ப்பதற்காகத் தன் மனைவியுடனும் குமாரத்தியுடனும், புறப்பட்டு, பம்பாய் கல்கத்தா முதலிய நகரங்களையும் வட இந்தியாவில் உள்ள இதர மாகாணங்களையும் பார்த்துவிட்டு, சென்னைமாநகருக்கு வந்தார். பாலகிருஷ்ண நாயுடு கடப்பை ஜில்லாவில் கலெக்டர் வேலைப்பார்க்கும் சங்கதியைக் கவர்னர் மூலமாய் தெரிந்து கடப்பை டவுனுக்கு வந்துசேர்ந்தார். பாலகிருஷ்ணன் ஸ்டேஷனுக்குப்போய்க் காத்திருந்து அவரையும் அவர் குடும்பத்தையும் அன்போடும் மரியாதையோடும் வரவேற்றுத் தன் பங்களாவிற்குக் கூட்டிக்கொண்டுவந்தார். அவருடைய வருகைக்காக ஒரு பெரிய விருந்து நடத்தினார்.

டவுணில் உள்ள பிரபல உத்யோகஸ்தர்களையும் சீமான் களையும் விருந்துக்கு அழைத்து மிஸ்டர் ஹெர்பர்ட்டுக்கு அறிமுகமாக்கினார். விருந்து முடிந்தவுடன் சங்கீதக் கச்சேரி யும் வாணவேடிக்கையும் இராத்திரி வெகுநேரம்வரை நடை பெற்றது.

இந்தியருடைய நடையுடை பாவனைகளைப் பற்றியும் இந்தியாவில் தான் கண்ட காட்சி விநோதங்களைப்பற்றியும் மிஸ்டர் ஹெர்பர்ட் ஒரு நோட்புஸ்தகத்தில் குறிப்புகள் எழு திக்கொண்டே வந்திருந்தார். விருந்தும் வேடிக்கையும் முடிவுபெற்றவுடன் மிஸ்டர் ஹெர்பர்ட் ஜனங்களைப் பார்த்து ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அவர் சொன்ன விஷயங் கள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

கனவான்களே! இந்தியாவில் உத்யோகம் செய்து உப காரச் சம்பளத்துடன் சீமைக்குத் திரும்பும் அநேக ஆங்கி லேயர்களிடம் நான் இந்தியாவைப்பற்றியும், இந்தியரைப் பற்றியும் கேட்பதுண்டு. அவர்கள் எல்லாரும் இந்தியரைக் குறித்துத் தாழ்மையாகவே பேசினார்கள். இந்தியரைப் பற்றி அவர்கள் கொண்ட அபிப்பிராயம் முற்றிலும் பிசகு என்பதை நான் இப்பொழுது என் சிறு பிரயாணத்தில் நேரில் கண்டறிகிறேன். நான் இங்கே சொற்பகாலம் இந் தியருடன் பேசிப் பழகினமட்டும் அவர்கள் இயற்கையில் பெருந்தன்மையான குணம் வாய்ந்தவர்களென்றும் தங்கள் தேசத்தைச் சுயமாக ஆட்சிபுரிய அருகர் என்றும் நான் நம்புகிறேன். இவர்களிடம் இராஜ பக்தி மிகுந்திருப்பதைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். புராதன ஆலயங்கள், கட்டிடங்கள் முதலானவற்றை நான் பார்வையிட்ட காலத்

தில் இத்தேசம் ஆதிகாலத்தில் சிற்ப சாஸ்திரத்தில் தலை சிறந்து விளங்கியிருந்ததென்பது விளங்குகிறது. கல்வி, வாணிபம், நாகரீகம் என்ற ஒவ்வொரு துறையிலும் இந்நாடு மேம்பட்டிருப்பதைப் பார்க்க எனக்கு மெத்த சந்தோஷம்.

இந்தவிதமாக மிஸ்டர் ஹெர்பர்ட் பிரபு பேசிமுடித்தார். அடுத்த நாள் அட்டவுணில் உள்ள முனிசிபல் ஆபீஸ், ஆஸ்பத்திரி, ஹைஸ்கூல் முதலியவைகளைப் பார்வையிட்ட பின் சென்னைக்கு புறப்பட்டார்.

பாலகிருஷ்ணன் கடப்பைக்கு வந்து ஒரு வருஷத்திற்குப்பிறகு மரகதவல்லிக்கு ஆண் குழந்தை பிறந்தது. சென்னையிலிருந்து டாக்டர் நரசிம்மலு நாயுடுவும் கமலவல்லியும் வந்திருந்து புத்திரோற்சவத்தைக் கொண்டாடி சிறப்பித்தார்கள்.

டாக்டர் நரசிம்மலு நாயுடு தனக்கு அந்தியகாலம் நெருங்கிவிட்டதை எண்ணி தனக்கு வேறு ஆண் குழந்தைகள் இல்லாமையால் ஐம்பதினாயிரம் ரூபாய் பெருமான தன் ஆஸ்தி முழுவதையும் தன் பௌத்திரனுக்கு (மரகதவல்லியின் மகன்) சாசனம் (Will) எழுதிவைத்து அக்குழந்தை மேஜராகும்வரை கமலவல்லியைக் கார்டியனாக நியமித்து எழுதினார். கொஞ்சகாலத்திற்குப் பிறகு வியாதியால் மரணமடைந்தார். இச்சம்பவம் நடந்த இரண்டு வருஷங்கள் கழிந்து மிஸ்டர் பாலகிருஷ்ணன், கடப்பாவிலிருந்து மதுரை, இராமநாதபுரம் முதலிய ஜில்லாக்களுக்கு மாற்றப்பட்டு, கடைசியாக ரெவினியூபோர்ட் மெம்பர் உத்யோகம் கிடைக்கப்பெற்று சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

சிலவருஷங்களுக்குப்பின் மரகதவல்லி இரண்டு பெண் குழந்தைகளை ஈன்றாள். டாக்டருடைய பங்களாவாகிய கமலவிலாசில் எல்லாரும் இருந்துவந்தார்கள். கமலவல்லி அம்பாள் மட்டும் சிலகாலம் சென்னையிலும் சிலகாலம் தன் பிறந்தகமாகிய அரியலூர் அரண்மனையிலும் இருந்துவந்தாள். ஜமீன்தார் அழகிரிசாமி நாயுடு, தன் சகோதரியை அன்னைபோல் கருதி பயபக்தியுடன் இருந்துவந்தார். காலக்கிரமத்தில் ஜமீன்தாருக்கும் புத்திர சந்தானம் உண்டாகி பாலகிருஷ்ணன் குடும்பமும், ஜமீன்தாரின் குடும்பமும் ஒற்றுமையாய் வாழ்ந்து, தங்களுக்குள் சம்பந்தமும் செய்து கொண்டு சுகமாய் இருந்தார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக."

அய்யனர் பிரஸ், எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி.